ஸ்ரீ தமிழ்
உண்மை நின்றிட வேண்டும்

**ஆசிரியர் – பதிப்பாளர் :**
இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**
வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**
நா. பாஸ்கரன்
சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**
ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**
இல. ஸ்ரீராம்
த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**
ஸ்ரீ தமிழ்
77/6, 10வது அவென்யூ,
அசோக்நகர்,
சென்னை –600 083

70102 81932

http://www.shreetv.tv
facebook.com/shreetv
x.com/Shreetv media
youtube com/ShreeTV
shreemedia.news@gmail.com

Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!

**தனி பிரதி: ரூ 30/–**
**ஆண்டு சந்தா: ரூ 600/–**

# அயோத்தி இராமர் கோயில் கொடியேற்றம் – தெரிந்த செய்தி, அறிவுறுத்தும் கடமை

அயோத்தி இராமர் கோவில் பணிகள் முழுவதுமாக நிறைவடைந்த அறிவிப்பை பாரதப் பிரதமர் கோயிலில் கொடியேற்றி ஆன்மீக வைபவமாகக் கொண்டாடினார். 500 ஆண்டுகால அடிமைத்தனத்திலிருந்து விடுதலை, இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கனவு நிறைவேறியது. இஸ்லாமியர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட சம்பவங்கள் வரலாற்றில் அரிது! அந்த அடிப்படையில் இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு இது என்று இராமர் கோவில் நிர்மாணத்தின் பரிமாணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்! இது வரலாறு மட்டுமல்ல, வர இருக்கும் நற்காலத்தின் தொடக்கம் என்பதை பிரதமர் மோடி அவர்கள் ஏற்றிய கொடியிலிருந்து அறியலாம். பிரதமர் மோடி அவர்கள் ஏற்றிய காவிக் கொடியில் ஓம், கோவிதார மரம் (சிங்கப்பு மந்தாரம்) மற்றும் சூரியனின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இதன் சூட்சமம் என்ன?

ஓம் என்பது நித்திய ஆன்மீக நாதத்தையும் பிரபஞ்ச அதிர்வையும் குறிக்கிறது. சூரியக் குறியீடு, பகவான் இராமரின் சூரியவம்சப் பரம்பரையைச் சுட்டிக்காட்டி, தெய்வீக சக்தியை அழைக்கிறது. மாந்தார் மற்றும் பாரிஜாதத்தின் இணைப்பாக ரிஷி கஷ்யபர் உருவாக்கியதாக நம்பப்படும் கோவிதார அதாவது சிங்கப்பு மந்தார மரம், பண்டைய அறிவையும் புனித மரபுகளின் தொடர்ச்சியையும் குறிக்கிறது. இந்தக் கொடி ஏற்றப்பட்ட இராமர் ஆலயத்தின் முதல் தளத்தில் இராம் தர்பார் அதாவது இராமரின் சபை என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவே வருங்கால பாரதத்தின் பாதை! அது இராம இராஜ்யம் என்பதை பிரதமர் அறிவித்து விட்டார். அது என்ன இராம இராஜ்யம்? வால்மீகி விவரிக்கிறார்!

புலம்பும் விதவைகள் இல்லை; மிருகங்களிடமிருந்து ஆபத்து இல்லை; நோய் பயம் இல்லை; திருடர்கள், கொள்ளையர்கள் இல்லை; யாரும் தம்மைத் தாழ்வாக நினைக்கவில்லை; மூத்தவர்கள் இளையோருக்கு ஈமச் சடங்குகள் செய்யவில்லை; அனைத்து உயிரினங்களும் மகிழ்ச்சியாய் இருந்தன; அனைவரும் தர்மத்தில் உறுதியாய் இருந்தனர்; மரங்கள் பூக்களையும்,கனிகளையும், இலைகளையும் பூச்சிகளின் சேதமில்லாமல் முறையாகத் தந்தன; மேகங்கள் காலத்திற்கேற்றபடி மழை பொழிந்தன; காற்று இதமாக வீசியது; மக்கள் தாங்கள் செய்யும் பணியில் திருப்தியுடன், பேராசையின்றி வாழ்ந்தனர்; மக்கள் தர்மத்தில் நிலைத்து பொய்யுரையாமல் வாழ்ந்தனர்; அனைவரும் சிறந்த குணங்களால் அலங்கரிக்கப்பட்டவர்களாய் இருந்தனர்; அனைவரும் நன்மையை நோக்கிச் செயல்பட்டனர்.

இப்படிப்பட்ட உன்னத பாரதத்தைப் படைத்து, உலகை வழி நடத்த பாரதம் தயாராகிவிட்டது என்ற அறிவிப்பை பாரதம் உலகுக்கு அறிவித்த நிகழ்வே இந்த இராமர் கோவில் கொடியேற்ற வைபவம். பாரதம் வல்லரசானால் இந்த அடிப்படையில் பாரதம் உலகை வழி நடத்தும் என்ற திடமான செய்தியும் இந்த நிகழ்வில் பொதிந்துள்ளது. இராமர் கோவில் கொடியேற்ற நிகழ்வு ஆன்மிக விழாவாக இருந்தாலும், ஒரு தர்ம யுத்தத்திற்கான அழைப்பு. நம் நாடு பயணிக்க வேண்டிய திசை, உலகின் குருவாக பாரதம் விஸ்வ ரூபம் எடுத்து, உலகை நல் வழிப்படுத்த வேண்டிய கடமை ஆகியவற்றை அறிவுறுத்தும் விழா என்றே சொல்லலாம்! **ஜெய் ஸ்ரீ ராம்** !



# ஆளுநர், ஜனாதிபதி செயல்பாடுகளில் நீதிமன்றம் தலையிட முடியுமா? முடியாது! உச்ச நீதிமன்றம் திட்டவட்டம்

**- அருண்பிரபு**

கடந்த ஏப்ரலில் தமிழக அரசு தொடர்ந்த வழக்கு ஒன்றில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் பர்திவாலா - மஹாதேவன் அடங்கிய இருவர் அமர்வு மிகை அதிகார வெளிப்பாடாக ஒரு தீர்ப்பை வழங்கியது. அதாவது ஆளுநர் ஒரு மசோதாவை

1.ஒரு மாதத்துக்குள் ஒப்புதல் கொடுக்க வேண்டும். காரணம் காட்டாமல் காலம் தாமதித்தால் நீதிமன்றம் கருதப்பட்ட ஒப்புதலை வழங்கும்.

2.ஒப்புதல் தராத பட்சத்தில் காரணம் சொல்லித் திருப்பி அனுப்ப வேண்டும்.

3.மீண்டும் மந்திரிசபை மசோதாவை அனுப்பினால் ஒப்புதல் தர வேண்டும் அல்லது ஜனாதிபதிக்கு அனுப்பலாம்.

**ஜனாதிபதி என்ன செய்யவேண்டும்?**

1. 3 மாதங்களுக்குள் ஒப்புதல் தரவேண்டும்.

2. கேள்விகளுடன் திருப்பி அனுப்பலாம்.

3. உச்சநீதிமன்றத்திடம் தேவைப்படி அறிவுரை கேட்டு முடிவெடுக்க வேண்டும்.

ஜனாதிபதி சட்ட மசோதா முடிவுகளில் உச்சநீதிமன்றத்தின் அறிவுரைப் படியே செயல்படவேண்டும்.

இப்படி அதிகார மிகையான தீர்ப்பை இருவர் அமர்வு அளித்தது. பிறகு நீதிபதிகள் பர்திவாலாவும், மஹாதேவனும் ஜனாதிபதிக்கு உத்தரவெல்லாம் போடவில்லை ஆலோசனை தான் சொன்னோம் என்று கூறினார்கள். ஆனால் தீர்ப்பின் குணாதிசயங்கள் "ஆளுநர்/ஜனாதிபதி இருவரும் நீதிமன்றத்துக்குக் கட்டுப்பட்டவர்கள்" என்ற ரீதியில்தான் இருக்கிறது என்று பல சட்ட நிபுணர்கள் அதிர்ச்சி தெரிவித்தனர். திராவிடக் குஞ்சுகள் கூத்தாடின.

மத்திய அரசோ, ஆளுநரோ மேல் முறையீடு, மதிப்பாய்வு என்று நீதிமன்றத்தை அணுகுவர் என்று காத்திருந்த பலருக்கும் அதிர்ச்சி தரும் விதமாக ஜனாதிபதி அவர்கள் உச்சநீதிமன்றத்துக்கு 14 கேள்விகளைக் கேட்டார்.

**அவை:**

**1.சாசனப்பிரிவு 200ன் கீழ் ஆளுநருக்கு ஒரு மசோதா அனுப்பப்பட்டால் அவருக்கான தேர்வுரிமைகள் என்னென்ன?**

அனுமதிக்கலாம். 2. கேள்விகளுடன் திருப்பி அனுப்பலாம். 3. ஜனாதிபதியின் கருத்துக்காக நிறுத்தி வைக்கலாம் 4. காலவரையற்ற நிறுத்தி வைப்பு என்பது இல்லை.

**2.சாசனப்பிரிவு 200ன் படி ஆளுநர் மசோதா ஒப்புதல் உள்ளிட்ட செயல்களுக்கு அமைச்சரவையின் ஆலோசனை/சகாயத்தின் பேரில் மட்டுமே செயல்படவேண்டுமா?**

ஆளுநர் மசோதா ஒப்புதல்களுக்கு விருப்புரிமை உடையவர். அமைச்சரவையின் ஆலோசனை/சகாயம் அவரைக் கட்டுப்படுத்தாது.

**3.சாசனப்பிரிவு 200ன் படி ஆளுநரின் செயல்பாடுகள் நீதி விசாரணைக்கு/ஆய்வுக்கு உட்பட்டவையா?**

ஆளுநரின் செயல்பாடுகள் நீதி விசாரணைக்கோ ஆய்வுக்கோ உட்பட்டவையல்ல. காரணம் சொல்லாமல், காலவரையின்றி, நீடிக்கும் தாமதங்களுக்கு நீதிமன்றம் ஒரு வரையறைக்குட்பட்ட வழிகாட்டுதல் உத்தரவு கொடுத்து ஆளுநரை முடிவெடுக்கக் கோரலாம்.

**4.சாசனப்பிரிவு 200ன் படி ஆளுநரின் செயல்பாடுகளுக்கும் செயல்படாமைக்கும், சாசனப் பிரிவு 361ன் கீழ் அனைத்து நீதிமன்ற ஆய்வுகளில் இருந்தும் முழுமையான விதிவிலக்கு உள்ளதா?**

சாசனப்பிரிவு 361ன் படி ஆளுநருக்கான விதிவிலக்கு நீண்ட காலத் தாமதங்களின் போது நீதிமன்றம் வரையறைக்குட்பட்ட வழிகாட்டும் கட்டளை பிறப்பிப்பதைத் தடுக்காது.

**5.சாசனப்பிரிவு 200ன் படி ஆளுநர் மசோதா ஒப்புதல்களுக்கு நேரக் கட்டுப்பாடு அரசியல் சாசனத்தில் இல்லாத நிலையில் நீதிமன்றம் அத்தகைய கட்டுப்பாட்டை விதிக்க முடியுமா?**

ஆளுநருக்கு மசோதாக்கள் மீது முடிவெடுக்க காலவரையறை நிர்ணயிக்க நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை.

**6.சாசனப்பிரிவு 201ன் கீழ் ஜனாதிபதியின் விருப்புரிமை சார்ந்த செயல்பாடுகள் நீதிமன்ற ஆய்வுக்கோ விசாரணைக்கோ உட்பட்டவையா?**

ஜனாதிபதியின் செயல்பாடுகள் நீதி விசாரணைக்கு/ஆய்வுக்கு உட்பட்டவை அல்ல. நீதிமன்றத்துக்கு அந்த அதிகாரமில்லை.

**7.சாசனப்பிரிவு 201ன் கீழ் ஜனாதிபதியின் செயல்பாடுகளுக்கு நேரக் கட்டுப்பாடு அரசியல் சாசனத்தில் இல்லாத நிலையில் நீதிமன்றம் அத்தகைய கட்டுப்பாட்டை விதிக்க முடியுமா?**

ஜனாதிபதியின் செயல்பாடுகள், முடிவுகளுக்கு காலவரையறை நிர்ணயிக்க நீதிமன்றத்துககு அதிகாரமில்லை.

**8.சாசனப்பிரிவு 143ன்படி ஜனாதிபதி தனக்கு ஆளுநர்கள் அனுப்பி வைக்கும் ஒவ்வொரு மசோதாவின் முடிவுக்கும் உச்சநீதிமன்றத்தை ஆலோசனை கேட்டுச் செயல்படவேண்டுமா?**

ஆளுநர் மசோதா ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பினால் ஜனாதிபதி நீதிமன்றத்தின் ஆலோசனை கேட்பது கட்டாயமில்லை. முடிவு ஜனாதிபதியின் விருப்புரிமை மற்றும் அவரது தனிப்பட்ட திருப்தி இவற்றைப் பொறுத்தது.

**9.சாசனப்பிரிவு 200/201ன் கீழ் ஆளுநரோ/ ஜனாதிபதியோ ஒரு மசோதாவின் மீது எடுக்கும் முடிவுகள் பற்றி மசோதாக்கள் சட்டமாகும் முன் நீதிமன்றத்தில் வழக்காடலாமா? அப்படி வழக்குகளை நீதிமன்றங்கள் விசாரணையோ ஆய்வோ செய்யலாமா?**

சட்டமாவதற்கு முன் மசோதாவை நீதிமன்றம் விசாரணையோ ஆய்வோ செய்ய முடியாது. சாசனப்பிரிவு 143ன் கீழ் ஜனாதிபதியோ ஆளுநரோ ஆலோசனை கேட்டால் மசோதாக்களை ஆய்ந்து கருத்துச் சொல்லலாம்.

**10.உச்சநீதிமன்றம் ஆளுநர்/ ஜனாதிபதிக்கு மாற்றாக சாசனப்பிரிவு 142ன் படி செயல்பட முடியுமா?**

சாசனப்பிரிவு 142ன் கீழ் உச்சநீதிமன்றம் ஆளுநர்/ ஜனாதிபதிக்கு மாற்றாகச் செயல்படவோ, அவர்களது பணியை எடுத்துச் செய்யவோ அதிகாரமில்லை.

**11.மாநில மசோதாக்கள் ஆளுநர் ஒப்புதல் இல்லாமல் சட்டமாகுமா? கருதப்பட்ட ஒப்புதல் என்பது சட்டத்தில் அனுமதிக்கப்பட்டதா?**

ஆளுநர் ஒப்புதல் இல்லாமல் ஒரு மசோதா சட்டமாகாது. தாமதம் காரணமாக நீதிமன்றம் கருதப்பட்ட ஒப்புதல் தருவது அரசியல் சாசனத்தில் பிரிவு 142ல் கிடையாது.

**12.ஒரு நீதிமன்ற அமர்வு வழக்கில் முடிவெடுக்கும் முன்பு அரசியல் சாசனக் கேள்விகள் இருப்பதால் 5 நபர் அமர்வுக்கு சாசனப்பிரிவு 145(3)ன் கீழ் அனுப்பவேண்டுமா இல்லையா?**

பதிலளிக்கவில்லை.

**13.சாசனப்பிரிவு 142 என்பது செயல்முறைகள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் மட்டும் தான் அமலாகுமா அல்லது தற்சார்புள்ள அரசியல்சாசனச் செயல்பாடுகளை புறக்கணித்துச் செயல்பட அதிகாரம் தருவதா?**

கேள்விகள் 10,11 இவற்றுக்காகப் பேசும் போது சாசனப்பிரிவு 142 அரசியல் சாசனச் செயல்பாடுகளைப் புறக்கணிக்கவோ, நீதிமன்றம் தன்னகப்படுத்தவோ இயலாது. மற்றபடி கேள்வி மிகவும் விரிவாக இருப்பதால் இந்தச் சூழலில் பதிலளிக்கவில்லை.

**14.சாசனப்பிரிவு 131ன் கீழ் அல்லாமல் மாநில மத்திய விவகாரங்களில் நீதிமன்றத்துக்கான அதிகார வரம்பு என்ன?**

பதிலளிக்கவில்லை.

**நாம் புரிந்து கொள்ளவேண்டியது:**

1. ஆளுநருக்கான விருப்புரிமை/அதிகாரங்களில் உச்சநீதிமன்றம் தலையிட முடியாது. அப்படியே வழக்காடினாலும் வரையறுக்கப்பட்ட உத்தரவு என்று நீதிமன்றம் கோரிக்கை வைக்கலாம். அதுவும் ஆளுநரைக் கட்டுப்படுத்தாது.

2. ஜனாதிபதிக்கும் ஆளுநருக்கும் நீதிமன்றம் உத்தரவு போடவோ காலக்கெடு விதிக்கவோ முடியாது.

3.கருதப்பட்ட ஒப்புதல்என்பதே அரசியல் சாசனச் சட்டத்தில் கிடையாது.

ஆகவே ஆளுநரே The BOSS என்று இதன் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. திராவிடக் குஞ்சுகள் சட்டமேதைகள் அல்ல சட்டப்பேதைகள் என்று இதன் மூலம் நிரூபணமாகிவிட்டது.

# பள்ளியில் அசைவ உணவு திருவிழா

*வீர வேலுநாச்சியார்*

நெல்லை டவுன், பேட்டையில் கிறிஸ்தவ நிர்வாக பள்ளியில் நவம்பர் 14ம் தேதியன்று குழந்தைகள் தினத்தை முன்னிட்டு அசைவ பிரியாணி, சவர்மா உள்ளிட்ட அசைவ உணவுப் பொருட்கள், உணவுச்சந்தை என்ற பெயரில் விற்பனை செய்யப்படவுள்ளது. கடைசி வெள்ளி நாளில் பெரும்பாலும் இந்துக்கள் அசைவ உணவு சாப்பிடுவதில்லை. ஆனால், உணவுத் திருவிழா என்ற பெயரில் அசைவ உணவு வகைகளை முன்னிறுத்தி குழந்தைகள் தினத்தை கொண்டாடுவதாக பள்ளி நிர்வாகம் அறிவித்துள்ளது. இதனால் சைவ உணவு மட்டுமே சாப்பிடும் குழந்தைகள் பாதிப்புக்கு உள்ளான நிலையில் பெற்றோர்கள் இந்து முன்னணி அமைப்பின் உதவியை நாடியுள்ளனர். உடனடியாக இந்து முன்னணி அமைப்பின் நிர்வாகி திரு. குற்றாலநாதன் அவர்கள் பள்ளியைத் தொடர்பு கொண்டு கண்டனத்தை பதிவு செய்த நிலையில் இந்த நிகழ்வு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் திரு குற்றாலநாதன் அவர்கள் இது குறித்து கூறுகையில் இந்தப் பள்ளியில் மட்டுமல்ல இங்கு சுற்று வட்டாரத்தில் உள்ள அனைத்து கிறிஸ்தவ பள்ளிகளில் மட்டுமல்லாமல் அரசு பள்ளியிலும் கூட அசைவ உணவு திருவிழா நடத்தியுள்ளார்கள் என்று கூறினார்.

இதே போன்ற நிகழ்வு தமிழகத்தில் மட்டுமல்லாமல் குஜராத்தில் ஒரு அரசுப்பள்ளியிலும் நடந்தேறியுள்ளது.

நம் நாட்டில் வெள்ளைகாரன் காலத்திலிருந்து நம் உணவு பழக்க வழக்கங்களை மாற்றும் யுத்தி என்பது நடந்து கொண்டு தான் இருக்கிறது. மாணவர்கள் மேல் உணவு திணிப்பை தானே கிறிஸ்தவர்கள் நடத்தியுள்ளார்கள். என் தட்டில் என்ன உணவு இருக்க வேண்டும் என்பதை நான் முடிவு செய்ய வேண்டும் என்று வாய்கிழிய பேசியவர்கள் யாரும் இப்பொழுது இதற்காக குரல் கொடுக்கவில்லை. அசைவம் சாப்பிடும் ஹிந்துக்கள் கூட வெள்ளிக்கிழமையன்று அசைவம் சாப்பிட மாட்டார்கள் அப்படி இருக்கும் நிலையில் கடைசி வெள்ளி, அதுவும் சைவம் மட்டுமே சாப்பிடும் மாணவர்கள் அதிகமிருக்கும் பள்ளியில் இது போன்ற அசைவ உணவு திருவிழாவை கிறிஸ்தவ நிர்வாகம் நடத்த முற்படுகிறது என்றால் இது திட்டமிட்ட சதி தானே! ஒன்று ஹிந்துகள் மனதை புண்படுத்துவது இன்னொன்று திட்டமிட்டு உணவு பழக்க வழக்கத்தை மாற்றும் சதியின் ஒரு அங்கமே! இப்படிப்பட்ட அசைவ உணவு திருவிழாக்கள் தமிழகம் மட்டுமல்லாமல் குஜராத்திலும் நடந்திருக்கிறது என்பதை பார்க்கும் போது இது இந்த சதியின் அங்கம் தான் என்பதை உறுதிபடுத்துகிறது.

**கடைசி வெள்ளி, அதுவும் சைவம் மட்டுமே சாப்பிடும் மாணவர்கள் அதிகமிருக்கும் பள்ளியில் இது போன்ற அசைவ உணவு திருவிழாவை கிறிஸ்தவ நிர்வாகம் நடத்த முற்படுகிறது என்றால் இது திட்டமிட்ட சதி தானே!**

ஏற்கனவே சவர்மா உணவை சாப்பிட்டு பலர் பலியான நிலையில் மாணவர்களுக்கு இந்த உணவினால் பாதிப்பு ஏற்பட்டால் யார் பொறுப்பேற்பார்கள்? ஹிந்துக்கள் கோவில் திருவிழா சமயத்தில் அன்னதானம் செய்வதற்கு ஏகப்பட்ட கட்டுப்பாடுகளை விதிக்கும் அரசு இப்படி மாணவர்களுக்கு ஆபத்தான உணவுகளை வழங்குவதற்கு முன் உணவு பாதுகாப்புத் துறையிடம் அனுமதி வாங்க வேண்டும் என்ற நிபந்தனையை ஏன் விதிக்கவில்லை? பள்ளிகளில் நடத்தக்கூடிய நிகழ்வுகளுக்கு எங்களிடம் அனுமதி பெற வேண்டும் என்று கூறும் அரசு இதை ஏன் கண்டிக்கவில்லை? குருவை வணங்கி போற்றும் நம் பண்பாட்டை ஒட்டி ஆசிரியர்களுக்கு மாணவர்கள் பாத பூஜை செய்யும் நிகழ்வை நடத்திய தனியார் பள்ளி மீது விசாரணை நடத்துவோம் என்று கிளம்பிய அமைச்சர் அன்பில் பொய்யாமொழி இந்நிகழ்வு குறித்து மௌனம் காப்பது ஏன்? கிறிஸ்தவர்கள் என்றால் அது அவர் ஏரியாவில் வராது போலும்.

உடனடியாக பள்ளி கல்வித்துறை இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# அற்புதத் திருவிழா நடத்துவது திமுக

## திராவிடப் பகுத்தறிவுக்குப் பெப்பே!!




- தமிழ்நேசன்

கி.வீரமணி என்ற ஈவெரா கொபசெ, ரங்கராஜ் பாண்டேக்குப் பேட்டி தந்த போது ஒவ்வொரு ஈவெரா சிலைக்கும் கீழே எழுதப்பட்டிருக்கும் கடவுள் இல்லை என்ற சொல் எல்லா மதங்களுக்கும் பொருந்தும் என்றார். ஜீசஸ் இல்லை என்று சொல்வீர்களா என்ற கேள்விக்கு எழுதப்பட்டிருப்பதன் அர்த்தமே அதுதானே என்று பம்மினார். அப்படி இல்லை என்று ஈவெரா சொன்னதாக இவர்கள் சொல்லித் திரியும் ஏசுநாதருக்கு அற்புதத் திருவிழா நடக்கிறது தமிழகத்தில். நடத்துவது நாலுமாவடி மோகன் லாசரசோ, தோத்திர கோபுரம் பால் தினகரனோ எஸ்றா சற்குணம் வாரிசு வகையறாக்களோ அல்ல. ஈவெரா வழிவந்ததாகச் சொல்லிக்கொள்ளும் திமுக. அதாகப்பட்டது சநாதனத்தை ஒழிப்போம் என்று பேசிய உதயநிதி இளைஞரணிக்குத் தலைமை ஏற்றிருக்கும் தமிழக ஆளுங்கட்சி இந்த அற்புதத் திருவிழாவைக் கட்சி சார்பாக நடத்துகிறது.

உதயநிதி கிடைக்கும் மேடைகளில் எல்லாம் தாம் கிறிஸ்தவர் என்று பெருமை கொள்வதாக மாரடித்துச் சொல்லும் போதே விரைவில் ஒரு நாள் திமுக மேடையில் ஓடிவருகிறான் உதயசூரியன் பாடலுக்குப் பதிலாக தாசரே இத் தரணியை அன்பால் ஏசுவுக்குச் சொந்தமாக்குவோம் என்ற பாடல் ஒலிக்கும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் இருந்தது. அது இவ்வளவு விரைவில் நடக்கும் என்று நாமும் எதிர்பார்க்கவில்லை. இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் கோடானகோடி நன்றிகளை ஏசப்பாவுக்கு பதிலாக விஜய்ணாவுக்குத் தான் சொல்லவேண்டும்.

**ஏன்? பார்ப்போம்.**

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் ஒரு மாறுதலுக்காக மக்களைப் பனையூருக்கு வரச்சொல்லாமல் நாகப்பட்டிணத்தில் போய்க்கூட்டம் போட்டார். அங்கே வந்த 90% பேர் கிறிஸ்தவர்கள் என்றும் அதில் பலர் விஜய் ஏசுவின் நேரடி ஆசீர்வாதம் பெற்றவர் என்பது போன்ற பதாகைகளை ஏந்தி வந்து ஏசப்பாவின் ஆசிபெற்ற விஜய் என்று கோஷமிட்டிருக்கிறார்கள் என்றும் செய்திகள் வந்தன. உளவுத்துறை இதை ஆட்சி மேலிடத்துக்குச் சொல்லியிருக்கிறது. உஷாரான திமுக மேலிடம் கிறிஸ்தவ முஸ்லிம் வாக்குகள் நமக்குப் பட்டா போட்டதாயிற்றே? எப்படி விஜய் ஆக்கிரமிக்கலாம்? என்று யோசித்ததன் விளைவு 75ஆம் ஆண்டு கொண்டாடி அறிவுத்திருவிழா என்று நடத்திப் புத்தகம் விற்ற திமுக இப்போது அற்புதத்திருவிழா என்று நடத்துகிறது. அதென்ன அற்புதத்திருவிழா?

அமாவாசை தொடங்கிப் புரட்டாசிப் பூசனைகள், திவசம் கொடுப்பது, சர்ச்சுகளில் கொடிமரம், ஏசுவுக்குத் தேரோட்டம் என்று ஏராளமான இந்துமதச் சடங்குகளை ஆட்டையப் போட்ட கிறிஸ்தவம் இப்போது பகுத்தறிவு பேசும் திமுகவைக் குறிவைத்து வெளிப்படையாக நடத்தியிருக்கிற ஆக்கிரமிப்பு.

> **ஏராளமான இந்துமதச் சடங்குகளை ஆட்டையப் போட்ட கிறிஸ்தவம் இப்போது பகுத்தறிவு பேசும் திமுகவைக் குறிவைத்து வெளிப்படையாக நடத்தியிருக்கிற ஆக்கிரமிப்பு.**

மேடைகளில் கடவுள் மறுப்பும் வீடுகளில் கோவில் பிரசாதம் சாப்பிடுவதுமாய் இருக்கும் திமுகவினரை ஓட்டு வேண்டுமா தோத்திரம் சொல் என்று சொல்லாமல் சொல்லியிருக்கிறது கிறிஸ்தவ லாபி. விஜய்ணா கிறிஸ்தவர் அவர் முதல்வரானால் மகிழ்ச்சி என்று சில பாதிரியார்கள் வெளிப்படையாகப் பேட்டி கொடுத்தனர். அதனால் கடுப்பாகிக் கரூர் சம்பவத்தைக் கையிலெடுத்த திமுகவுக்குத் தேவையான ஆதரவில்லை. மாறாகக் கிறிஸ்தவர்கள் கோபம் தான் மிஞ்சியது. இதைத் தடுத்து எப்படி தன் ஓட்டு வங்கி திவாலாகாமல் காப்பாற்றவேண்டும் என்று யோசித்துத் திமுக செய்திருப்பது தான் இந்த அற்புதத் திருவிழா ஜெபக்கூட்டங்கள்.

முன்னாள் சாராய அமைச்சர் செந்தில் பாலாஜி ஆதரவில் நீலகிரி மாவட்ட திட்டக்குழு

உறுப்பினரும் ஊட்டி நகரச் செயலாளருமான ஜார்ஜ் ஏற்பாட்டில் ஊட்டியில் 90ஆயிரம் கிறிஸ்தவர்களைக் கூட்டி வைத்து சிஎஸ்ஐ, கத்தோலிக்கர் உள்ளிட்ட பல பிரபல கிறிஸ்தவ பாதிரியார்களை அழைத்து ஜெபக்கூட்டம் போல, திமுகவில் உள்ள கிறிஸ்தவத் தலைவர்களை வைத்து நடத்தியிருக்கிறார்கள். அதில் கிறிஸ்தவர்களின் பல கோரிக்கைகளை நாங்களாச்சு என்று ஒப்புக்கொண்டார்களாம். வந்தவர்கள் அனைவரும் அகமகிழ்ந்து போய் திமுக போன்றதொரு திருச்சபை உலகிலேயே இல்லை என்ற அளவுக்குப் புளகாங்கிதம் அடைந்துவிட்டார்களாம். அற்புத பெருவிழா என்ற பெயரில் நடந்த இந்நிகழ்ச்சிக்கு, கிறிஸ்துவ மக்களிடம் கிடைத்திருக்கும் ஆதரவு கண்டு தி.மு.க உற்சாகம் அடைந்துள்ளது. கிறிஸ்துமஸ் பண்டிகை வரை இதுபோன்ற அற்புத பெருவிழாக்களை தி.மு.க வில் உள்ள 8 மண்டலங்களிலும் கோலாகலமாக நடத்த முடிவு செய்துள்ளார்களாம். வெளிப்படையாக அண்ணா அறிவாலயத்தை திராவிடத் திருச்சபை என்று அறிவிக்கும் பொன்னாள் என்னாளோ?

நமக்கு ஏதோ கருணாநிதி 2011 தேர்தல் காலத்தில் எஸ்றா சற்குணத்திடம் தோத்திரம்னு சொன்னாத் தெளிவாச் சொல்லுய்யா.... தோத்திருவோம்னு சொல்றாப்புல கொழ கொழன்னு சொல்லாதே என்று சொன்னது நினைவுக்கு வருகிறது. ஏசப்பா பிறவிக் கிறிஸ்தவர் விஜய்ணாவுக்கு ஆதரவு தருகிறாரா அல்லது கல்யாணத்துக்கும் ஓட்டுக்கும் மதம் மாறிய உதய்ணாவுக்கு ஆதரவு தருகிறாரா என்பது 2026 தேர்தல் முடிவுகளில் தெரியும். மக்கள் நலம் கருதி ஏசுநாதர் எண்டிஏவுக்கு ஆதரவு தந்துவிட்டால் என்னவாகும்? என்ற கேள்வியும் இருக்கிறது. பார்க்கலாம்.

# சரண கோஷம் கேட்கவேண்டிய இடத்தில் Down Down கோஷம்

**- கனகம்மாள்**

கார்த்திகை என்றாலே திருவண்ணாமலையும் சபரிமலையும் என்று இந்துக்கள் மனதில் பதிந்து போன ஒன்று. அந்த வகையில் சபரிமலை ஐயப்பனுக்கு உலகம் எங்கும் கோடிக்கணக்கான பக்தர்கள் உள்ளனர். அவர்கள் கார்த்திகை மாதம் கடும் குளிரிலும், நேர்த்தியாக விரதம் இருந்து, ஐயப்பனை தரிசனம் செய்ய வேண்டி கரடு முரடான மலையில் ஆவலுடன் ஏறிச்சென்ற பக்தர்களை கேரள கம்யுனிஸ்ட் அரசாங்கம் மிக அதிகமாகவே வேதனைப்படுத்தி வருவது மிகவும் கவலை அளிக்கிறது.

முதலில் அங்கு வரும் பக்தர்கள் பம்பாவில் குளிக்கக் கூடாது என்பதற்காக வைரஸ் நோய் பரவி வருகிறது என்று செய்தியை பரப்பிவிட்ட கேரள அரசாங்கம், பம்பாவில் பக்தர்கள் இறங்காமல் இருக்க எந்த வித தடுப்பு நடவடிக்கையும் எடுக்கவில்லை. உண்மையாகவே வைரஸ் நோய் பரவினால் அவர்கள் கதி. இத்தனை லட்சம் பக்தர்கள் வருவார்கள் என்று தினம்தோறும் online பதிவு மூலம் கணக்கிட முடிகின்ற இந்த கால கட்டத்தில், online டிக்கெட், spot டிக்கெட் என்று கண்டபடி டிக்கெட்களை வாரி வழங்கியுள்ளது கேரளா அரசு.

ஆனால், வருகின்ற பக்தர்களுக்கு எந்தவிதமான அடிப்படை வசதியும் செய்து தரப்படவில்லை. பம்பாவில் குளித்து வரும் பக்தர்கள் உடை மாற்றுவது கூட காவல்துறையினர் மத்தியில் தான் நடக்கிறது. இதனால் பெண்கள் படும்பாடு பெரும்பாடு. இதையெல்லாம் தாண்டி மலை ஏறி செல்லும் நுழைவு வாயிலில் வரிசையை சரி செய்யாமல் திறமை இருந்தால் தாண்டி போ என்று கும்பல் கும்பலாக பக்தர்களை அனுப்பி குழந்தைகளையும் முதியோர்களையும் நெரிசலில் சிக்க வைக்கின்றனர். அதன்பின் செல்லும் வழியெங்கும் கழிப்பறை உட்பட எந்த விதமான அடிப்படை வசதியும் செய்யபடவில்லை. குழந்தைகளுடன் வரும் பக்தர்கள் நிலையோ தாங்கள் குழந்தைகளை காப்பாற்றி பத்திரமாக திரும்ப அழைத்துச் சென்றால் போதும் என்ற நிலை.

ஆபத்திற்கு, திரும்பி வர முயற்சித்தாலும், வாடகைக்கு கூட ஒரு ஆட்டோவோ, காரோ கண்ணிலேயே படவில்லை. இந்த நிலையினால் பொறுமையிழந்து ஆத்திரப்பட்ட பக்தர்கள் அனைவரும் ஒரு கட்டத்தில் Down Down C.M Down Down போலீஸ் என்று முழக்கமிட்டும், அருகே இருந்த தகர தட்டிகளில் கல்லால் அடித்து ஓசை எழுப்ப அந்த இடமே ரண களமானது. ஒரு வழியாக 11 மணிநேரம் முதல் 15 மணி நேரம் வரை காத்திருந்து 18 படிகள் ஏறினால், நூற்றுக்கணக்கான காவல்துறையினர் அங்கு காரணமே இல்லாமல் நெரிசலை ஏற்படுத்துகின்றனர்.

இப்போதே எந்த ஒரு வசதியும் செய்யாத சபரிமலை கோயில் நிர்வாகம் வரும் மண்டல பூஜை மற்றும் மகரஜோதி ஆகிய நாட்களில் வரும் பக்தர்களை எப்படி சமாளிக்க போகிறதோ தெரியவில்லை. கேரளா கம்யுனிஸ்ட் அரசாங்கம் உண்டியலைத் தவிர வேறு எதையும் கண்டு கொள்வதாக தெரியவில்லை. சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கு அந்த சாமியே இரங்கி (இறங்கி) வந்து வழி காட்டினால்தான் உண்டு.

# மசூதிக்கு மந்திரிக்க வந்த பெண்... ஆசைக்கு இணைங்க மறுப்பு.. கத்திகுத்து..

[redacted]

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே வீரசோழன்பகுதியை சேர்ந்தவர் அப்துல் அஜீஸ். இவர் நரிக்குடி ஜும்மா பள்ளிவாசலில் அஷ்ரத் ஆக பணியாற்றிவருகிறார். இந்நிலையில் நரிக்குடிபகுதியை சேர்ந்த 22 வயது இளம் பெண் ஒருவர் இன்று தனக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் நரிக்குடி ஜும்மா பள்ளிவாசலில் அப்துல் அஜீஸிடம் மந்திரிக்கச் சென்றுள்ளார். அப்போது அந்த இளம் பெண்ணை அப்துல் அஜீஸ் திடீரென பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றுள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த இளம் பெண் கத்தி கூச்சலிட்டுள்ளார். அப்போது அப்துல் அஜீஸ் தான் வைத்திருந்த சிறிய கத்தியை வைத்து கழுத்து கை உள்ளிட்ட இடங்களில் சரமாரியாக குத்தியுள்ளார்.


அந்த இளம் பெண் வலி தாங்க முடியாமல் பள்ளிவாசலில் இருந்து வெளியே வந்து கூச்சலிட்டுள்ளார். அவரது சத்தம் கேட்டு ஓடிவந்த அக்கம் பக்கத்தினர் அப்துல் அஜீஸை மடக்கி பிடித்து நரிக்குடி காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். காயமடைந்த அந்த இளம் பெண் திருச்சுழி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நரிக்குடி காவல் நிலைய போலீசார் அப்துல் அஜீஸைகைது செய்து அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஆனால், இந்த பாலியல் வெறியால் தூண்டடப்பட்ட வன்முறை தொடர்பாக இந்த தொகுதி எம்.எல்.ஏவான அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களோ, திருப்பரங்குன்றம் மலை மீது அசைவ உணவு சாப்பிட சென்ற இந்த தொகுதி எம்.பி. நவாஸ்கனியோ, பெண் உரிமை, பெண் பாதுகாப்பு பற்றி அலறும் சமூக செயற்பாட்டாளர்களோ ஏன் வாய் திறக்கவில்லை? மசூதியில் ஓதினால் குணமாகும் என்பது மூட நம்பிக்கை என்று திடல் கூட்டம் முழங்காதது ஏன்? எதாவது ஒரு ஹிந்து கோவில்களில் இது போன்ற சம்பவம் நிகழ்ந்திருந்தால் இது போல் ஊடகங்கள் அமைதியாக இருந்திருக்குமா? இவைகளை குறித்து நடுநிலைவாதிகள் சிந்திப்பார்களா?

# டெம்பிளோபோபியா – திராவிட ஆட்சியில் பரவும் வைரஸ்

[redacted]

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் இருக்கும் மாவடிக்கால் பகுதியைச் சேர்ந்த அருள்மிகு செண்பக விநாயகர் கோவில் மீது நவம்பர் 21ம் தேதியன்று அட்டக்குளம் தெருவைச் சேர்ந்த முகம்மது யாசின் ஒருவர் கற்களையும், செங்கலையும் கோவில் மீது எறிந்தும், ஹிந்து மதத்தை இழிவாகவும் பேசியுள்ளார். இதைக்கண்ட அப்பகுதி ஹிந்துக்கள் அந்த நபரை பிடித்து காவல்துறைக்கு தகவல் தெரிவித்தத்தின் பேரில் காவல்துறை சம்பந்தப்பட்ட நபரை கைது செய்துள்ளார்கள். இந்த சம்பவத்தில் ஈடுபட்டவரை மனநலம் சரியில்லாதவர் என்று கூறி தப்ப வைக்க முஸ்லீம்கள் முயற்சி செய்தனர். ஹிந்துக்களின் விழிப்பான செயல்பாட்டால் இந்த முயற்சி தடுக்கப்பட்டது.

ஹிந்துக்கோவில்கள் மீது தாக்குபவர்களை மனநலம் சரியில்லாதவர்கள் என்று சொல்லி வழக்கை மூடுவது தமிழகத்தில் பல இடங்களில் நடந்துள்ளது. கோவை அவிநாசி, சென்னை மண்ணடி, பெரம்பலூர் வி.களத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் தாக்குதல்கள் நடத்தியவர்கள் மனநலம் சரியில்லாதவர்கள் என்றது காவல்துறை. மனநலம் சரியில்லாதவர்கள் கோவில்களை மட்டும் குறி வைத்து தாக்குவது ஏன்? சர்ச், மசூதி, ஈவேரா சிலை, அண்ணா சிலை என்று அனைத்தையும் விட்டு விட்டு கோவிலை மட்டும் தேர்ந்தெடுப்பது ஏன்? காஷ்மீரிலும், வங்க தேசத்திலும் கோவில்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படும் போது அங்குள்ள காவல்துறையும் மனநலம் சரியில்லாதவர்கள் என்று தான் குற்றவாளிகளை அடையாளம் கண்டது. இந்த நிலை தமிழகத்தில், அதிலும் திமுக ஆட்சியில் அதிகரிக்கிறது. காஷ்மீர், வங்கதேசம் போல தமிழகம் ஹிந்து இன அழிப்பிற்கு தயார்படுத்தப்படுகிறதா? சுதாரிப்புடன் செயல்பட்ட கடையநல்லூர் ஹிந்து அமைப்பினருக்கு பாராட்டுக்கள்.



# கிருஷ்ணகிரியில் லவ் ஜிகாத்

கிருஷ்ணகிரியை சேர்ந்த டெம்போ டிரைவர் ஒருவருக்கு சொந்தமான கட்டிடத்தில் உள்ள கடையில், முஸ்லிம்பூரை சேர்ந்த அப்துல் கைப் என்பவர் மெக்கானிக் கடை நடத்தி வந்துள்ளார். அவர், டெம்போ டிரைவரின் மகளான, 17 வயது சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி பழகியுள்ளார்.

அக்டோபர் 23ல், சிறுமியை, அப்துல் கைப் கடத்தி சென்றுள்ளார். சிறுமியின் தந்தை கிருஷ்ணகிரி மகளிர் போலீசில், அக்டோபர் 25ல் அப்துல் கைப் மீது புகார் அளித்தார். இந்நிலையில், அக்டோபர் 27ல் இரு தரப்பினரையும் போலீசார் அழைத்துள்ளனர். ஸ்டேஷனுக்கு, அப்துல் கைப், சிறுமியுடன், அவரது பெற்றோர் உட்பட, 15 பேருடன் வந்துள்ளார். சிறுமி முஸ்லிம் பெண்கள் அணியும் புர்கா அணிந்து வந்துள்ளார். தொடர்ந்து, விசாரித்த போலீசார், சிறுமியை தந்தையிடம் ஒப்படைப்பதாகவும், 18 வயது முடிந்த பின் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று இரு தரப்பினரிடமும் பேசி, எழுதி கையெழுத்து வாங்கி கொண்டு சிறுமியை அப்துல் கைப்புடன் அனுப்பி வைத்துள்ளனர். அச்சமயத்தில் எதுவும் செய்ய இயலாது அதிர்ச்சியுடன் வீடு திரும்பிய தந்தை, மீண்டும் கிருஷ்ணகிரி மகளிர் போலீஸ் ஸ்டேஷனில் முறையிட்டு, சிறுமியை வரவழைத்து, தன்னுடன் வீட்டுக்கு அழைத்து வந்துள்ளார்.

சிறுமியிடம் விசாரித்தபோது, ''என்னிடம் அப்துல் கைப் நைசாக பேசி, பெங்களூருவுக்கும், அங்கிருந்து முஸ்லிம்பூரும் அழைத்து சென்றார். அக்டோபர், 27 இரவு, பச்சை கோடு போட்ட ரிஜிஸ்டரில் என்னை கட்டாயப்படுத்தி கையெழுத்திட வைத்தனர். அதில், உருது மொழியில் எழுதப்பட்டிருந்தது. எனக்கு புரியவில்லை. பின்னர் அப்துல், அவரது அப்பா, அம்மா கையெழுத்திட்டனர். எனக்கு பெயரை மாற்றினர். எங்கள் இருவருக்கும் நிக்கா அதாவது திருமணம் செய்வதாக கூறினர். பின், எனக்கு முதலிரவு ஏற்பாடு செய்தனர். நான் மறுத்தும் கட்டாயப்படுத்தி முதலிரவு நடந்தது'' என கூறியுள்ளார்.

இதையடுத்து, மாவட்ட எஸ்.பி., அலுவலகத்திற்கு சிறுமியின் பெற்றோருடன் வந்த கிருஷ்ணகிரி மாவட்ட வி.எச்.பி., நிர்வாகிகள் அப்துல் கைப் மீதும், அவர் மீது நடவடிக்கை எடுக்காமல் இச்சம்பவத்திற்கு உடந்தையாக போலீசார் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒரு புகார் மனுவை அளித்துள்ளனர்.

விஹெச்பியின் புகார் மனுவை ஏற்றுக்கொண்ட மாவட்ட எஸ்.பி. தங்கதுரை வழக்கை அலட்சியமாக விசாரித்த எஸ்.ஐ.,க்கள் விஜயவாணி, அமுதா ஆகியோரை பணியிடை மாற்றம் செய்துள்ளார்.

சிறுமியை கடத்திய வாலிபர் மீது, போக்சோ வழக்குப்பதிய உத்தரவிட்டுள்ளார். அதன்படி, சிறுமியை கடத்தி கட்டாய மதமாற்றம் செய்து சீரழித்த அப்துல் கைப், அவரது தந்தை அப்துல் கபார், தாய் நசீமா ஆகியோரை போக்சோ வழக்கில் கிருஷ்ணகிரி மகளிர் போலீசார் நேற்று கைது செய்துள்ளனர்.

**பெண்களை கவர திட்டமிடுவது காதலா? உணர்வுகளைத் தூண்டி ஏமாற்றி மதமாற்றம் செய்யும் நாடகமா? இது போன்ற திட்டமிட்ட சதி செயலை தடுப்பது அரசின் கடமையல்லவா?**

பொதுவாக இதுபோன்ற வழக்குகளில் இன்ஸ்பெக்டர் தான் விசாரிப்பார்கள். இந்த வழக்கையும் இன்ஸ்பெக்டர் விசாரித்தாக கூறுகின்றனர் விஹெச்பி நிர்வாகிகள். ஆனால், இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்காமல் எஸ்.ஐக்கள் மீது மட்டும் நடவடிக்கை எடுத்திருப்பது பல சந்தேகங்களை கிளப்புவதோடு யாரின் அழுத்தத்தின் பெயரில் இது நடந்தது என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

இந்தப் பகுதியில் யமாஹா பைக்கை வாங்கி சைலன்ஸரை ஆல்டர் செய்து பெண்கள் படிக்கும் கல்வி நிலையங்கள் முன் வீலிங் செய்யும் முஸ்லீம்பூர் இளைஞர்கள் பற்றிய காட்சித் தொகுப்பு பாலிமர் டிவியில் ஒளிபரப்பானது. இது போன்ற செயல்களுக்கு இளைஞர்களுக்கு நிதியுதவி செய்வது யார்?

பெண்களை கவர திட்டமிடுவது காதலா? உணர்வுகளைத் தூண்டி ஏமாற்றி மதமாற்றம் செய்யும் நாடகமா? இது போன்ற திட்டமிட்ட சதி செயல்கள் தடுப்பது அரசின் கடமையல்லவா?

# பீகார் தேர்தல் முடிவுகள் சொல்வது என்ன?

- இராஜேஷ்

பீகார் மாநில தேர்தல் முடிவுகள் வெளிவந்து தேசிய ஜனநாயக கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெற்று 10வது முறையாக மாநில முதல்வராக நிதிஷ்குமார் கடந்த 21ம் தேதி பதிவியேற்றார். இந்த வெற்றி குறித்து பல பத்திரிகைகளும், ஊடகவியலாளர்களும் குறுக்கும், நெடுக்குமாக வெட்டி அலசி ஆராய்ந்து பேசியும், எழுதியும் வருகின்றனர். 243 தொகுதிகளுக்கு இரண்டு கட்டமாக தேர்தல் நடந்து முடிந்து நவம்பர் 14ல் தேர்தல் முடிவுகள் வெளியாகின.

தேர்தல் முடிந்த உடன் வெளியிடப்பட்ட பல்வேறு கருத்துக் கணிப்புகளில் NDA வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என தெரிவித்தன. இது “கோடி” மீடியாக்களால் கட்டமைக்கப்படும் பொய்யான செய்தி என இண்டி கூட்டணி கட்சி கள் குமுறின. ஆனால் தேர்தல் முடிவுகள் கருத்துக் கணிப்புகளையும் தாண்டி 202 இடங்களோடு மாபெரும் வெற்றியை பீகார் மக்கள் NDA கூட்டணிக்குத் தந்தனர். இதில் தலா 101 இடங்களில் போட்டியிட்ட BJP - 89 (20.6%) தொகுதிகளிலும் JD(U) - 85(20.3%) தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. சிராக் பாஸ்வன் தலைமையிலான LJP - 19, இதர கூட்டணி கட்சிகள் - 9 இடங்களிலும் வெற்றி பெற்றன. இண்டி கூட்டணியில் RJD - 25, CONG - 06 மற்றவை 4 என மொத்தமாக 37 இடங்களில் வெற்றி பெற்றன. ஒவைஸி கட்சியான AIMIM - 6 இடங்களில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் முடிவுகள் கருத்துக் கணிப்புகளையும் தாண்டி 202 இடங்களோடு மாபெரும் வெற்றியை பீகார் மக்கள் NDA கூட்டணிக்குத் தந்தனர்.

NDA வெற்றிக்குக் காரணம் தேர்தலுக்கு முன் ரூ10,000 மகளிர் வாழ்வாதாரத்திற்காக 15.1 மில்லியன் பயனாளிகளுக்கு நேரடியாக வங்கிக் கணக்கில் அனுப்பியதே என ஆகச் சிறந்த அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். இதன் காரணமாகவே மகளிர் ஓட்டு சதவீதம் அதிகமாக பதிவானது என கூறும் இவர்களே முன்னெப்போதும் இல்லாத அளவில் வாக்குப்பதிவு நடந்தை குறிப்பிட்டு இது ஆளும் அரசு க்கு ஆதரவான அலை இல்லை என தெரிவித்ததை நாம் மறந்திருப்போம் என நினைத்திருக்கலாம். தேர்தல் பிரச்சார தொடக்கத்திலேயே ஆளும் அரசுக்கு எதிரான மனநிலை மக்களிடம் இருக்கிறது, நிதிஷ் குமாருக்கு வயது மூப்பினால் அவரால் தனிச்சையான முடிவெடுக்க முடியாது, இளைஞர் தேஜஸ்விக்கு குவியும் கூட்டம் என்றெல்லாம் ஊடகம் மூலம் கட்டமைத்தனர்.

**முதல் கோணல்:**

மோடி எதிர்ப்பாளர்களுக்கு வாயில் அவல் போல மெல்வதற்காக நான் தருகிறேன் என களத்தில் குதித்தார் ராகுல். தேர்தல் பிரச்சாரம் துவங்குவதற்கு முன்பே கூட்டணி கட்சிகளையும், ஊடகங்களையும் வரவழைத்து பவர் பாயிண்ட் விளக்கமளித்தார். கர்நாடக மாநிலத்தில் எப்படி வாக்குத் திருட்டு நடந்தது என்பதை கையில் ஸ்பைரல் பைண்டிங் செய்த வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டு, ஆதாரங்களை திரட்ட காப்பி எடுக்க நாங்கள் எவ்வளவு லட்சம் செலவு செய்தோம் தெரியுமா? இவையெல்லாம் தேர்தல் ஆணையம் என்ற ஒன்று பாஜகவின் ஒரு பிரிவு போல செயல்படுவதை அம்பலப்படுத்த தான் என்றார். ஒரே வீட்டில் 80 வாக்குகள் என பெரிய குண்டை தூக்கிப் போட்டார். கடைசியில் அவரது கட்சி ஆதரவாளரின் வீடு அது என்பதும், வெளியாட்களை அவர் தான் வாக்காளர் பட்டியலில் சேர்த்தது என அம்பலமானது.

மஹாராஷ்ட்ரா தேர்தலில் நடந்த வாக்குத் திருட்டு என ராகுல் அடுத்த குண்டை வீசினார். பாராளுமன்ற மற்றும் சட்டசபை தேர்தலுக்கிடையே வாக்காளர் எண்ணிக்கை வேறுபாட்டை மையப்படுத்தி பேசினார் ராகுல். CSDS அமைப்பின் எக்ஸ்தள பதிவு தரவுகளின் அடிப்படையில் தான் ராகுல் பேசுகிறார் என தெரியவந்த நிலையில், அதை பொய் என தேர்தல் ஆணையமும், பாஜகவும் நிரூபணம் செய்த போது அந்த டேட்டாக்களை தந்த சஞ்சய் குமார் ஊடகங்கள் வழியே மன்னிப்புக்கேட்டு மன்றாடினார். ஆனால் அவரது தரவுகளை வைத்து பேசும் காங்கிரஸ் மன்னிப்பு கேட்கவில்லை. ஊடகங்கள் இந்த நிலையில் விழித்துக் கொண்டு இவ்வளவு ஆதாரம் இருக்கிறது




என்றால் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கலாமே என ராகுலிடம் கேட்க, எனது வாக்குத் திருட்டு பிரச்சாரத்தை நீதிமன்றங்கள் பார்த்துக் கொண்டு இருக்கின்றன, அவர்களாகவே விசாரணை செய்ய வேண்டும் என அர்த்தமற்ற பதிலை சொன்னார். உங்களிடம் ஆதாரங்கள் இருந்தால் அதை புகாராக பதிவு செய்யுங்கள் நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என தேர்தல் ஆணையம் சொன்னதையும் கண்டுகொள்ளாமல் இரண்டாம் கட்ட தேர்தலுக்கு முந்தைய நாள் ராகுல் போட்ட ஹைட்ரஜன் குண்டு, மஹாகட்பந்தன் மீது நடந்த தற்கொலை தாக்குதலாக மாறியது.

**கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் வெற்றி மட்டுமே முக்கியம் என்பதை மனதில் நிறுத்தி ஈகோவை தள்ளி வைத்து தேர்தல் வேலை செய்தால் கிடைக்கும் ரிசல்ட் தான் பீகார் மாடல்.**
**2026ல் தமிழகத்திலும் இந்த பீகாரின் வெற்றி மாடலை முயற்சி செய்யலாம்.அதற்கு கட்சிகளும் கார்யகர்த்தர்களும் தயாரா என்பதே மில்லியன் டாலர் கேள்வி.**

**MY vs ME :**

ராகுல் ஏதோ புத்திசாலித்தனமான பிரச்சாரத்தை தொடங்கி வைத்து விட்டார் என நம்பி கூட்டணி கட்சிகளும் பாதி வெற்றி பெற்றுவிட்டதாக நினைத்து RJDயின் தேஜஸ்வி தனது செல்வாக்கை மறந்து, ராகுலை பிரதான பிரச்சார முகமாக கொண்டு சுற்றினார். யாதவ + முஸ்லீம் (MY) சாதி, மதரீதியிலான வாக்குகளை ஒருங்கிணைத்து வெற்றி பெறலாம் என நினைத்தனர். இதை எதிர்கொள்ள மகளிர் மற்றும் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய அனைத்து சமூகத்தையும் (ME) ஒன்றிணைக்க வீடு வீடாக சென்றது பாஜக.

**RSS – அதிருப்தியாளர்கள்:**

பாஜக தேர்தல் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்ட தர்மேந்திரா பிரதான்,வினோத் தாவடே ஆகியோர் கடைசி பூத் பிரமுகர் வரை BJP + JD(U) + LJP + மான்ஞ்ஜி + குஷ்வாஹா கட்சியினரிடையே பரஸ்பர நம்பிக்கை, முழு ஒத்துழைப்புடன் பணியாற்றிட முடுக்கி விட்டனர். நிதிஷும், சிராக் பாஸ்பாவனும் முட்டி மோதிக் கொண்டிருந்த நிலையில் சுமூகமாக பேசித் தீர்வு கண்டனர். பாட்னா மௌரியா ஹோட்டலில் முகாமிட்ட அமித்ஷா 19 நாட்களுக்கு மேல் அங்கேயே தங்கி தேர்தல் வேலையை மேற்பார்வையிட்டார். 100க்கும் மேற்பட்ட பாஜக அதிருப்தியாளர்களை தனித்தனியே சந்தித்து கட்சியில் உள்ள பிரச்சனையை தேர்தலுக்குப்பின் பார்த்துக் கொள்வோம், இப்போது வெற்றி பெறுவது மட்டுமே இலக்கு, உங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை சரியாகச் செய்யுங்கள் என்ற உத்வேகத்தையும், நம்பிக்கையையும் தந்தார். ஹிந்துக்களின் வாக்குகள் சிந்தாமல் சிதறாமல் கிடைக்க தனது வேலையை முழுவீச்சில் முடுக்கி விட்டது கீகுகு. சத் பூஜாவிற்கு சொந்த மாநிலம் திரும்பிய 45 லட்சத்திற்கும் மேற்பட்ட ஹிந்துக்களை ஒருங்கிணைத்து தேர்தலில் அவர்களின் வாக்கு எவ்வளவு முக்கியம் என்பதை கட்சிகளுக்கு உணர்த்தி கீகுகு அதை ஒருங்கிணைக்கும் பணிக்கு கவனம் கொடுத்தது.

**முஸ்லீம் வாக்குகள் VS ஹிந்துக்கள்:**

தங்களுக்கே முஸ்லீம்கள் வாக்குகள் கொத்தாக விழும் என நினைத்த மஹாகட்பந்தன் கூட்டணியின் தலையில் இடியென இறக்கியது AIMIM கட்சி. தேர்தலுக்காக முஸ்லீம்களை தாஜா செய்யும் கட்சியை விட அடிப்படைவாத ஓவைஸி கட்சியே மேல் என முஸ்லீம்கள் நினைத்தனர். ஏழை முஸ்லீம் பிரிவான பாஸ்மந்தாக்கள் பல ஆண்டுகாலமாய் காங்கிரஸ், லாலு கட்சியால் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து பாஜகவை ஆதரிக்க முடிவெடுத்தனர்.

இவர்களின் நம்பிக்கையை பெற சில ஆண்டுகளாக தனி கவனம் கொடுத்தது பாஜக. ஆட்சிக்கு வந்தால் வக்ஃப் சட்டத்தை அமுல்படுத்த விடமாட்டேன் என தேஜஸ்வி வாக்குறுதி கொடுத்த போதும் கூட அவர்களை நம்ப முஸ்லீம்கள் தயாராக இல்லை என்பதை சீமாஞ்சல் பகுதியின் முடிவு காட்டுகிறது. 55% வரை முஸ்லீம்களின் ஆதிக்கம் உள்ள இடங்களில் கூட நாம் ஒன்றாக வாக்களித்தால் வெற்றி பெற வாய்ப்புண்டு என ஹிந்துக்களும் உணர்ந்து வாக்களித்தனர்.

**நிதிஷ் நிர்வாகம்:**

நிதிஷ் அரசின் மீது பெரியளவில் ஊழல் குற்றச்சாட்டுகள் இல்லை என்பதோடு, அரசியலில் மற்ற கட்சிகளைப் போல தனது வாரிசை முன்னெடுக்கவில்லை என்பதையும், மது ஒழிப்பில் அவர் காட்டிய தீர்க்கமான முடிவால் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை பல மடங்கு குறைந்திருப்பதை நேரடியாக உணரத் தொடங்கினர். நிதிஷின் உழைப்பு எல்லாம் நம்மை மேம்படுத்தவே என பீகாரின் பெண்கள் நம்பி அதிகளவில் வாக்களித்தனர்.

**மோடியின் பிக் ஹிட் :** தேர்தலுக்கு முன்பு 7 முறை பல்வேறு திட்டங்களை தொடங்கி வைக்க பீகார் வந்த மோடி தேர்தலின் போது 14 பேரணிகளில் கலந்து கொண்டு பீகாரிகளின் பெருமித உணர்வை தொட்டுப் பிரச்சாரம் செய்தது பெரும் வரவேற்பை பெற்றது. இராமர் கோயில்,கும்பமேளா, சத் பூஜா ஆகியவற்றை லாலு கட்சியினர் கிண்டல் கேலி செய்ததையும், கூட்டணி கட்சியான திமுகவின் சனாதன ஒழிப்பு, பீகாரிகளுக்கு எதிரான வன்மப் பேச்சு, பஹல்காம் தாக்குதலை கண்டிக்காத பயங்கரவாத ஆதரவு என ஒவ்வொன்றையும் தோலுரித்து காட்டினார்.

**ஸ்டேடஜிஸ்டின் டக் அவுட்:** பல அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் வேலை பார்த்து சிலரின் வெற்றிக்கு காரணமாகவும் இருந்த பிரசாந்த் கிஷோர், தன்மீதான அதீத நம்பிக்கையில் ஜன் ஸ்வராஜ் என்ற கட்சியைத் தொடங்கி களம் கண்டார். தேர்தலில் நான் நிற்கப் போவதில்லை என அவர் சொன்ன போதே முடிவு எப்படி இருக்கும் என நமக்கு புலப்பட்டது. காந்தியத்தை பிரச்சாரம் செய்கிறேன் பேர்வழி என தலித் + ஆதிவாசி + முஸ்லீம்கள் + படித்த முற்பட்ட வகுப்பினர் என்பதை முன்னிறுத்தி பிரச்சாரம் செய்தார். நெற்றியில் இட்ட திலகத்தை அழித்து செக்குலரிஸ்டாக காட்டிக் கொண்டார். ஹிந்துக்களை ஏமாற்றும் இன்னொரு காங்கிரஸ் தான் இவர் என பீகாரிகள் புரிந்து கொண்டிருப்பதையே இவரின் டக் அவுட் உணர்த்துகிறது.

**பீகார் மாடல்:**

தோல்வி நிலையிலிருந்து வெற்றியை அடைவது எப்படி? நேர்மையான நிர்வாகம் மற்றும் ஹிந்துக்கள் வாக்கு வங்கி, எந்த தவறான கருத்தாக்கத்தையும் மக்களிடம் உணரச் செய்யலாம், ஆனால் அதைக் கூட நேரடியான மக்கள் தொடர்பின் மூலம் முறியடிக்க முடியும் என்பதையும், கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் வெற்றி மட்டுமே முக்கியம் என்பதை மனதில் நிறுத்தி ஈகோவை தள்ளி வைத்து தேர்தல் வேலை செய்தால் கிடைக்கும் ரிசல்ட் தான் பீகார் மாடல்.

2026ல் தமிழகத்திலும் இந்த பீகாரின் வெற்றி மாடலை முயற்சி செய்யலாம்.அதற்கு கட்சிகளும் கார்யகர்த்தர்களும் தயாரா என்பதே மில்லியன் டாலர் கேள்வி.

## வாக்குத் திருட்டு என புலம்பும் ராகுலை.....

பீகார் தேர்தல் குறித்து மேடைகளில், டிவி விவாதங்களில் பேசும் போது ஆ.ராஜா, முன்னாள் நீதியரசர் சந்துரு போன்றவர்கள் எல்லாம் இது மாநில தேர்தல் மட்டுமல்ல, மத்தியில் ஆட்சி மாற்றத்திற்கு அடிப்படையாக அமையப் போகிறது என பேசி வந்தார்கள். ராகுல் பீகாரில் தூண்டிய அக்னிக்கனல் நாடெங்கிலும் பெரும் நெருப்பாக பற்றி எரியப் போகிறது என எக்காளமிட்டனர். ஒருவேளை நிதிஷ் தோற்றால் NDA கூட்டணியிலிருந்து வெளியே வந்து விடுவார், அவரைத் தொடர்ந்து சந்திரபாபுவும் வெளியே வந்தால் ஆட்சி கவிழும் என இலவுகாத்த கிளியாக காத்திருந்தனர். 200 க்கும் மேல் கூட்டணிக்கும், பாஜக தனிப்பெரும்பான்மை கட்சியாகவும் உருவெடுத்தவுடன் சப்தநாடியும் அடங்கிப் போனது.

ஒருவகையில் திமுகவினரும் கூட நிம்மதி பெருமூச்சு விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும்.




இனி அதிக தொகுதிகள் வேண்டும் என்ற காங்கிரஸ் குரல் ஒலிக்காது என்ற நிம்மதி ஒரு பக்கம் என்றால் தோல்விக்குத் தங்களுடைய ஹிந்து வெறுப்பு, பீகாரிகள் மீதான வன்மம் தான் காரணம் என்று குற்றச்சாட்டு சொல்ல முடியாத நிலையில் காங்கிரஸ் கட்சி ஒற்றை இலக்கத்தில் ஒடுங்கிப் போனது உள்ளூர மகிழ்ச்சியாகத் தான் இருக்கும்.

தேர்தல் முடிவு குறித்து ஹிமந்தா பிஸ்வாஸ் சர்மா, கூறியது தான் ஹைலைட், வாக்குத் திருட்டு என புலம்பும் ராகுலை முழு பைத்தியம் என மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்றது தான். வாசகர்களான நீங்கள் இதை ஏற்கிறீர்களா?

# அரசியல் உலா

- கரிகாலன்

## எங்கே செல்லும் இந்த பாதை?

ஒரு வழியாக எல்லோரும் எதிர்பார்த்த செய்தி இன்னும் சில தினங்களில் வந்து விட வாய்ப்பு இருக்கிறது. அஇஅதிமுகவின் ஒருங்கிணைப்புப் பணி வேகம் பெற்றுள்ளதாக ஒதுக்கப்பட்டவர்களின் தரப்பு தெரிவிக்கிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முடிவை எதிர்வரும் டிசம்பர் 15ஆம் தேதி எடுக்கப் போவதாக ஓ. பன்னீர்செல்வம் அறிவித்திருக்கிறார். அதற்கு முன்பாக அதிமுக பொதுக்குழு டிசம்பர் 10ஆம் தேதி கூட இருக்கிறது. இதற்கிடையே இன்னும் சில திருப்பங்கள்.



ஒருவர் பெயரைச் சிதைக்க வேண்டுமானால் இல்லாததையும் பொல்லாததையும் கதை கட்டி விடுவது வழக்கம். அதை உண்மை என நம்பிப் பகிர்பவர்கள் உண்டு, பழிப்பவர்களும் உண்டு. அப்படித்தான் செங்கோட்டையன் தவெகவில் சேருவார் என்று ஒரு புரளி. புரளி என்பதையும் தாண்டி அதை செய்தியாகவே பலர் நம்பும் அளவுக்குப் போனது, அடுத்த சில தினங்களில் உண்மையாகவும் ஆனது.

செங்கோட்டையன் சும்மா இருந்திருக்கலாம் என்று சொன்னவர்கள் கூட, சும்மாவே இருக்கலாம் என்று சொல்லும் அளவுக்குப் போய்விட்டனர். ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி நிற்கும் பொறுமை செங்கோட்டையனுக்கு இல்லையா, கோட்டையைப் பிடிக்க நினைப்பவர்களுக்கு செங்கோட்டையனைப் பிடிக்காமல் போய்விட்டதா? குழப்பமாகத்தான் இருக்கிறது.

பொறுப்புகள் விலக்கப்பட்டு பிற்பாடு அதிமுக கட்சியிலிருந்தும் விலக்கப்பட்ட செங்கோட்டையனின் அடுத்தக் கட்ட அரசியல் நகர்வை, அவர் முடிவை தீர்க்கமாக அறிவிப்பதற்கு முன்பே, விலகிச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தி விமர்சித்தனர் பல ஊடகவியலாளர்கள். அவர் ஏதோ ஒரு கணக்கில் தவெகவில் சேர்ந்து விட்டார்.

> இப்பொழுது தவெகவுக்கு முன் இருக்கும் வாய்ப்புகளில் ஒன்று இன்று சொன்ன அளவில் தனித்தே நிற்பது, மற்றொன்று நாளை மாறக்கூடிய அளவில் ஒரு கூட்டணியில் சேர்வது. ஒரு திராவிடக் கட்சியைப் பலவீனப்படுத்தி தன்னை வலு உள்ளதாக்கிக் கொள்ளும் தவெக தமிழக அரசியலில் என்ன பங்காற்றும், யாரை எந்த அளவுக்கு எதிர்க்கும், யாரை ஆட்சிக்கட்டிலில் அமர்த்த துடிக்கும் என்பது மக்களை புதுக் குழப்பத்தில் ஆழ்த்தி இருக்கிறது.

ரஜினி அரசியலுக்கு வருவார் என்ற எதிர்பார்ப்பு அண்ணாமலை (படம்) வெளியான காலத்திலிருந்து அண்மைக்காலம் வரை இருந்து வந்தது. தமிழக அரசியலில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்திய புரளியாக அது சமீபத்தில் முடிந்து போய்விட்டதில் சிலருக்கு வருத்தம் இருக்கலாம். ஆனால் இப்பொழுது பாஜகவின் அண்ணாமலை தனிக்கட்சி ஆரம்பிப்பார் என்ற பழைய புரளி உரக்க ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது.



பொறுப்பிலிருந்து விடு(விக்கப்)பட்டு, புதிய பொறுப்பு இன்னும் அறிவிக்கப்படாத அண்ணாமலையின் அடுத்த கட்ட அரசியல் புதிய கட்சி தொடங்குவதாக தான் இருக்க வேண்டும் என்று சில மூத்த பத்திரிகையாளர்களே சொல்வது விந்தையாக இருக்கிறது.

ஆக வெளியில் இருந்து பார்க்கும் நமக்கு இவை வித்தியாசமாகத் தெரிகின்றனவே தவிர அரசியல்வாதி ஒருவருக்கு அறிவுரை சொல்வது, சொல்லக் கூடாது என்பதெல்லாம் ஊடக தர்மத்திற்கான வரைமுறையில் சேராது. நம் பங்கிற்கு நாமும் கொஞ்சம் சொல்லலாம் போல!

அண்ணாமலை அமைதியாக இருக்கும் நபர் அல்ல, மனதில் பட்டதை வெளிப்படையாக பேசும் தன்மை கொண்டவர் என்பது எல்லோருக்குமே தெரியும். பத்திரிக்கையாளர் சந்திப்பில் கூட பட்டெனப் பதில் சொல்லக்கூடிய அவர், பொறுத்திருந்து பார்ப்போம் என்று தான் சொன்னாரே தவிர்த்து, பொறுத்துக் கொள்ளவே மாட்டேன் என்று சொல்லவில்லை.



இதில் பரிதாபமான நிலை என்னவென்றால் இதுவரையில் பாஜகவுக்கு தேசியத் தலைமை மாற்றப்படாத நிலையில் அண்ணாமலைக்கு அடுத்த பொறுப்பு என்ன என்பது இன்னமும் புதிராகவே இருக்கிறது. இந்தப் பொறுப்புக் கிடைக்கும், அந்தப் பொறுப்பு கிடைக்கும் என்று தமக்குத் தாமே சமாதானம் சொல்லிக் கொண்டு பெரும் எதிர்பார்ப்பில் அவர்களது ரசிகர்கள் தேவுடு காத்துக் கொண்டிருக்கிறார்கள்.


அண்ணாமலைக்கு கிடைத்திருக்கும் இந்த இடைவெளியில் அவர் உடல் நலனைப் பேணவும், தொழில் வளத்தைக் கூட்டவும், விவசாயத்தைப் பெருக்கவும், குடும்பத்தோடு கூடுதல் நேரம் செலவிடவும் முடியும் என்றால், பொறுமை கடலினும் பெரிது என்ற வாக்கியத்தை அவர் உணர்ந்து இருக்கிறார் எனத் தெரிகிறது. அவரது ரசிகர்களும் அதை நினைவில் கொள்வது அவசியம்.

அதோடு கூடவே அண்ணாமலை சொன்ன இன்னொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும் முழு நேர (24 மணி நேர) அரசியல் தனக்கு ஒத்து வராது, எல்லோரும் தொழில் செய்யுங்கள் சம்பாதியுங்கள் என்றெல்லாம் குறிப்பிட்டு இருந்தார். பகுதி நேர அரசியல்வாதிகளை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் தமிழக வாக்காளர்களுக்கு வருமா என்பது உறுதி இல்லை.

*பாரத தேசத்தில் அரசியலில் புதிய மாற்றத்திற்கு வித்திட்ட டாக்டர் ஸ்யாம ப்ரசாத் முகர்ஜி, பண்டிட் தீன்தயாள் உபாத்யாய உள்ளிட்ட எத்தனையோ தலைவர்கள் தத்தம் துறைகளில் கோலோச்சி இருக்க வேண்டியவர்கள். தேசத்தின் மேன்மை கருதி 24 மணி நேரத்தை மட்டுமல்ல, முழு வாழ்க்கையையுமே அரசியலுக்காக அர்ப்பணித்தார்கள்.*

பீகார் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி பெற்ற மகத்தான வெற்றிக்குப் பின்னால் பல்வேறு தலைவர்களின் மாபெரும் உழைப்பு இருக்கிறது. நுணுக்கமான விஷயங்களில் அவர்கள் கடைப்பிடித்த புதிய யுக்திகள் நாம் கூர்ந்து கவனிக்கத்தக்கவை.

அனுபவத்திலும் வயதிலும் மூத்த அரசியல்வாதி, முதல்வராக இருந்த போதும் நிதீஷ் குமார் தனது கூட்டணியின் அங்கமாக இருக்கும் சிறிய கட்சியின் தலைவர், மிகவும் இளையவரான சிராக் பாஸ்வானை வீடு தேடிச் சென்று பார்த்துப் பேசினார். அவரது பெருந்தன்மை பாராட்டத்தக்கது. தேர்தல் முடிவுகள் நல்ல விளைவைத் தந்திருக்கின்றன.



இதைக் குறிப்பிட்டு பலர் தமிழகத்தில் எடப்பாடி பழனிச்சாமி இப்படி செய்வாரா என்று கேள்வி எழுப்பி வருகிறார்கள். கூட்டணி விவகாரத்தில் கூட இறங்கி வர வேண்டாம். ஆனால் சொந்தக் கட்சிக்குள்ளேயே சற்று விட்டுக் கொடுத்துப் போனால் நன்றாக இருக்கும் என்று அதிமுக அபிமானிகள் கருதுகிறார்கள்.

பட்டியல் தொகுதிகள் என்று மட்டும் நில்லாமல் பொதுத் தொகுதிகளிலும் நின்று பெருத்த வெற்றி பெற்ற சிராக் பாஸ்வானின் கட்சிக்கு இப்பொழுது பாராட்டு குவிகிறது. சமூக இணக்கத்திற்கும் இது மிகப்பெரிய முன்னுதாரணமாக விளங்குகிறது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இதிலிருந்து கற்றுக்கொள்ள ஏராளமாய் இருக்கிறது.

பீகார் தேர்தலில் சேர்ந்து நின்றவர்கள் பலர் பிரிந்து நின்றவர்கள் சிலர். மொத்தத்தில் எல்லாருமே தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றிக்காகப் பாடுபட்டனர் என்பது தெளிவு. அதற்கேற்றார் போல வெற்றிக் கனி கிட்டியது. தமிழகத்திலும் அதுபோலக் காட்சி அரங்கேறும் என சமீபத்தில் அண்ணாமலை சூசகமாகத் தெரிவித்தார். நம்பிக்கை நமக்கு இருக்கிறது. அரசியல்வாதிகள் அதைக் காப்பாற்ற வேண்டும்.

# உழைக்கும் கைகளுக்கு உத்தரவாதம்: நாடு போற்றும் நான்கு தொழிலாளர் சட்டங்கள்




*- நாணா*

இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி என்ற சில கட்சிகள் இருக்கின்றன. தொழிலாளர் நலன் சார்ந்து கட்சி என்று இவர்களுக்குப் பெயர் உண்டு. ஆனால் மிகப் பெரிய தொழிலாளர் விரோத கட்சிகள் இவைதான்.

ஒரு பக்கம் மின்சார உற்பத்தி மின் நிலையங்கள் கூடாது என்று கொடி பிடிப்பார்கள், மறுபக்கம் தடையில்லாமல் மின்சாரம் வேண்டி போராட்டம் செய்வார்கள்.

ஒரு பக்கம் தொழிற்சாலைகள் வெறும் ஆலைகள் அல்ல, தொழிலாளர்களின் ஆலயங்கள் என்பார்கள். மறுபக்கம் போராட்டம் போராட்டம் என்று அதற்கு மூடு விழா நடத்துவார்கள்.

டாட்டா பிர்லா - அம்பானி அதானி - கருப்பு பணம் கள்ளப் பணம் - முதலாளித்துவம் ஒழிக என்று கோஷம் போடுவார்கள். ஆனால் கருப்பு பணத்தை கள்ள பணத்தை வேரறுக்க பண மதிப்பீடு கொண்டு வந்தால் எதிர்ப்பார்கள்.

வரி கொள்ளைக்கு எதிரி என்பார்கள், ஏழைகளின் வாழ்வாதாரம் காப்பாற்றப்பட வேண்டும் என்று முழங்குவார்கள். வரி விதிப்பை எளிமை செய்து, GST வரி விதிப்பை கொண்டு வந்தால் எதிர்ப்பார்கள்.

மதம் என்பது அபின், மூடநம்பிக்கை என்று மேடை தோறும் முழங்குவார்கள். ஆனால், கிறிஸ்தவ முஸ்லிம் என்றால் சிறுபான்மை நலன் என்று பயங்கரவாதிகளுக்கு வக்காலத்து வாங்குவார்கள்.

அந்த வகையில் புதிதாக அமலுக்கு வந்துள்ள நாலு புதிய தொழிலாளர் சட்டங்களை இவர்கள் எதிர்த்திருப்பது ஆச்சரியம் தரவில்லை. இதுவரை எந்த அரசும் செய்யாத அளவில், தொழிலாளர் சட்டங்களை சீர்திருத்தி, எண்ணற்ற பாதுகாப்பை அவர்களுக்கு வழங்கி இருக்கும் இந்த சட்டங்களை இவர்கள் எதிர்ப்பதற்கு காரணம், பாதுகாப்பும் சலுகைகளும் வழங்கும் அதே வேளையில், கடமையை செய் என்றும் வலியுறுத்துவது தான்.

உண்மையில், இந்த நான்கு சட்டங்கள் எந்த வகையிலும் புதியவை அல்ல. நாடாளுமன்றத்தில் கடந்த 2020ஆம் ஆண்டில் உரிய விவாதத்திற்குப் பிறகு நிறைவேற்றப்பட்டவை, தற்போது நடைமுறைக்கு வந்துள்ளன. அவ்வளவுதான்.

1. தொழிலாளர் ஊதியச் சட்டம் 2019
2. தொழில்துறை தொடர்புகள் சட்டம் 2020
3. சமூகப் பாதுகாப்புச் சட்டம் 2020 மற்றும்
4. தொழில்முறைப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணியிடச் சூழல் சட்டம் 2020 ஆகியவை தான் இந்த நான்கு புதிய தொழிலாளர் சட்டங்கள். இச்சட்டங்கள் அறிமுகமாவதன் மூலம் பழைய 29 சட்டங்கள் நீக்கப்படுகின்றன.

ஏற்கனவே நடைமுறையில் இருந்த பல்வேறு தொழிலாளர் சட்டங்கள், நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னதாகவோ அல்லது சுதந்திரம் அடைந்த பின்னர் அதாவது 1930-ம் ஆண்டு முதல் 1950-ம் ஆண்டு வரை இயற்றப்பட்டவையாக இருந்தன. அப்போது இருந்த நாட்டின் பொருளாதார சூழல் மற்றும் உலக அளவிலான தொழிலாளர்கள் சூழல் அமைப்புகள் வேறுபட்டு இருந்தன. எனவே அவை மறு சீரமைக்கப்பட்டு, 29 சட்டங்கள் நீக்கப்பட்டு, அனைவருக்கும் நலன் பயக்கும் வகையில் நான்கு சட்டங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

- இச்சட்டங்கள் அமலாவதற்கு முன்பு தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தற்போது அமலான பிறகு மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் என்னென்ன என்று புரிந்து கொண்டால் மோடி அரசு தொழிலாளர்களுக்கு செய்துள்ள அளப்பரிய உதவி என்னவென்று புரியும்.
- முன்பு தொழிலாளர்களுக்கு நியமன கடிதம் வழங்குவது கட்டாயமில்லை, இனி அனைத்து தொழிலாளர்களுக்கும் நியமன கடிதம் வழங்குவது கட்டாயம்.
- முன்பு சமூக பாதுகாப்பு மிக குறைந்த தொழிலாளர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. இனி அனைத்து தொழிலாளர்களுக்கும் சமூக பாதுகாப்பு வழங்கப்படும். சாலையோரத்தில் தொழில் நடத்தும் தொழிலாளர்கள் உட்பட அனைவருக்கும் காப்பீடு, வருங்கால வைப்பு நிதி (பிஎஃப்), ஊழியர் காப்பீட்டு நிறுவன (இஎஸ்ஐசி) சலுகைகள் கிடைக்கும்.
- முன்பு குறிப்பிட்ட தொழிற்சாலைகளில்

பணிபுரிவோர் மற்றும் சில பணிகளுக்கு மட்டுமே குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம். இனி ஊதிய விதி, 2019-இன்கீழ் அனைத்து தொழிலாளார்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம்.

● முன்பு, தொழிலாளார்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வது கட்டாயமில்லை. இனி 40 வயதுக்கு மேற்பட்ட அனைத்து தொழிலாளார்களுக்கும் ஆண்டுதோறும் நிறுவனங்கள் இலவச மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வது கட்டாயம்.

● முன்பு, உரிய நேரத்தில் தொழிலாளார்களுக்கு நிறுவனங்கள் ஊதியம் வழங்குவது அவசியமில்லை. இனி குறிப்பிட்ட காலத்தில் தொழிலாளார்களுக்கு நிறுவனங்கள் ஊதியம் வழங்குவது கட்டாயம்.

● முன்பு, குறிப்பிட்ட தொழில்களிலும் இரவுப் பணிகளிலும் பெண்களை பணியமார்த்த தடை. அனைத்து வகையான பணிகளிலும் பெண்கள் இரவில் பணிபுரிய அனுமதி. பெண்களிடம் ஒப்புதல் பெற்று பாதுகாப்பு வழங்கி இரவில் பணியமர்த்தலாம்.

● முன்பு, குறிப்பிட்ட தொழிற் சாலைகளில் பணிபுரிவோருக்கு மட்டுமே இஎஸ்ஐசி சலுகைகள். 10-க்கும் குறைவான தொழிலாளார்களைக் கொண்ட நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு இந்தச் சலுகைகள் இல்லை. இனி 10-க்கும் குறைவான தொழிலாளார்களைக் கொண்டிருந்தாலும், ஆபத்தை விளைவிக்கக்கூடிய தொழில்களில் ஒரு தொழிலாளி ஈடுபட்டிருந்தாலும் இஎஸ்ஐசி சலுகைகள் வழங்குவது கட்டாயம்.

**எந்த அரசும் செய்யாத அளவில், தொழிலாளர் சட்டங்களை சீர்திருத்தி, எண்ணற்ற பாதுகாப்பை அவர்களுக்கு வழங்கி இருக்கும் இந்த சட்டங்களை இவர்கள் எதிர்ப்பதற்கு காரணம், பாதுகாப்பும் சலுகைகளும் வழங்கும் அதே வேளையில், கடமையை செய் என்றும் வலியுறுத்துவது தான்.**

● முன்பு, பல்வேறு தொழிலாளார்சட்டங்களின் கீழ் பல நிலைகளில் பதிவு, உரிமம் பெறுவது அவசியம். இனி நாடு முழுவதும் ஒற்றைப் பதிவு, ஒற்றை உரிமம் அறிமுகம்.

● முன்பு தொழிலாளர்கள் தாங்கள் பணிபுரியும் நிறுவனத்திடம் இருந்து பணிக்கொடை பெறுவதற்கு 5 ஆண்டுகள் பணியாற்றுவது கட்டாயம். இனி பணிக்கொடை பெற ஓராண்டு பணியாற்றினாலே போதும்.

● இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருக்கும் தொழில் சின்னமான பாரதிய மஸ்தூர் சங்கம் இந்தச் சட்டங்களை வரவேற்று இருக்கிறது. தொழிலதிபர்கள் தொழில்துறை வல்லுநர்கள், வர்த்தக அமைப்புகள், ஏற்றுமதி இறக்குமதி சங்கங்கள் என அரசியல் சாராத அமைப்புகள் அனைத்தும் இந்தச் சட்டங்களை வரவேற்று உள்ளன.

இச்சட்டங்கள் அமலாவதை ஒட்டி பிரதமர் மோடி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் நவம்பர் 21, 2025 நமது அரசு நான்கு தொழிலாளர் சட்டங்களை நடைமுறைப் படுத்தியுள்ளது. இது சுதந்திரத்திற்குப் பிறகு மிகவும் விரிவான மற்றும் முற்போக்கான தொழிலாளர் சார்ந்த சீர்திருத்தங்களில் ஒன்றாகும். இது நமது தொழிலாளர்களுக்கு பெரிதும் அதிகாரம் அளிக்கிறது. இது இணக்கத்தை கணிசமாக எளிதாக்குவதுடன், "வணிகம் செய்வதையும் எளிதாக்குகிறது." "இந்தச் சட்டங்கள் உலகளாவிய சமூகப் பாதுகாப்பு, குறைந்தபட்ச மற்றும் சரியான நேரத்தில் ஊதியம் வழங்குதல், பாதுகாப்பான பணியிடங்கள் மற்றும் நமது மக்களுக்கு, குறிப்பாக மகளிர் சக்தி மற்றும் இளைஞர் சக்திக்கு ஊதிய வாய்ப்புகளுக்கான வலுவான அடித்தளமாக செயல்படும்."

"இது தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்தும், எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் சூழல் அமைப்பை உருவாக்கும். இந்தச் சீர்திருத்தங்கள் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை அதிகரிக்கும், உற்பத்தித்திறனை அதிகரிக்கும் மேலும், ஒரு வளர்ச்சியடைந்த பாரதத்தை நோக்கிய நமது பயணத்தை துரிதப்படுத்தும்," என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசு அதானி அம்பானி நிறுவனங்களுக்கான அரசு அல்ல, அன்றாடம் காய்ச்சிகளுக்கான அரசு என்பதை, கடையேனுக்கும் கடையேனுக்கான அந்தியோதயா அரசு என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்திருக்கிறார் பிரதமர் மோடி.

உற்பத்தியாளர்களுக்கு, விவசாயிகளுக்கு, வியாபாரிகளுக்கு, தொழில் முனைவோருக்கு, வேலைக்குச் செல்லும் பாமர மக்களுக்கு, பெண்களுக்கு, புலம்பெயர் தொழிலாளர்களுக்கு என எல்லா தரப்பினருக்குமான அரசாக மோடி அரசு உருவாகி இருப்பதை தேச விரோத சக்திகளால் எப்படி சகித்துக் கொள்ள முடியும் ?

இச்சட்டங்கள் மீதான அவர்கள் எதிர்ப்பில் எந்த வித ஆச்சர்யமும் இல்லை !

# தில்லி குண்டுவெடிப்பு ஒரு இரசாயனப் போர்

- பால கௌதமன்

தில்லி குண்டு வெடிப்பிற்குப் பின் நடந்த விசாரணையில் இஸ்லாமிய பயங்கரவாதிகளால் டிரை - அசிடோன் - டிரை - பெர் ஆக்ஸைட் (TRI - ACETO (NE) - TRI - PEROXIDE) என்ற வேதியல் கலவை பயன்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது. இந்தக்கலவையை 'சாத்தான்களின் தாய்' என்று அழைக்கின்றனர். இந்தக் கலவையைப் பயன்படுத்தி வெடிக்கச் செய்யும் போது இரண்டாயிரம் டிகிரி வெப்பமும், 80 ஆயிரம் பார் அழுத்தமும் ஏற்படுகிறது. இந்த வேதியல் கலவையை சாதரணமான வீட்டு உபயோக பொருட்களிலிருந்து தயாரிக்கலாம். இதை கண்டுபிடிப்பதும் மிகவும் கடினம். அசிடோன், ஹைட்ரஜன் பெர் ஆக்ஸைட் மற்றும் திரவத்தை பயன்படுத்தி இதை தயாரிப்பதால் இப்பொருட்களை தனித்தனியாக வைத்திருப்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க இயலாது.

இந்த திரவத்தில் நைட்ரஜன் கூறுகள் இல்லாமல் இருப்பதால் ஸ்கேனர்களால் இதை கண்டுபிடிக்க முடியாது. இந்தக் கலவையை வெடிக்கச் செய்ய சிறியளவிலான வெப்ப மாறுபாடு, உராய்வு, அதிர்வு அல்லது மின்னாற்றல் போதுமானது. இந்தக் கலவையை தயாரிப்பதும், கையாள்வதும் மிகவும் ஆபத்தானது. அதே நேரத்தில் இதை வெடிக்கச் செய்ய டெட்டனேட்டர் தேவையில்லை. தயாரிக்க எளிதானது பாதுகாப்பு சோதனையில் தப்புவதற்கு எளிதானது, இருப்பினும் இதை தயாரிக்க மிக்க நிபுணத்துவமும், பாதுகாப்பான சூழலும் தேவை.

இந்த வேதியல் கலவையை, நமக்குத் தெரிந்தவரை ஏறத்தாழ 25 ஆண்டுகளாக பயங்கரவாதிகள் பயன்படுத்தி வருகிறார்கள். 2001ம் ஆண்டு பிரான்ஸில் இருந்து அமெரிக்கா சென்ற விமானத்தில் ஷூவில் மறைத்து வைத்து விமானத்தைத் தகர்க்க முயன்ற ரிச்சர்ட் ரீட் என்ற பயங்கரவாதியின் முயற்சி முறியடிக்கப்பட்டது. 2005ம் ஆண்டு இலண்டன் சுரங்க பாதை குண்டுவெடிப்பு, 2015ம் ஆண்டு பாரீஸ் தொடர் குண்டுவெடிப்பு, 2016ம் ஆண்டு பெல்ஜியம் தலைநகர் ப்ரஸ்ஸெல்ஸ் விமான நிலையம் மற்றும் மெட்ரோ இரயில் நிலைய தாக்குதல், 2017 மேன்செஸ்டர் இசை நிகழ்ச்சியின் மீது தாக்குதல், 2017ம் ஆண்டு பார்சிலோனா குண்டுவெடிப்பு, 2019ம் ஆண்டு இலங்கையில் நடந்த ஈஸ்டர் குண்டுவெடிப்பு போன்ற பயங்கரவாத தாக்குதல்களில் டிரை - அசிடோன் - டிரை - பெர் ஆக்ஸைட் (TRI - ACETO (NE) - TRI - PEROXIDE) என்ற வேதியல் கலவை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**உலகம் முழுவதும் நடந்த பல தீ வைப்புச் சம்பவங்களின் தீயின் வீரியத்தையும், பரவலையும் உற்று நோக்கினால் கெமிக்கல் ஜிகாத் உலகமயமாக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்ய முடிகிறது.**

தமிழகத்தில் விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் புளியங்குடி நகரத் தலைவர் திரு. அழகு கிருஷ்ணன் அவர்களின் மரக்கடையை பயங்கரவாதிகள் தீ வைத்துக் கொளுத்தினர். இந்த சம்பவத்தில் குறுகிய நேரத்தில் பெரும் வெப்பத்துடன் தீ கட்டுக்கடங்காமல் பரவியது. புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் ஆர்.எஸ்.எஸ் முகாமிற்கு இடம் கொடுத்த ஒரு பள்ளியில் ஏற்பட்ட தீ பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. ஆனால், இது மின்கசிவு என்று காவல்துறை வழக்கு பதிந்தது.

பாப்புலர் ஃப்ரண்ட் ஆப் இந்தியா என்ற அமைப்பின் மீது காவல்துறை நடவடிக்கை எடுத்தவுடன் ஹிந்து அமைப்பினர் வீடுகள் மீதும் நிறுவனங்கள் மீதும் இஸ்லாமிய பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலை பெட்ரோல் குண்டு, டீசல் குண்டு என்று காவல்துறை அறிவித்தது. ஆனால் பெட்ரோல் அல்லாத திரவங்கள் பயன்படுத்தபட்டிருக்கலாம் என்று மூலக்கூறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஏப்ரல் மாதம் 2023ம் ஆண்டு கேரளா எலத்தூர் ரயில் நிலையம் அருகே கண்ணூர் ஆழப்புழா விரைவு வண்டியில் ஷாரூக் சபி என்ற இஸ்லாமிய பயங்கரவாதி

இரயிலில் தீ வைத்தார். இதில் பாதிக்கப்பட்ட ரூபி என்ற பெண் கூறும் போது அவன் வீசிய திரவம் நிறமற்றது, வாசனையற்றது என்று தெரிவித்ததுடன் திரவத்தின் மீது தீ பற்றிய உடன் உடலில் உள்ள சருமம் உருக தொடங்கியது என்று தெரிவித்து இருப்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

2015ம் ஆண்டு திருநெல்வேலியைச் சேர்ந்த ராமசந்திரன் சுபாஷ் என்பவன் பல ரயில்களுக்கு இராசயன கலவையை பயன்படுத்தி தீ வைத்து மாட்டிக்கொண்டான். இவன் முஸ்லீமாக மதம் மாற்றப்பட்டவன் என்பது விசாரணையில் தெரியவந்தது. இது போல் உலகம் முழுவதும் நடந்த பல தீ வைப்புச் சம்பவங்களின் தீயின் வீரியத்தையும், பரவலையும் உற்று நோக்கினால் கெமிக்கல் ஜிகாத் உலகமயமாக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்ய முடிகிறது.

இராசயன போர் என்பது தீயுடன் மட்டும் முடிந்து விடுவதில்லை. விஷப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் இது பயன்படுத்தப்படுகிறது. ''விசம் செய்வோம். விசமத்தை ஒழிப்போம்'' என்று அல்குறபா மீடியா என்ற அமைப்பு ஒரு கையேட்டை வெளியிட்டுள்ளது. இதில் பழுதடைந்த இறைச்சியிலிருந்து எப்படி விஷம் செய்ய வேண்டும் என்ற செய்முறை விளக்கமும் அந்த விஷத்தை எப்படி பாதுகாத்து வைத்திருக்க வேண்டும் என்று விளக்கமாக கூறப்பட்டிருக்கிறது. இந்த விஷத்தை வைத்து இஸ்லாமியர் அல்லாதவரைக் கொன்றால் அவன் நரகத்திற்குச் செல்லமாட்டான், இது முஸ்லீமின் கடமை என்று குரான் மேற்கோள்களுடன் விவரிக்கப்பட்டுள்ளது. இந்த பதிப்பு இலங்கையில், அதிலும் தமிழில் வெளியிடப்பட்டுள்ளது. இது நம் தமிழகத்திலும் புழக்கத்தில் உள்ளது.

நவம்பர் மாதம் 2025ம் ஆண்டு டாக்டர் அகமது மொகியூதின் சையது, அசாத் சுலைமான் ஷேக் மற்றும் முகமது சுஹைல் கான் ஆகிய மூவரை குஜராத் பயங்கரவாத தடுப்பு காவல்துறையினர் கைது செய்தனர். இவர்கள் ஆமணக்கு கூழிலிருந்து விஷம் தயாரித்து அதை பயன்படுத்தி பலரை கொல்ல சதி செய்ததாக வழக்கு பதிந்துள்ளனர். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட டாக்டர் சயீது ஹைதராபாத்தைச் சேர்ந்தவன். அசாது மற்றும் சுஹைல் உத்திரபிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

தமிழில் வெளியான விஷம் செய்யும் வழிகாட்டி கையேட்டிலும் குஜராத்தில் பிடிபட்ட பயங்கரவாதிகளின் சதிச் செயல்களிலும் இறைச்சி, சோளம், பருப்பு வகைகள், பயறு, ஆமணக்கு போன்ற

**“விசம் செய்வோம். விசமத்தை ஒழிப்போம்” என்று அல்குறபா மீடியா என்ற அமைப்பு ஒரு கையேட்டை வெளியிட்டுள்ளது. இதில் பழுதடைந்த இறைச்சியிலிருந்து எப்படி விஷம் செய்ய வேண்டும் என்ற செய்முறை விளக்கமும் அந்த விஷத்தை எப்படி பாதுகாத்து வைத்திருக்க வேண்டும் என்று விளக்கமாக கூறப்பட்டிருக்கிறது.**

உணவு பொருட்களே அழிவிற்கான விஷத்தை தயாரிக்கும் மூலக்கூறுகளாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பொருட்களை வைத்திருந்தால் இவர்கள் மீது எப்படி சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்? மாட்டிக்கொள்ளாமல் பேராபத்தை விளைவிக்கும் செயல்களை செய்ய நம் நாடு முழுவதும் பயிற்சி கொடுக்கப்பட்டு வருவதை இந்த சம்பவங்கள் உறுதி செய்கிறது. சென்னை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சுமார் 40 ஆயிரம் பிரியாணி கடைகள் இருக்கின்றன. சமீபத்தில் கூட சவர்மா சாப்பிட்டு பலர் இறந்த செய்தியை நாம் பார்த்தோம். ஏன் சவர்மா சாப்பிடுகிறீர்கள் என்று தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியம் அவர்கள் வெகுண்டெழுந்து கேள்வி கேட்டார். முஸ்லீம்களிடமிருந்து எதிர்ப்பு கிளம்பியவுடன் தமிழக அரசே ஆம்பூரில் பிரியாணி திருவிழா அறிவித்தது. ஹிந்துக்கள் எதிர்ப்பினால் அந்த முயற்சி கைவிடப்பட்டது. பயங்கரவாதிகள் நினைத்தால் உணவு ஜிகாத் மூலம் ஒரே நேரத்தில் பலரைக் கொல்ல முடியும் என்பதற்கான அறிகுறியாகத்தான் இந்த ஷவர்மா சம்பவமும் பல இடங்களில் முளைக்கும் பிரியாணி கடைகளையும் பார்க்க வேண்டுமோ? என்று தோன்றுகிறது.

வீட்டில் கிடைக்கும் எளிதான பொருட்களை வைத்து பேரிழப்பை ஏற்படுத்தும் இராசயன யுத்தத்தை ஜிகாதிகள் உலகம் முழுவதும் கட்டவிழ்த்துள்ளனர். இந்த தாக்குதல்கள் பெரு நகரங்கள் முதல் குக்கிராமங்கள் வரை நம் தமிழகத்திலும் நடந்து இருப்பது கவலை அளிக்கிறது. தில்லி வெடிகுண்டு சம்பவத்திற்குப் பின் கெமிக்கல் ஜிகாத் நாடு முழுவதும் பரவிக் கிடக்கிறது என்பதை உணர்ந்து அரசும், பொது மக்களும் விழிப்புடன் செயல்படவேண்டும்.

**முதல்வர் கரத்தால் கோவையில் 45 ஏக்கரில் திறக்கப்பட்ட செம்மொழிப் பூங்கா - செய்தி**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

அது என்ன மாயமோ தெரியல! பெரிய சிலை, நூலகம், பேருந்து நிலையம், கார் ரேஸ், பூங்கா அமைக்க நிதி இருக்கு. அரசு ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க, 25% ஏழை மாணவர்கள் தனியார் பள்ளிகளில் படிக்க இந்த அரசிடம் நிதி இல்லை...

**வட மாநிலத்தவருக்கு தமிழகத்தில் வாக்குரிமை வழங்கக் கூடாது - தேமுதிக பிரேமலதா**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

வேற்று மாநிலத்தில் வசிக்கக்கூடிய தமிழர்களுக்கும் இது பொருந்துமா? தலைநகரிலும், மும்பையிலும் பரவி வாழக்கூடிய அங்குள்ள தமிழர்களின் வாக்குரிமையை பறித்துவிடலாமா ?




**தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார் அதிமுக மூத்த தலைவர் செங்கோட்டையன்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

தேர்தல் முடியும் வரை, அதிமுக பலவீனம், திமுக நூல் இழையில் வெற்றிபெற வாய்ப்பு, ராஜ தந்திரங்களை கரைத்து Soft ட்ரிங்கில் விஜய்க்கு கொடுத்த செங்கோட்டையார் என Thumbnail பார்க்கலாம்...

**காஷ்மீரில் 50 இடங்கள் உள்ள மருத்துவக் கல்லூரியில் 42 முஸ்லிம் மாணவருக்கு இடம்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

அட போங்கப்பா..... கடந்த 75 வருஷத்துல ஏகப்பட்டத இழந்துட்டோம். ஆனா ஒரு டவுட்டு... அமைதி மார்க்கத்தினர் மருத்துவம் படிக்க ஏன் இவ்ளோ ஆர்வம் காட்றாங்க.... (தில்லி வெடிகுண்டு விபத்தை மனசுல வெச்சிக்கிட்டு இத படிக்காதீங்க)

**அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தனது சொந்த நிதி 5 லட்சம் ரூபாயில் புனரமைத்து கொடுத்த விவசாயி**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

திராவிட மாடலை நம்பி "எந்தப் பயனும் இல்லை" னு இப்படி ஒவ்வொருவரும் களத்தில் இறங்குவதோடு அவர்களை வீட்டுக்கும் அனுப்பி வைத்தால் ஊரும்,நாடும் செழிக்கும்..

**பாராளுமன்ற கூட்டத்தொடரில் 'ஜெய்ஹிந்த், வந்தே மாதரம்' கோஷம் கூடாது - எம்.பி.க்களுக்கு பார்லி செயலக அலுவலகம் அறிவிப்பு**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

பாகிஸ்தான் ஜிந்தாபாத், அல்லாஹு அக்பர், பெரியார் வாழ்க னு ஒவ்வொரு எம்.பியும் கோஷம் போட இது போதாதா ?

**- நா.பாஸ்கரன்**

**விஜய் கொடுத்த வாக்குறுதி குறித்த கேள்விக்கு " அதெல்லாம் எப்படி நிறைவேற்றப் போறோம்னு சொன்னாரா..? அவரு சினிமா நடிகர் அப்படித்தான் பேசுவாரு. - பொன்முடி**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

1967லிருந்து நீங்க கொடுத்த வாக்குறுதியை காப்பாத்தினதே இல்லையே...? அவர் நடிகர் என்றால் நீங்க மஹா நடிகரா?

**இலங்கை பெண்ணிற்கு சென்னையில் ஓட்டுரிமை, இந்திய பாஸ்போர்ட் மற்றும் ஆதார்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

இதென்ன பிரமாதம், வங்க தேசத்தை சேர்ந்தவர்கள் திருப்பூர்ல சொந்தமா இடம் வாங்கி வீடு கட்டி தொழில் பண்றாங்க.... அல்லேலோயோ கும்பல் 2 அட்ரஸில் 500 ஓட்டு வச்சு இருக்காங்க.... அதுவும் வெளிமாநிலத்துகாரனாம்
இன்னும் SIR முடியறத்துக்கு முன்னால என்னெல்லாம் வரப் போகுதோ..

# S.I.R. தேர்தல் மோசடியை தெருவிற்குக் கொண்டு வந்த பூதம் – கதறும் எதிர் கட்சிகள்

- இராமகிருஷ்ணன்

ஹரியானா, மஹாராஷ்டிரா மாநிலங்களில் நடந்த தேர்தல் முறைகேடுகளால் பா.ஜ.க வெற்றி பெற்றது. வாக்காளர் நீக்கம், போலி வாக்காளர் சேர்ப்பு, பிரேசில் நாட்டு மாடலுக்கு ஓட்டு என்று ஆதாரங்களை வெளியிட்டு பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் வரிகளில் சொன்னால், "அணுகுண்டை" வீசினார். கர்நாடகாவில் ஒரே விலாசத்தில் 10,000 வாக்காளர்கள் இருக்கும் ஆதாரத்தை வெளியிட்டார். வாக்காளர் பட்டியல் போலி, வாக்காளர் அடையாள அட்டைகளில் முறைகேடு என்று புகார்களை அள்ளி வீசினார். தேர்தல் ஆணையமும், ஊடகங்களும், ஆய்வு நிறுவனங்களும் இந்தக் குற்றச்சாட்டுகள் தவறானது என்று உறுதிப்படுத்தியது ஒருபுறம் இருக்க, இந்தக் குற்றச் சாட்டுகள் எழாமல் இருக்கவும், நாட்டின் ஜனநாயகத்தின் நேர்மைதன்மையை உறுதிப்படுத்தவும் தேர்தல் ஆணையம் நாடுமுழுவதும் வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணியைத் தொடங்கியது.

> **காங்கிரஸ் இந்த அவதூறுப் பிரச்சாரத்தை மேற்கொள்ளாமல் இருந்தால் இந்த வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்காது! அவதூறு பேச்சால் பிஹாரில் ஆப்பு வைத்துக் கொண்டது காங்கிரஸ்-ராஷ்ட்ரீய ஜனதா தள் - கம்யூனிஸ்ட் கூட்டணி.**

2025 ஆம் ஆண்டு தேர்தலை சந்தித்த பிஹார் மாநிலத்தில் SIR கணக்கெடுப்பு தொடங்கியவுடன், வாக்காளர் பட்டியலின் மீது புகார் தெரிவித்த காங்கிரஸ் தலைமையிலான எதிர்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கின. பிஹாரில் பல வங்க தேசத்தினர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருப்பதும், ஒருவர் பல தொகுதிகளில் வாக்காளர்களாக இருப்பதும் தெரிய வந்தது. மேலும் பலர், இந்த வாக்காளர் சரிபார்ப்புப் பணி தொடங்கிய பின், சட்டவிரோத ஊடுறுவல்காரர்கள் என்ற உண்மை வெளிவந்ததும் ஊரைக் காலி செய்து வங்கதேசத்திற்கு ஓடினர். இவர்களெல்லாம், காங்கிரஸ் தலைமையிலான எதிர் கட்சிகளின் நம்பிக்கைக்குரிய வாக்காளர்கள்! காங்கிரஸ் இந்த அவதூறுப் பிரச்சாரத்தை மேற்கொள்ளாமல் இருந்தால் இந்த வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்காது! அவதூறு பேச்சால் பிஹாரில் ஆப்பு வைத்துக் கொண்டது காங்கிரஸ்-ராஷ்ட்ரீய ஜனதா தள் - கம்யூனிஸ்ட் கூட்டணி.

மாநிலம் மாநிலமாகச் சென்று ராகுல் தேர்தலின் நேர்மைத்தன்மை குறித்து அவதூறு பரப்புவதால், நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியை அறிவித்தது தேர்தல் ஆணையம். 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியைத் தொடங்கியது தேர்தல் ஆணையம். இதில் மேற்குவங்கமும், கேரளமும், தமிழகமும், ஜார்கண்டும் முக்கியத்துவம் வாய்ந்தன. மேற்கு வங்கத்தில் இந்தப்பணி தொடங்கியவுடன் பலர் வங்கதேசத்திற்கு ஓடத் தொடங்கினர். மம்தா பேனர்ஜி கட்சியின் கொல்கொத்தா மேயர் ஹக்கிம், வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் ஈடுபடுபவர்கள் காலை உடைக்க கட்சித் தொண்டர்களுக்கு உத்தரவிட்டார். மம்தா பேனர்ஜி ஒரு படி மேலே சென்று, வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் "நான் தோற்றால், நாடு முழுவதும் கலவரத்தைத் தூண்டுவே" என்று, இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மீதுள்ள நம்பிக்கையில் மத்திய அரசுக்கு எச்சரிக்கை விட்டார். மம்தா பேனர்ஜி தேர்தல் முடிவை முன்னரே கணித்துவிட்டார் போலும்!

ஜார்கண்ட் மாநிலத்திலும் பலர் வங்கதேசம் நோக்கி பயணம் தொடங்கிவிட்டனர், பல போலி வாக்காளர்கள் அடையாளம் காணப்பட்டவுடன் வாக்காளர் பட்டியல் திருத்தும் பணியில் ஈடுபடும் அதிகாரிகளை சிறைபிடியுங்கள் என்று வன்முறைக்கு அழைப்புவிடுக்கிறார் அம்மாநில காங்கிரஸ் அமைச்சர் இர்பான் அன்ஸாரி. இந்த மாநிலத்தில் வங்கதேசத்தினர் குடியேற்றம் பெருகிவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. எஸ்.ஐ.ஆர்-ஐ தடை செய்ய கேரள அரசு நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. தடை விதிக்க முடியாது என கேரள நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர் நேர்மையாக நடக்குமா என்ற சந்தேகம் உள்ளது. எஸ்.ஐ.ஆர் பணிகளைப் புறக்கணிப்பதாக வருவாய்த் துறை ஊழியர் சங்கம் போராட்டம் நடத்தியது. இந்தப் போராட்டத்திற்கு முன், தமிழக அரசு ஊழியர்களுக்கு




பல சலுகைகளை தமிழக அரசு அறிவித்தது என்பது குறிப்பிடத்தக்கது. நாங்கள் தான் தி.மு.க வை ஆட்சிக்குக் கொண்டுவந்தோம் என்று மார்தட்டியவர்கள் தமிழக அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழகத்தில், கோவைப் பகுதியில் மசூதிகளில் வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணியை அதிகாரிகள் மேற்கொள்வதாக மூத்த பா.ஜ.க தலைவர் திரு. ஹெச்.இராஜா அவர்கள் தெரிவித்தார். அதே சமயத்தில் திருநெல்வேலி மாவட்டம் பத்தமடை அக்ரஹாரத்தில் உள்ள வாக்காளர்களின் ஓட்டு பட்டியலில் இல்லை என்கிறார்கள். சென்னையை அடுத்துள்ள தாம்பரத்தில் ஒரு பகுதியில் பெந்தகோஸ்தே சபை நடக்கும் ஒரு வீட்டில் 500 வாக்குகளுக்கு மேல் இருப்பதாக அ.தி.மு.க தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தெரிவித்தார். இந்தக் குற்றச்சாட்டை உறுதி செய்தது கள ஆய்வு. கள ஆய்விற்குச் சென்றவர்களை மிரட்டினர் தி.மு.க வினர்! இந்த வாக்காளர்களில் பலர் வெளி மாநிலத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது! இதே தி.மு.க தான் எஸ்.ஐ.ஆர் வாயிலாக வட மாநிலத்தவரை வாக்காளர்களாகச் சேர்க்க பா.ஜ.க சதி செய்வதாகக் குற்றம் சாட்டியது ! இந்தியாவில் தடை செய்யப்பட்ட எல்.டி.டி.இ அமைப்பிற்கு நிதி திரட்டும் இலங்கை பிரஜையான இலட்சுமணன் மேரி பிரான்சிஸ்காவின் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

**அரசியல் எப்படி இருந்தாலும், சட்ட விரோத ஊடுறுவல்காரர்களும், மோசடியாளர்களும் அகற்றப்படுவது ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி !**

தேர்தல் தோல்வியை ஜீரணித்துக் கொள்ள முடியாமல், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் தேர்தல் ஆணையத்தின் மீது நடத்திய அவதூறுப் பிரச்சாரத்தின் விளைவு எஸ்.ஐ.ஆர். எஸ்.ஐ.ஆர் நடைமுறைக்கு வந்தவுடன், எந்தக் குற்றச்சாட்டை தேர்தல் ஆணையம் மற்றும் பா.ஜ.க வின் மீது எதிர்கட்சிகள் சுமத்துகிறார்களோ, அதைச் செய்பவர்கள் எதிர்கட்சிகள் என்பது உறுதியானதுடன், எஸ்.ஐ.ஆர் கணக்கெடுப்பால் அவர்களின் நம்பகமான வாக்குகளை அவர்கள் இழந்து வருகிறார்கள். தேர்தல் முடிவு, அரசியல் எப்படி இருந்தாலும், சட்ட விரோத ஊடுறுவல்காரர்களும், மோசடியாளர்களும் அகற்றப்படுவது ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி ! சி.ஏ.ஏ, என்.ஆர்.சி சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த விடாமல் தடுத்த எதிர்கட்சிகள், எஸ்.ஐ.ஆர் வாயிலாக அவைகள் மறைமுகமாகச் செயல்படுத்தப்படுவதைக் கண்டு எரிச்சலடைகின்றனர். சட்டவிரோதக் குடியேற்றத்தை, வாக்கு வங்கி அரசியலுக்காக ஊக்குவித்து அதிகாரத்தை பிடித்தவர்களின் கோட்டை தகர்வதற்கு எஸ்.ஐ.ஆர் காரணமாகிவிட்டது! பயங்கரவாதத்தையும், மத அடிப்படைவாதத்தையும் பயன்படுத்தி ஏற்படுத்திய வாக்குவங்கிக்கும் சரிவு ஏற்படுத்துகிறது எஸ்.ஐ.ஆர் ! ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பார்கள்! ஆட்சி அதிகாரம் கிடைக்கவில்லை என்ற ஆத்திரத்தில், தேர்தல் நடைமுறையின் மீது அவதூறு பரப்பி, கலவரத்தைத் தூண்டி அழிவை ஏற்படுத்த நினைத்து, அவர்களுக்கே அழிவைத் தேடிக்கொண்டனர் எதிர்கட்சிகள்!

புதையல் வெட்டக் கிளம்பிய பூதம் வெட்டியவனைப் பதம் பார்த்து விட்டது! பல காலமாக நம் நாட்டின் பாதுகாப்பிற்கும், ஜனநாயகத்திற்கும் அச்சுறுத்தலாக இருக்கும் மக்கள்தொகை ஆக்கிரமிப்பு (demographic invasion) என்ற பேராபத்தை தடுக்கவும் எஸ்.ஐ.ஆர் பயன்படுகிறது என்பதில் எந்த சந்தேகமுமில்லை ! இப்போது நம் நினைவிற்கு வரும் ஆங்கிலத் தொடர் 'All is well that ends well!'

# வங்கதேசத்தை சுற்றி வளைக்கும் இந்தியா; அதிர்ச்சியில் டாக்கா

ந. சி. பிபிந்திரா

இந்தியா தனது அண்டை நாடுகளுடனான கொள்கையின் வரையறைகளைத் தெளிவாக மாற்றி அமைத்துள்ளது. பல ஆண்டுகளாக கட்டுபாடுடன் கூடிய இராஜதந்திர நடவடிக்கைகள் மற்றும் வங்கதேசத்தின் எரிச்சலூட்டும் செயல்களை பொறுமையாக நிர்வகித்து வந்த நிலையில், இந்தியா இப்போது ஒரு தீர்மானமான மாற்றத்திற்கான சமிக்ஞையை செய்துள்ளது. அதிகாரிகள் இதை "உறுதியற்ற எதிர்வினைகளின் சகாப்தத்தின் முடிவு" என்று விவரிக்கிறார்கள்.

இந்த மறுசீரமைப்பு, வங்காளதேசத்தின் இடைக்கால ஆட்சித் தலைவரின் அமைதியை குலைக்கும் விதமான தொடர் செயல்பாடுகளின் பின்னணியில் நடந்துள்ளது. வங்காளதேசத்தின் மீது இந்தியா வைத்திருந்த நம்பிக்கையை அவர்களின் செயல்பாடுகள் உருக்குலைத்து அது ஒரு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

இந்தியாவின் இந்த புதிய நிலைப்பாடு ஒரு தெளிவான செய்தியை உலகிற்கு உணர்த்தியுள்ளது. இந்தியாவின் இறையாண்மை அல்லது தேசியப் பாதுகாப்புக்கு சவால் விடப்படும்போது, இந்தியா உறுதியாகவும், வெளிப்படையாகவும் பதிலளிக்கும் என்பதை தெளிவுபடுத்தியுள்ளது.

**வங்காளதேச எல்லையில் பலமான பாதுகாப்பு சீரமைப்பு**

இந்தியா தனது புதிய அணுகுமுறையின் மிக முக்கியமான வெளிப்பாடாக, இந்திய-வங்காளதேச எல்லையில்-பாமூனி (அசாமில் உள்ள துப்ரிக்கு அருகில்), கிஷன்கஞ்ச் (பீகாரில்), மற்றும் சோப்ரா (மேற்கு வங்கத்தில் உள்ள மேற்கு தினஜ்பூர்) ஆகிய மூன்று இடங்களில் முழுமையாகச் செயல்படும் ராணுவப் துருப்பு குழுவை (Military Garrison) நிறுவியுள்ளது.

இப்படி நிறுவப்பட்டுள்ள இந்த இராணுவ துருப்பு குழுக்கள் சிலிகுரி வழித்தடத்தைச் சுற்றி அமைந்து பாதுகாப்பை இப்பகுதியில் மேம்படுத்தியுள்ளது. இந்த வழித்தடம் ''சிக்கன்ஸ் நெக்'' (Chiken's neck) என்று அழைக்கப்படும் மிகவும் குறுகிய அகலத்தை உடையதும், 22கிலோ மீட்டர் நீளத்தையும் கொண்டதுமானதாகும். இந்த வழித்தடம், நம் நாட்டின் வடகிழக்குப் பகுதியை நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கும் முக்கியத்துவம் வாய்ந்த தரை வழி இணைப்பாகும். இங்கு ஏற்படும் எந்தவொரு பாதிப்பும் படைகளின் நகர்வு, இராணுவ தளவாடங்கள் மற்றும் தேசியப் பாதுகாப்பிற்கு நேரடி விளைவுகளை ஏற்படுத்தும்.

**இந்தியாவின் இறையாண்மை அல்லது தேசியப் பாதுகாப்புக்கு சவால் விடப்படும்போது, இந்தியா உறுதியாகவும், வெளிப்படையாகவும் பதிலளிக்கும் என்பதை தெளிவுபடுத்தியுள்ளது.**

இந்தப் பிராந்தியத்தை வலுப்படுத்துவதன் மூலம் இந்தியா எல்லைகளை பலப்படுத்தவதோடு மட்டுமல்லாமல், முழுப் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கு அடிப்படையாக இருக்கும் முக்கியமான வழித்தடத்தையும் பாதுகாக்கிறது.

ஒரு மூத்த பாதுகாப்பு அதிகாரி இந்த விஷயம் குறித்து, "புதிய இராணுவ படை துருப்புகள் குழுக்கள் அமைப்பதின் இராணுவத்திற்கு பல செயல்பாட்டு வசதிகளை வழங்குவதோடு, வடகிழக்கு எல்லையில் விரைவான பதிலடிகளை கொடுப்பதற்கு ஏதுவான சூழ்நிலையை உறுதிபடுத்துகிறது." என்று வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

**இந்தியா ஏன் பொறுமை இழந்தது?**

வங்கதேசத்தில் தொடர்ச்சியாக நடந்த பல சம்பவங்களே இந்தியா இந்த உறுதியான முடிவை எடுக்க காரணமானது.

அவற்றில் மிகவும் ஆத்திரமூட்டும் சம்பவம் அக்டோபர் 25, 2025 அன்று நடந்தது. அன்றைய தினம் வங்காளதேசத்தின் இடைக்காலத் தலைவர் பாகிஸ்தானின் இராணுவத் தளபதிக்கு ஒரு புத்தகத்தை வழங்கியதாகக் கூறப்படுகிறது. அதில், இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளை இணைத்து "கிரேட்டர் வங்காளதேசம்" (Greater Bangladesh) என்று குறிப்பிட்டு வரைபடம் (Map) ஒன்றும் அதில் இருந்ததாக செய்திகள் வெளியாகின.

வங்கதேசத்தின் இந்த செயல், இந்தியாவிற்கு

சந்தேகத்திற்கிடமற்ற ஒரு எச்சரிக்கையை வழங்குவதாக இருந்தது. இது வெறுமே இந்தியாவை புண்படுத்துவதற்கான விஷயம் மட்டுமல்ல; இந்தப் பிராந்தியத்தில் இந்தியா நீண்ட காலமாக எதிர்த்து வரும் மாற்றியமைக்கப்பட்ட வரைபடவியலை (revisionist cartography) குறிப்பதாக இருந்தது.

இந்த நிலையில், சிலிகுரி வழித்தடத்தில் பாகிஸ்தானின் ஆர்வம் அதிகரித்து வருவதாக உளவுத்துறை அறிக்கைகள் வெளியானது, இந்திய ஆய்வாளர்கள் இந்தியாவிற்கு எதிராக மீண்டும் வங்களாதேசமும், பாகிஸ்தானும் ஒருங்கிணையும் முயற்சியே என்றே பார்த்தார்கள்.

இந்தச் சம்பவம், வங்காளதேசத்தின் இடைக்காலத் தலைமையின் போக்கு குறித்த மாயைகளை நீக்கி தெளிபடுத்திய ஒரு தருணமாக அமைந்துள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

**வங்கதேசத்திற்கு தெளிவான சமிக்ஞை**

இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகள், வங்காளதேசத்தின் அரசியல் ஸ்தாபனத்திற்கான நேரடி எச்சரிக்கையாகவே பரவலாகக் கருதப்படுகிறது. ஒரு மூத்த அதிகாரி குறிப்பிட்டது போல, இந்த "திருப்புமுனை" என்பது, இந்தியாவின் இறையாண்மை அச்சுறுத்தப்படும்போதெல்லாம், அதன் பதில்கள் இனி "தெளிவாகவும், உறுதியுடனும், வலுவாகவும்" இருக்கும் என்பதாகும்.

அதே சமயம் இந்தியா சமநிலையைப் பேணுவதில் கவனமாகவே உள்ளது. தனது பாதுகாப்புக் கட்டமைப்பை பலப்படுத்தும் அதே வேளையில், இந்தியா தொடர்ந்து "பரஸ்பர மரியாதையுடனும், ஆக்கபூர்வமான செயல்பாட்டிற்கான வழிமுறையுடனும்" பேசி வருகிறது

இந்தியா வங்கதேசத்துடன் ஸ்திரமான உறவை விரும்புகிறது ஆனால் அதே நேரத்தில் இந்தியாவின் பாதுகாப்பு அல்லது பிராந்திய ஒருமைப்பாட்டை குலைக்கும் செயல்களில் ஈடுபட்டால் அதை பொறுத்துக் கொள்ளாது என்ற செய்தியை மிக தெளிவாக உறுதியாக தெரிவித்துள்ளது.

**களத்தில் செயல்பட தயார்நிலை**

பாதுகாப்பை வலுப்படுத்தும் இந்த மாற்றத்தை உறுதிபடுத்தும் வகையில், கிழக்கு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஆர். சி. திவாரி, நவம்பர் 2025 மத்தியில் துப்ரி மாவட்டத்தில் உள்ள இந்திய-வங்காளதேச எல்லைக்கு விஜயம் செய்தார்.

இந்த விஜயத்தின்போது, அவர் பாதுகாப்பு அமைப்பை ஆய்வு செய்து, லாச்சித் பார்புகான் இராணுவ நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார். அசாமின் மன உறுதியையும், மீள்தன்மையையும் அடையாளப்படுத்தும் பாரம்பரியம் கொண்ட அஹோம் தளபதியின் பெயரால் இது பெயரிடப்பட்டது.

பாதுகாப்பு PRO லெப்டினன்ட் கர்னல் மகேந்தர் ராவத், இந்த இராணுவ நிலையத்தின் வாயிலாக, இராணுவத்தின் செயல்பாட்டு உள்கட்டமைப்பு (operational infrastructure) கணிசமாக அதிகரிக்கும் என்று குறிப்பிட்டார்.

லெப்டினன்ட் ஜெனரல் திவாரி, அசாம் அரசாங்கத்தின் ஆக்கபூர்வமாக செயல்பாட்டிற்கான ஆதரவைப் பாராட்டியதோடு, கஜ்ராஜ் படையணியின் திறமை மற்றும் தயார்நிலையையும் பாராட்டினார்.

**இந்தியாவின் அண்டை நாடுகளுடான ராஜதந்திர உறவில் புதிய அத்யாயம்**

இந்தியாவின் இந்த அணுகுமுறை ஒரு மாறுபட்ட அணுகுமுறை ஆகும். இது உறுதியான இராஜதந்திரம், மூலோபாய உள்கட்டமைப்பு விரிவாக்கம் மற்றும் இராணுவப் படைகள் நிலைநிறுத்தல் முன்னெடுப்பு ஆகியவற்றுடன் இணைந்த நடவடிக்கையாக இருக்கிறது.



புதிய இராணுவ துருப்புகளை நிறுவுவது, உயர்மட்ட இராணுவ ஆய்வுகளுடன் இணைந்து, இந்தியா தனது பிராந்திய ஒருமைப்பாட்டைக் காக்க உறுதியாகச் செயல்படத் தயாராக இருப்பதைக் காட்டுகிறது.

இந்த ஒட்டு மொத்த நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள், "பொறுமையை ஒருபோதும் பலவீனம் என்று தவறாக எண்ணக் கூடாது." என்று கூறியுள்ளனர்.

வங்காளதேசத்திற்கு, இந்த செய்தி ஒன்றும் கண்டுணர முடியாத விஷயம் அல்ல. இந்தியா ஒரு திட்டமிட்டப்பட்ட மௌனத்திலிருந்து தீர்மானகரமான சமிக்ஞை கொடுக்கும் நிலைக்கு மாறியுள்ளது. அண்டை பிராந்தியம் ஒரு புதிய கட்டத்திற்குள் நுழைகிறது. இந்தியாவின் இறையாண்மை பேரம் பேச முடியாதது என்பதை இவ் உலக நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது

# இந்திரா காந்தி அமைதி விருது

## தேச துரோக காங்கிரசும் மனித உரிமை பாதுகாப்பும்

**- ராயன்**

அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான 2024-ம் ஆண்டுக்கான இந்திரா காந்தி அமைதி விருதை நவ.,19ல் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற குழுத் தலைவர் சோனியா காந்தி தனது கைகளால் சிலி நாட்டின் மிச்சேல் பச்லேட்டுக்கு வழங்கினார். இவ்விருதை இந்திரா காந்தி நினைவு அறக்கட்டளை தேர்வு செய்திருந்தது. மிச்சேல் பச்லேட் தேர்வை பாஜகவினரும், தேசிய ஊடகவியலாளர்களும் கடுமையாக கண்டித்தனர்.ஏன் எதிர்க்க வேண்டும்? காரணம் இல்லாமல் இல்லை.

**யார் இந்த பேச்லேட்?** மிச்சேல் பேச்லேட் 2006 -2010 மற்றும் 2014 - 2018 வரை சிலி நாட்டின் அதிபராக இருந்த முதல் பெண்மணி. ஐநாவின் மனித உரிமை சபையின் இயக்குநராகவும் இருந்தவர் பேச்லேட். இந்தியா குறித்து தொடர்ந்து அவதூறை பரப்பியவர், இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு பணிந்தவர்.




**370 சிறப்பு அந்தஸ்து நீக்கம்:** 2019 இந்திய பாராளுமன்றத்தில் 370 சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டதை கடுமையாக எதிர்த்து கருத்துக்களை வெளியிட்டவர். காஷ்மீரின் குரல்வளையை நெரித்து, மக்களை வீடுகளிலேயே முடக்கி வைத்துள்ள இந்திய அரசின் செயல் தனக்கு மிகுந்த கவலை அளிப்பதாகவும், ஐநாவின் 42வது மனித உரிமை கூட்டத்தில் 370ஐ ஆதரித்ததோடு, தேச துரோக செயலில் ஈடுபட்ட கலவரக்காரர்களை UAPA சட்டத்தில் கைது செய்ததை கண்டித்தவர்.காஷ்மீர் பிரிவினைவாதிகளின் குரலாக ஒலித்தவர் இந்த பேச்லேட்.

**CAA சட்ட திருத்தம் :** 2020ல் மத்திய அரசு கொண்டு வந்த CAA சட்ட திருத்தத்தை எதிர்த்ததோடு, வன்முறையாளர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்தார். CAA சட்ட திருத்தம் ஒரு மனித உரிமை மீறல், முஸ்லீம் சிறுபான்மையினருக்கு எதிரானது என பேசியவர்.

**FCRA திருத்தம் :** இந்தியாவில் இயங்கும் மத சிறுபான்மையினர், மற்றும் சமுக செயற்பாட்டாளர்களின் NGO க்களை முடக்கவே கொன்டுவரப்பட்ட நடவடிக்கை என பொய்யை பரப்புரை செய்தவர்.

**அஸ்ஸாம் NRC :** 1.9 மில்லியன் மக்களை நாடற்றவர்களாக ஆக்கும் செயல்தான் NRC என்று முழங்கியவர். 2021ல் விவசாயிகள் என்ற போர்வையில் டெல்லியில் மண்டி புரோக்கர்கள் நடத்திய வன்முறை போராட்டத்திற்கு ஆதரவு தந்ததோடு, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றவர்.

இப்படி இந்தியாவுக்கு எதிராகவும், உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் எதிர்த்து விமர்சித்தவரை உச்சிமுகர்ந்து இன்று காங்கிரஸ் விருது வழங்கி கௌரவப்படுத்தியுள்ளது.மிச்சேல் சிலி நாட்டின் உயரிய விருதை ஜார்ஜ் சோரஸுக்கு கொடுத்து மகிழ்ந்தவர். ராகுலின் உள்ளம் கவர்ந்த அமெரிக்க மாமா எனும் அளவிற்கு நெருக்கமானவர் சோரஸ். கூட்டி கழிச்சுப் பார்த்தால் கணக்கு சரியாகத்தான் வருகிறது.

மனித உரிமை, சமூக சீர்திருத்தம், அமைதி, பாலியல் சமத்துவத்தை பிரச்சாரம் செய்யும் செயற்பாட்டாளர் பேச்லேட்டுக்கு, இந்தியாவில் ஜனநாயகத்தை எமெர்ஜென்ஸி மூலம் புதைத்த இந்திரா காந்தி பெயரில் விருதும், அதை சீக்கிய படுகொலையை அரங்கேற்றிய குற்றவாளி ஜகதீஷ் டைட்லர் மேடையில் வீற்றிருக்க கொடுக்கப்பட்டிருப்பதையும் பார்க்கும் போதே காங்கிரஸ் கட்சிக்கு தொடர் தோல்வியை மக்கள் ஏன் பரிசாகத் தருகிறார்கள் ?என்பதை எல்லோராலும் புரிந்து கொள்ள முடியும்.

இந்திய விரோதிகளை விருதுகள் மூலம் ஊக்குவிக்கும் துரோகத்தைச் செய்யும் காங்கிரஸ் முக்த் பாரத் ஆவேதே சரி.

**செய்தி:**

**“பம்பையில் மூக்கை பொத்திக்கொண்டு குளியுங்கள்”-கேரள அரசு எச்சரிக்கை**

**சிந்தனை**

சபரிமலை யாத்திரையை ஒழிக்க சதி. பம்பையில் மட்டும் எப்படி பாக்டீரியா தாக்கம் வந்தது? அதைத் தடுக்க அரசு ஏன் தவறியது? கேரள அரசு பக்தர்களை அழிக்க சதி செய்கிறதா?

**செய்தி:**

PM,CM **பதவி நீக்கும் மசோதா பாராளுமன்ற குழுவுக்கு ஆள் அனுப்பாத திமுக**

**சிந்தனை**

மத்தியில் UPA ஆட்சியின் போது ஊழல் தலைவர்களைக் காப்பாற்ற சட்டம் இயற்றிய கூட்டணியாச்சே! என்ன செய்தாலும் மக்கள் ஆதரவைப் பெறலாம் என்ற திமிர்! தமிழனை முட்டாளாக்கும் திராவிடம் !

**செய்தி:**

**மதரீதியாக செயல்பட்ட கிறிஸ்தவ ராணுவ அதிகாரி சஸ்பென்ட்; உத்தரவை உறுதி செய்த உச்சநீதிமன்றம்**

**சிந்தனை**

இராணுவத்தின் அடிப்படையே கட்டளைக்குக் கீழ் படிதல். கர்த்தரின் சேனையில் உள்ளவர் இந்திய சேனைக்கு விஸ்வாசம் காட்டுவாரா? வரவேற்கப்பட வேண்டிய தீர்ப்பு! அடிப்படைவாத சிந்தனையை ஊட்டும் மத போதனைகள் தடுக்கப்பட வெண்டும்!

# செய்
# சிந்த

**செய்தி:**

**காட்பாடியில் கன்னியாஸ்தி**
**மாணவர்களை கட்டாயப்படு**

**சிந்தனை**

பெற்றோருக்கு பாத பூ
சரியா? பள்ளியில் அசைவ
சின்னங்களுக்குத் தடை என்று
செயல்படுத்துகின்றன கிறிஸ்த

**செய்தி:**

**கேரளா பள்ளி க**
**மஹாபாரதத்தை**
**நாடகத்திற்கு பரி**

**சிந்தனை**

கல்வி கொடுக்
நிறுவனத்தில் மத
தவறு! கிறிஸ்த
பின்பற்றாமல் பா
அரசின் ஹிந்து அ

# ...திகள்
# ...ணைகள்

**செய்தி:**

**வீக் எண்டில் சமையலும் கிடையாது சாப்பாடும் கிடையாது ஆதிதிராவிடர் நலவிடுதியின் அவலம்**

**சிந்தனை**

பட்டியலினத்தவர் படித்ததால் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற ஈ.வெ.ரா கொள்கையைப் பின்பற்றும் அரசு ! தேர்ச்சி விகிதமும் ஆதிதிராவிடர் பள்ளிகளில் குறைவு! ஜாதி அரசியலை ஊக்குவித்து அந்த ஜாதிகளுக்கு துரோகம் செய்யும் திராவிடம்!

**...ரி குறித்த மதரீதியான படத்திற்கு ...த்தி அழைத்துச் சென்ற பாதிரியார்**

...ஜ தவறாம், கிறிஸ்தவ சினிமா ... உணவுத் திருவிழா, ஹிந்து மதச் ...ஹிந்து இன அழிப்பை அரசு ஆதரவுடன் ...வ நிறுவனங்கள்.

**செய்தி**

**திருப்பரங்குன்றம் தீபத் தூண் - இந்து தமிழ் பத்திரிகையை மிரட்டும் ஐக்கிய முஸ்லீம் முன்னேற்ற கழகம்**

**சிந்தனை**

முஸ்லீம்கள் சர்வே தூண் என்று புழுகுவதை மாவோ ஆதரவுப் பத்திரிக்கை வெளிக்கொண்டு வந்ததால் ஏற்பட்ட ஆத்திரம்! தீபத் தூண் என்று நீதிமன்றம் உறுதி செய்தபின், மதக்கலவரத்தை உருவாக்கும் முயற்சியை மேற்கொள்ளும் முஸ்லீம் அடிப்படைவாதிகள்!

**...லவிழாவில் இராமாயணம், ...கொச்சைப்படுத்திய ...சு**

...கும் நோக்கத்தில் இயங்கும் ... வெறுப்புப் பிரச்சாரம் சட்டப்படி ...வப் பள்ளியில் சீருடையை ...தாவுக்கு முட்டுக்கொடுத்த கேரள ...அழிப்புப் போக்கின் தொடர்ச்சி.

**செய்தி**

**என்னை சீண்டினால் நாட்டையே உலுக்கி விடுவேன் - SIR அச்சத்தால் மம்தா மிரட்டல்**

**சிந்தனை**

தோல்வி பயம் தொற்றி விட்டது! நாட்டையே உலுக்க இஸ்லாமிய அடிப்படைவாதிகள் தயாராகி விட்டனரா? பெங்கால் தேர்தலுக்குப் பின் இரண்டாம் நேரடி நடவடிக்கை கட்டவிழ்க்கப்படுமா? பகிரங்கமாக கலவரம் செய்வேன் என்று மிரட்டுவது சட்டப்படி தவறு!

# ஹிந்து வெறுப்பை உலகமயமாக்க கிறிஸ்தவ மாநாடு

- ப்ரியா வெங்கட்

'கலிபோர்னியாவில் ஹிந்துமதத்தை ஆயுதமாக்குதல் (Weaponisation Of Hinduism) மற்றும் உலகளாவிய மத தேசியவாதங்கள் உடனான உறவுகள்' என்ற தலைப்பில் தொடர் கருத்தரங்குகளை New York State Council of Churches (NYCOC) என்ற அமைப்பு கலிபோர்னியாவில் இயங்கும் Indian American Muslim Council (IAMC) என்ற அமைப்புடன் இணைந்து நடத்தியுள்ளது.

இதில், உலகெங்கிலும் அதிகரித்து வரும் மதத்தை அடிப்படையாகக் கொண்ட தேசியவாத அரசியல் இயக்கங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக கூறப்பட்டாலும், ஹிந்துத்துவம், விரிவான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாக தெரிகிறது. இவை தவிர, ஹிந்துத்துவ கொள்கைகள் இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு எவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்டு, கலிபோர்னியாவில் உள்ள ஹிந்து சமூகத்தினரிடையே அவற்றின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.


> **ஹிந்துக்கள் மனம் புண்படும்படி பேசும் பாதிரிகளை எதிர்த்து ஹிந்துக்கள் கேள்வி கேட்டாலோ அல்லது அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்தாலோ உடனே இந்தியாவில் மதசுதந்திரம் பேணப்படவில்லை அவர்களுக்கு அச்சுறுத்தல் என்று UN அறிக்கை விடும்.**

இக் கருத்தரங்கிற்கு அங்குள்ள ஹிந்து அமைப்புகள் கடும் கண்டனத்தையும், எதிர்ப்பையும் பதிவு செய்துள்ளன.

இக்கருத்தரங்கில் மதவாத தேசியத்தின் தன்மைகளாக சிலவற்றை குறிப்பிட்டுள்ளனர் இந்த கிறிஸ்தவ அமைப்பினர். அரசின் மத அடிப்படைவாதம், கடவுளும் அரசாங்கமும் ஒன்றே அதாவது அரசின் கொள்கைகளை மத அடிப்படையில் புனிதமானதாக நம்ப வைக்கப்படுவது, மதச் சிறுபான்மையினர்களை எதிரிகளாக சித்தரிப்பது, குடியேற்றகாரர்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துவது, தாராளவாத (liberal) கல்வித் திட்டங்களைத் தாக்குவது, அரசால் சிறுபான்மையினர்களை குறிவைத்து உருவாக்கப்படும் வரலாற்று திரிபுகளை எதிர்க்கும் நிறுவனங்களுக்கு வரும் நிதியுதவியை தடுத்து நிறுத்துவது, மதத்தை ஆயுதமாக பயன்படுத்தி புனித தலங்களை தகர்ப்பது, நிலங்களை ஆக்ரமிப்பது, பிராந்திய உரிமைகளை பாதுகாக்க அல்லது மதக் குழுவை அழிக்க மத புனிதநூல்களை ஆயுதமாக்குவது போன்றவற்றை குறிப்பிட்டுள்ளனர்.

மேலே கூறப்பட்டுள்ள கருத்துகளின் அடிப்படையில் ஹிந்து மதத்தை மையக்கருத்தாக வைத்து கருத்தரங்குகள் நடத்தி இருக்கின்றனர் கிறிஸ்தவர்கள் இதில் கூட்டாளியாக முஸ்லீம்களை இணைத்துக் கொண்டுள்ளனர் என்றால் நாம் புரிந்து கொள்ள வேண்டிய விஷயம், இங்கு இந்தியாவில் சிறுபான்மையினருக்கு எதிரான ஆட்சி நடந்து கொண்டு இருக்கிறது என்ற பிரச்சாரத்தை மேற்கொள்ளவே இதை நடத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கருத்தரங்கம் என்பது இது முதல் முறையா என்றால் இல்லை. பல கருத்தரங்கங்களை இதுப் போன்று தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். உதாரணத்திற்கு 2021ல் உலகளாவிய இந்துத்துவாவை தகர்த்தல் என்ற பெயரில் இதே போன்றதொரு கருத்தரங்கம் ஆன்லைனில் நடத்தப்பட்டது. இதற்கு பல அமெரிக்க பல்கலைகழகங்கள் ஆதரவு கொடுத்தன.

உலக அரங்கில் இந்தியாவைப் பற்றிய ஒரு நன்மதிப்பைக் கெடுக்கவும், ஹிந்து மதத்தை குறிவைத்து தாக்கவும் இதுப்போன்ற கருத்தரங்கங்களைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். மேலும் இதில் கவனிக்க வேண்டிய விஷயம்



கலிபோர்னியாவில் ஹிந்துமதத்தின் தாக்கம் அதிகரித்து வருவதாக குறிப்பிட்டு பேசப்பட்டுள்ளது என்றால் அங்குள்ள ஹிந்துக்கள் மத்தியில் ஹிந்து மதம், இந்தியா குறித்தான ஒரு தவறான பார்வையை ஏற்படுத்தவே இந்த முயற்சி என்பது தெளிவாகிறது.

இவ்வளவு தூரம் மதவாத தேசியம் குறித்து கருத்தரங்கு நடத்தும் கிறிஸ்தவ முஸ்லிம் அமைப்பினர் சமீபத்தில் அமெரிக்காவில் அதிகரித்து வரும் ஹிந்து கோவில்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் பற்றி ஏன் விவாதிக்கவில்லை? நம் தமிழகத்தின் கடையநல்லூரில் இருக்கும் ஒரு குக்கிராமத்திற்குச் சென்று அங்கு அமைதியாக வாழும் ஹிந்து குடும்பங்களைகட்டாயமதமாற்றம்செய்யப்புறப்படும் பாதிரிகளை குறித்து ஏன் விவாதிக்கவில்லை? கோவில்களை சாத்தான்கள் வாழும் கூடாரம் என்று வேண்டுமென்றே ஹிந்துக்கள் மனம் புண்படும்படி பேசும் பாதிரிகளை எதிர்த்து ஹிந்துக்கள் கேள்வி கேட்டாலோ அல்லது அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்தாலோ உடனே இந்தியாவில் மதசுதந்திரம் பேணப்படவில்லை அவர்களுக்கு அச்சுறுத்தல் என்று UN அறிக்கை விடும். ஆனால், ஹிந்துக்கள் உலகின் வெவ்வேறு பகுதிகளில் தாக்குதலுக்கு உள்ளாகும் போது இவர்கள் யாரும் எந்த கருத்தரங்குகளையும் நடத்துவதில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். இஸ்லாமாபோபியோ என்று கதருபவர்கள் யாரும் ஹிந்துபோபியோ பற்றி பேசுவதில்லை!

இந்த தொடர் கருத்தரங்குகளை நடத்த நியூயார்க் அரசு நிர்வாகம் நிதியுதவி செய்துள்ளதாக இந்து அமைப்பான Hindu American Foundation குற்றம் சாட்டியுள்ளது. அப்பொழுது ஒரு மதத்தை குறி வைத்து தாக்க அரசே துணை போகிறது என்பதைத் தானே இது காட்டுகிறது. அமெரிக்காவில் ஹிந்துக்களுக்கு எதிராக நடைபெறும் நிகழ்வுகளை இதோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டும். இந்நிலையில் அப்பாவி ஹிந்துக்களோ நியூயார்க்கின் மேயராக மம்தானி தேர்தெடுக்கப்பட்டதை ஒரு இந்தியர் மேயராக வந்துள்ளார் என்று கொண்டாடி வருகின்றனர். அவர் தன் மத அடிப்படையில் மட்டுமே செயல்படுபவர் என்று புரியாமல், இந்தியரின் வெற்றி என பிதற்றி கொண்டு இருக்கிறார்கள்.

**ஹிந்து மதத்தை சிதைக்கவும், பாரதத்தை கூறு போடவும் பல்கலைகழகங்களையும், திங்க் டேங்களையும் உலகம் முழுவதும் கிறிஸ்தவ மிஷனரிகளும், இடதுசாரிகளும் ஏற்படுத்தி வருகின்றனர்.**

ஹிந்து மதத்தை சிதைக்கவும், பாரதத்தை கூறு போடவும் பல்கலைகழகங்களையும், திங்க் டேங்க்களையும் உலகம் முழுவதும் கிறிஸ்தவ மிஷனரிகளும், இடதுசாரிகளும் ஏற்படுத்தி வருகின்றனர். செல்டன் பொல்லாக், தேவ்தத்பட்நாயக்போன்றவர்களை சமஸ்கிருத வல்லுனர்கள் ஹிந்து மத அறிஞர்கள் என்று அடையாளப்படுத்தி விஷமத் தனமான அர்த்தங்களை கற்பித்து வருகின்றனர். அமெரிக்காவில் பல மாகாணங்களில் ஜாதி துவேஷத்தை தண்டனைக்குரிய குற்றமாக வரையறை செய்ய அழுத்தம் கொடுத்து சட்டமாக்குகின்றனர். இதை பயன்படுத்தி ஹிந்துக்களை பிரித்தாளும் சூழ்ச்சியில் ஈடுபடுகின்றனர். இந்த சதிச் செயல்களின் அங்கமாகத்தான் இந்த மாநாடு பார்க்கப்பட வேண்டும். ஹிந்து வெறுப்பை, யூத வெறுப்பைப் போல் உலகம் முழுவதும் ஏற்படுத்தும் முயற்சியின் அங்கம் இது.

இந்த நிகழ்ச்சியை இணைந்து நடத்தும் அமைப்பான Indian American Muslim Council, Article 370 நீக்கம், CAA சட்ட திருத்தம் போன்றவற்றிற்கு எதிராக பிரச்சாரம் செய்த அமைப்பு என்பதைப் பார்க்கும் போது இந்த மாநாடு மார்க்சிஸ்ட் - மிஷனரி - முஸ்லீம் (MMM) கூட்டுச் சதி என்பது தெளிவாகிறது. நம் நாட்டு பல்கலைகழகங்களிலும், ஊடகத் தளத்திலும் செயல்படுத்தி வரும் இந்திய எதிர்ப்பு சதிக்கு சர்வதேச ஆதரவும் நிதியுதவியும் பெற்றுத் தர ஏற்படுத்தப்படும் கட்டமைப்புகளில் இதுவும் ஒன்று என்பது திண்ணம்!

**அமைதியாக வாழும் கலிபோர்னியா ஹிந்துக்கள் குறிவைக்கப்பட்டுள்ளார்கள் என்று சரியான நேரத்தில் தங்களுடைய கடும் கண்டனத்தையும், எதிர்ப்பையும் பதிவு செய்துள்ள ஹிந்து அமைப்பினர் பாராட்டுகுரியவர்கள்.**

அமைதியாக வாழும் கலிபோர்னியா ஹிந்துக்கள் குறிவைக்கப்பட்டுள்ளார்கள் என்று சரியான நேரத்தில் தங்களுடைய கடும் கண்டனத்தையும், எதிர்ப்பையும் பதிவு செய்துள்ள ஹிந்து அமைப்பினர் பாராட்டுகுரியவர்கள்.

உலகரங்கில் நம் நாட்டிற்கு இருக்கும் நன்மதிப்பை கெடுத்து, இங்கு சிறுபான்மையினர் வாழ தகுதி இல்லாத இடம் என்பது போல் சித்தரித்திற்கும் இந்த கருத்தரங்கத்தில் நம் நாட்டிலிருந்து யாராவது சென்று கலந்து கொண்டிருந்தால் அவர்கள் தேசவிரோதிகளே. அவர்கள் மீது நம் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.





**நேற்று**

நம்மை பொருத்தவரை தமிழ் கடவுள் என்றால் கருணாநிதி தான்..

**இன்று**

பழனி முருகன் கோயிலில் அன்பில் மகேஷ் சாமி தரிசனம்

இரவில் தனியாக செல்லவேண்டாம்

யாரு #காவல்துறை சொன்னாங்கலா?

இல்ல காவல்துறைக்கே சொல்லியிருக்காங்க

மெரினா சுடுகாடு போகாம.?
எதுக்குடா இங்க வாறீங்க.?
மானம்கெட்டவனுங்களா..!!



#விடியல்அரசு








- தொகுப்பு : சி.பாண்டிக்குமார்



இனி, மக்களிடம் நல்ல பெயர் எடுப்பவருக்கே தேர்தலில் சீட். ஸ்டாலின் அறிவிப்பு.




என்ன ஒருத்தனையிம் காணோம்

அங்கிள் : தமிழகத்தை தலைகுனிய விட மாட்டேன்...

மக்கள் : ஏன் அங்கிள்??

அங்கிள் : குனிஞ்சா என் விக்கு கீழே விழுந்துரும்ல அதான்








# அடிப்படை ஆய்வின் அவசியம்

கோ. ரமேஷ், பொருளாதார நிபுணர்.

பங்குச் சந்தையில் வெற்றி பெற இரண்டு முக்கியமான பாதைகள் இருக்கின்றன.

ஒரு பக்கம், விலை ஏற்ற இறக்கங்களை பார்க்கும் டெக்னிக்கல் அனாலிசிஸ்.மற்றொரு பக்கம், உண்மையில் நிறுவனத்தின் இயக்கத்தையும், அதன் மொத்த வணிகத்தையும், எதிர்காலத்தையும் புரிந்து கொண்டு செய்யப்படும் ஆய்வு - அதுதான் அடிப்படை பகுப்பாய்வு ஆய்வு (Fundamental Analysis). நீண்டகாலத்தில் செல்வம் உருவாக்க வேண்டும் என்றால், அடிப்படை ஆய்வு ஒரு முதலீட்டாளனுக்கு “road map” போல் வழிகாட்டும். அது வெறும் கணக்கு அல்ல, ஒரு நிறுவனம் நம் பணத்தை பாதுகாப்பாக வளர்க்கும் திறன் உள்ளதா என்பதை ஆழமாக சோதிக்கும் அறிவியல்.

பங்குச் சந்தையில் பங்கு விலை உயர்வும் சரிவும் வெளிப்படையாக தெரிந்தாலும், அந்த விலைகளுக்கு பின்னால் இருக்கும் உண்மையான காரணம் என்ன என்பதை நமக்கு சொல்வது அடிப்படை பகுப்பாய்வு.

**ஒரு நிறுவனம்:**

- எப்படித் தொழில் செய்கிறது?
- எவ்வளவு லாபம் ஈட்டுகிறது?
- அதன் நிர்வாகம் எவ்வளவு வலிமையானது?
- எதிர்கால வளர்ச்சி எவ்வளவு சாத்தியம்?

இவற்றை எல்லாம் பார்த்து மதிப்பீடு செய்தால்தான் “இந்த பங்கை, இந்த விலைக்கு வாங்கலாமா? வேண்டாமா? என்ற முக்கியமான முடிவு எடுக்க முடியும்.

**அடிப்படை ஆய்வில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள்:**

நிறுவனத்தின் மொத்த பங்கு மூலதனம் (Equity Capital)ஒரு நிறுவனம் எவ்வளவு பெரியது, அதன் பங்குகளின் அமைப்பு எப்படி உள்ளது என்பதை Equity Capital லே சொல்கிறது.

Equity என்பது நிறுவனத்தின் முதுகெலும்பு. இது வலுவாக இருந்தால் → நிறுவனம் கடன் அழுத்தமின்றி, நீண்டகாலத்தில் சீராக வளர முடியும்.

**பங்கு முதலீட்டாளர்கள் –** Shareholders

ஒரு நிறுவனத்தில் பங்குகளை யார் எவ்வளவு முதலீடு செய்து இருக்கிறார்கள் என்பது முதலீட்டிற்கு முக்கிய சிக்னல்.

- Promoters holding அதிகம் இருந்தால் → நிறுவனத்தின் மீது மிகுந்த நம்பிக்கை உள்ளது.
- FII / DII அதிகமாக முதலீடு செய்து இருந்தால் → உலகளாவிய மற்றும் உள்ளூர் பெரிய முதலீடு நிறுவனங்கள் நம்பிக்கையுடன் உள்ளன.
- Mutual Funds, Insurance Companies முதலீடு இருந்தால் → நிறுவனம் நீண்ட கால வளர்ச்சியை கொண்டது.

இந்த முறையை பார்த்தாலே, ஒரு நிறுவனத்தில் முதலீடு செய்யலாமா, வேண்டாமா என்று தீர்மானிக்க முடியும்.

கடந்த 5 ஆண்டுகளின் லாபம் - விற்பனை வளர்ச்சி ஒரு நிறுவனத்தின் track record அதன் உண்மையான வளர்ச்சியைச் காட்டுகிறது..

ஒரு நிறுவனம் 5 ஆண்டுகளாக:

- விற்பனை உயர்வு
- மொத்த லாப உயர்வு
- விற்று லாப உயர்வு

என்று உயர்வை காட்டினால் அது திடமான fundamental company. நிறுவனத்தின் வளர்ச்சி இல்லாமல் பங்கின் விலை மட்டும் உயர்ந்து இருந்தால் - அதை தவிர்க்க வேண்டும்.

காலாண்டின் முடிவுகள் மூலம் நிறுவனத்தின் தற்போதைய நிலவரம் மற்றும் வரும் காலத்தில் எவ்வாறு இருக்கும் என்று தெரிந்துகொள்ளலாம்.

பார்க்க வேண்டியது:

- Sales growth
- Net profit
- Operating margin
- Debt level
- Cash flow

இவை எல்லாம் ஏற்றத்தில் இருந்தால் company momentum strong.

**நிறுவனம் Dividend கொடுக்கிறது என்றால் :**

நிறுவனத்தின் cash position சரியாக உள்ளது, நிறுவனத்திற்கு முதலீட்டாளர்கள் மீது அக்கறை உள்ளது, உலகளாவிய நம்பிக்கை உள்ளது என்பதற்கான சான்று.

ஆனால் தொடர்ந்து பல ஆண்டுகள் dividend கொடுக்கும் நிறுவனம் - long-term க்கு ஒரு சிறந்த முதலீடு.

**விரிவாக்க திட்டங்கள்:**

ஒரு நிறுவனம் வளர வேண்டுமென்றால், அது:

- புதிய கிளைகள்
- புதிய தொழிற்சாலை
- புதிய உற்பத்தி திறன்
- புதிய ஆர்டர்கள்
- புதிய ஏற்றுமதி வாய்ப்பு

போன்றவற்றில் நுழைய வேண்டும்.

இந்த expansion plans தான் 5 - 10 ஆண்டுகளில் அதன் மதிப்பை பல மடங்காக மாற்றும்.

EPS(Earning Per Share) அதிகமாக இருந்தால் → நிறுவனம் பங்கு ஒன்றுக்கு அதிக லாபத்தை உருவாக்குகிறது என்று பொருள்.

ஆனால் பங்கின் விலை EPS விட மிக அதிகமாக இருந்தால் அதை வாங்குவது ஆபத்து.

**முதலீட்டிற்கு கண்டிப்பாக பார்க்க வேண்டியவை:**

- EPS
- Price to Earnings Ratio (P/E)
- Industry average P/E
- Company growth vs valuation

விலை அதிகமா? குறைவா? - இதையே fundamental analysis தீர்மானிக்கும்.

**அரசியல் / பொருளாதார அபாயங்கள்:**

ஒவ்வொரு துறையும் ஒரு சில risk-களை உடையது. உதாரணம்:

- IT = Dollar / Global demand
- Banking = RBI கொள்கைகள்
- Pharma = US FDA approvals
- Metals = World commodity prices

Fundamental Analysis என்பது வெறும் data analysis அல்ல.

அது ஒரு நிறுவனத்தின் உண்மையான health check-up.

நாம் பங்குகளை வாங்குவது காகிதத்தை வாங்குவது போல இல்லை.

ஒரு நிறுவனத்தின் ஒரு சிறிய பங்கு முதலீடே பிற்காலத்தில் நம்முடைய மிகபெரிய சொத்தாக மாறும்.

**சுருக்கமாக:**

| | |
|---|---|
| **நல்ல நிறுவனம்+<br>சரியான விலை+<br>பொறுமையுடன் காத்திருத்தல்** | **உறுதியான லாபம் + நீண்டகால செல்வம்** |

## வரலாறு படைக்கும் இந்தியாவின் பொருளாதாரம்:

இந்தியாவின் பொருளாதாரம் இந்த நிதியாண்டில் 4 டிரில்லியன் டாலர் என்ற அளவைத் தாண்டத் தயாராக உள்ளது. தற்போது 3.9 டிரில்லியன் டாலர் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக இருக்கும் இந்தியா இதுவரை கண்டிராத வளர்ச்சியை அடைய சரியான பாதையில் சென்று கொண்டு இருக்கிறது என்று தலைமை பொருளாதார ஆலோசகரான (CEA) வி.அனந்த நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார். மேலும், அவர் கூறுகையில், அமெரிக்காவால் விதிக்கப்பட்ட கட்டணங்கள் (tariffs) உள்ளிட்ட சர்வதேச சவால்களை இந்தியா சமாளித்த போதிலும் இந்தக் குறிப்பிடத்தக்க சாதனை எட்டப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

இந்தியாவின் மூலோபாயக் கொள்கைகளும் வர்த்தகத் தந்திரங்களும் இந்தக் கட்டணங்களின் தாக்கத்தை பெரும்பாலும் சமநிலைப்படுத்தி, செயல்பாட்டில் புதிய சந்தைகளையும் வாய்ப்புகளையும் திறந்துள்ளன. இந்த நடவடிக்கைகள் வாஷிங்டனையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியதாகவும், இந்தியா குறித்த அதன் கணிப்புகள் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தன என்பதை அது இப்போது அங்கீகரிப்பதாகவும் நாகேஸ்வரன் சுட்டிக்காட்டினார்.

மேலும் தலைமைப் பொருளாதார ஆலோசகர் (CEA) IVCA Green Returns Summit 2025 என்ற கருத்தரங்கில் பேசும் போது காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதில் இந்தியாவின் உறுதிப்பாட்டை எடுத்துரைத்துள்ளார். "புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய சக்திவாய்ந்த விளைவுகளைப் பற்றி நாங்கள் முழுமையாக அறிந்துள்ளோம். அதனால் தான், ஒரு நாடாக, 2070-ஆம் ஆண்டிற்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வை (net-zero emissions) அடைய நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்," என்றும் அக்கருத்தரங்கில் தெரிவித்துள்ளார்.

# ஒளி வீசும் இந்தியா

- வெங்கட் பிரசாத், D.
அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்




**பார்வை இன்றியும் ஒளி வீசிய பெண்கள்:**

நவம்பர் 23 ஆம் தேதி பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கான இந்திய பெண்கள் அணி, T20 உலக கோப்பையை வென்று மாற்றுத்திறனாளி பெண்களுக்கான புது ஒளியை ஏற்றி உள்ளனர்.

இந்தியாவும் இலங்கையும் ஒன்றிணைந்து பார்வை குறைபாடு உள்ள பெண்களுக்கான முதல் T20 உலக கோப்பையை நடத்தினர்.

முதல் போட்டியிலேயே இலங்கையை 41 ரன்களில் ஆல் அவுட் செய்து மூன்றே ஓவர்களில் அந்த இலக்கை எட்டி அதிரடி படைத்தனர் இந்திய பெண்கள். அடுத்து நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் 20 ஓவர்களில் 292 என்ற அதிபயங்கர ரன் குவிப்பை செய்து பதிலுக்கு ஆஸ்திரேலியாவை 57 ரன்களில் ஆல் அவுட் செய்து எண்ணிப் பார்க்க முடியாத ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றனர் இந்திய பெண்கள். மேலும் பாகிஸ்தான், யுஎஸ்ஏ ஆகிய அணிகளையும் வெற்றி கொண்டு செமி பைனலில் மீண்டும் ஆஸ்திரேலியாவை சந்தித்த இந்திய அணி அங்கும் வெற்றி கொண்டு இறுதிப்போட்டியில் நேபாளை எதிர்கொண்டது.

முதலில் பேட்டிங் செய்த நேபாளத்தை தனது நேர்த்தியான பந்துவீச்சு மற்றும் பீல்டிங் திறனால் 114 ரன்களுக்கு கட்டுப்படுத்தினர். பிறகு அதிரடி பேட்டிங் செய்து பத்தே ஓவர்களில் 100 ரன்களை தொட்டனர், ஆல்ரவுண்டர் புலா சரண் 27 பந்துகளில் 44 ரன்கள் விளாசினார். இறுதியாக 13 வது ஓவர் முதல் பந்திலேயே பைன் லெக்கில் பவுண்டரி அடித்து வெற்றி இலக்கை எட்டி இந்திய விளையாட்டு துறையையே தலைநிமிரச் செய்தனர் வீரப் பெண்மணிகள்.

**பெருமைமிகு முன்னேற்றம்:**

பெண்களை பாரமாக நினைத்த காலம் போய், மாற்றுத் திறனாளிகளை ஏளனமாக நினைத்த கூற்றும் மறந்து, பார்வை மாற்றுத்திறனாளிகளை கிரிக்கெட் ஆட வைக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஊட்டி ஜெயிக்க வைத்த அவர்களது பெற்றோர்கள், நண்பர்கள் அமைப்பாளர்கள் அனைவருக்கும் எழுந்து கரகோஷம் தெரிவிக்க வேண்டும். இந்த போட்டிகளில் பங்கு பெற்ற அனைத்து அணிகளுக்கும் இந்த வெற்றி உரித்தானதே.

**லட்சியம் வென்ற லக்ஷய்:**

23 நவம்பர் அன்று, ஆஸ்திரேலியன் ஓபன் பேட்மிட்டன் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு சாம்பியன் பட்டத்தை வென்று தன் லட்சியத்தை நிறைவேற்றினார் லக்ஷய் சென். பி வி சிந்து காயம் காரணமாக வெளியேறிய நிலையில், ரெட்டி-செட்டி இரட்டையர்கள், காலிறுதியில் ஏமாற்றம் தந்த நிலையில், தனது ஒற்றையர் இறுதிப்போட்டியில் ஜப்பானின் யுதாயத் தனக்காவை 21-15, 21-11 கணக்குகளில் வென்று சாம்பியன் ஆனார் லக்ஷய் சென்.

**ஜென்டில்மேன் அஜித் குமார்:**

அதே Nov 23, 2025 அன்று இத்தாலியில், பிலிப்பெ சாரியல் குழுமம், நடிகரும் வாகனப் பந்தய வீரருமான அஜித்குமார் அவர்களுக்கு, 2025 இன் ஜென்டில்மேன் ஓட்டுநர் பட்டத்தையும் விருதையும் வழங்கியது.

2025 இல் இந்தியாவின் சார்பாக பல போட்டிகளில் பங்கு கொண்ட அஜித் அவர்களின் அணி, இரு முறை மூன்றாம் இடத்தையும், ஒருமுறை இரண்டாம் இடத்தையும் கைப்பற்றியதோடு அவரின் பிரபலத் தன்மையைப் பயன்படுத்தி, உலகளாவிய இந்தியர்களிடையே மோட்டார் விளையாட்டின் முக்கியத்துவத்தையும் எடுத்துச் சென்று இருப்பதால் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

**வீழ்ச்சியில் இந்திய டெஸ்ட் அணி:**

தென்னாப்பிரிக்காவிற்கு எதிராக இந்தியாவில் நடைபெற்ற டெஸ்ட் தொடரை மோசமான நிலையில் இழந்திருக்கும் இந்திய அணி, அதன் விவரங்கள் பற்றி அடுத்த இதழில் விரிவாக காண்போம்

# சங்கத் தமிழில் சனாதனம்

— பத்மன்



## ஒளி பாய இருள் மாயும் (முன்னுரை)

"விதியே விதியே தமிழச்சாதியை என்செய நினைத்தாய்?" என்று மகாகவி பாரதி புலம்பிய பாடல் வரிகளை இரவல் வாங்கத் தோன்றுகிறது, இக்காலத்தில் தமிழறிஞர்கள் என்று சொல்லிக்கொள்ளும் சிலரது தகுதியற்ற வார்த்தைகளைச் செவிமடுக்கும்போது.

"திராவிடர்களான தமிழர்களிடம் ஆரிய நாகரிகம் புகுத்தப்பட்டுவிட்டது, ஆகையால் தமிழர்கள் ஹிந்துக்கள் அல்ல" என்று இத்தகைய தமிழறிஞர்கள் முழங்குகிறார்கள். இவ்வாறு கூறுவதன் மூலம் ஹிந்து என்று பொதுவான பெயரில் வழங்கப்படும் இந்திய மதங்களின் தொகுப்புக்கு, ஆன்மிகத் தத்துவக் கருவூலத்துக்கு தமிழர்களின் மாபெரும் பங்களிப்பை அவர்கள் மறுதலிக்கிறார்கள். மறுபுறத்திலோ, அந்தத் தமிழறியாத் தமிழறிஞர்கள் எவையெல்லாம் ஆரியம் என்று வகைப்படுத்துகிறார்களோ, சனாதனம் என்பதன் பொருள் அறியாமல் வசைபாடுகிறார்களோ, அவையெல்லாம் தமிழ்நாட்டில் போற்றுதலுக்குரியதாய், தமிழனுக்கு உரியதாய் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணும்போது விழிகளில் வியப்பு விரிவதோடு, இதயத்தில் பெருமிதமும் ஓங்குகிறது.

**தமிழகத்தில் இந்தப் போலிப் பகுத்தறிவுவாதிகளும், திராவிடத் திரிபுவாதிகளும், மடத்தனமான மதச்சார்பின்மைவாதிகளும், கமிஷன் ஏஜென்டுகளாகிவிட்ட கம்யூனிஸ்டுகளும் அன்னியச் சதிவலைகளின் பின்னணியில் கடைந்தெடுத்த பொய்யைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையும் வெட்டவெளிச்சமாகிறது.**

"தமிழர்களின் முருகன் வேறு, ஆரியர்களின் முருகன் வேறு", "ஆரியர்களின் புராணக் கதைகளில் கூறப்படும் சிவன் தமிழர்கள் வழிபடும் சிவன் அல்ல", "தீ ஓம்புதல் (வேள்வி செய்தல்) ஆரியர்களின் செயலே அன்றி தமிழர்களுடையது அல்ல", "ஆரியர்களின் தலைவன் இந்திரன் தமிழர்களின் எதிரி"என்றெல்லாம் பல புனைவுகள் தமிழகத்தில் எடுத்தோதப்படுகின்றன. அப்படியா? என்று ஆச்சரியத்துடன் சங்க இலக்கியங்களைப் படிக்கப் புகுந்தால், போலிகளின் தகிடுதத்தங்கள் தவிடுபொடியாகின்றன.

அதைவிட ஆச்சரியம்! தமிழகத்தில் இந்தப் போலிப் பகுத்தறிவுவாதிகளும், திராவிடத் திரிபுவாதிகளும், மடத்தனமான மதச்சார்பின்மைவாதிகளும், கமிஷன் ஏஜென்டுகளாகிவிட்ட கம்யூனிஸ்டுகளும் அன்னியச் சதிவலைகளின் பின்னணியில் கடைந்தெடுத்த பொய்யைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையும் வெட்டவெளிச்சமாகிறது. இமயம் முதல் குமரி வரையான இந்தப் பரந்துபட்ட பாரத தேசத்தைப் பழந்தமிழர்கள் போற்றியிருப்பதோடு, ஆன்மீகம், கலாசாரம், வாழ்வியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் பாரதப் பண்பாட்டுடன் அவர்கள் ஒருங்கிணைந்து வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கும் சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

"செப்புமொழி பதினெட்டுடையாள் எனில் சிந்தனை ஒன்றுடையாள்" என்று மகாகவி பாரதி கூறியதற்கு மாபெரும் உதாரணமாக, பாரதத்தின் சனாதன தர்மச் சிந்தனையிலேயே சங்க காலத் தமிழர்களின் சிந்தனையும் செயல்பாடுகளும் பொருந்தி நிற்கின்றன.

வேதம் என்பதற்கு வேர்ச் சொல்லான வித்தை (அறிவு), வித்து (விதை) என்ற தமிழ்ச் சொல்லோடு தொடர்புடையது. பிரபஞ்சத்தின் தோற்றத்துக்குப் பேரறிவுதான் வித்து (விதை). அதைப் பற்றி மொழிவதே வேதம். உலகின் அரிய பல விஷயங்கள், அதில் நுட்பமாகப் புதைந்துள்ளன. ஆகையால்தான் வேதத்துக்குத் தமிழில் மறை என்று சிறப்பான மறு பெயரும் உண்டு. எழுதப்படாமல் செவிகளால் கேட்டு, மனனம் செய்து வேதம் கற்றுக்கொள்ளப்பட்டதால் சங்கத் தமிழிலே வேதம், கேள்வி (ஸ்ருதி) என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் ஒரு பொருளை அல்லது விஷயத்தை வேண்டி, கடவுளுக்கு வேண்டுதலோடு செய்வதுதான் யாகம். இவ்வாறு வேண்டி விழைந்து செய்யும் யாகத்தைக் குறிக்கும் தூய தமிழ்ச் சொல்தான் வேள்வி. இவ்வாறாக, ஆரியம் என்று திராவிடத் திரிபுவாதிகளால் வகைப்படுத்தப்படுகின்ற வேதமும், வேள்வியும் இன்னபிற பண்பாட்டுப் பழக்கவழக்கங்களும் பழந்தமிழர்களுக்குப் பாத்தியதப்பட்டதாக விளங்குகின்றன.

ஆயினும், மனிதர்களில் ஹிந்துக்களிடம்

மாத்திரம் ஓர் வினோத குணம் உண்டு - பழைமை என்றால் பரிகாசத்துக்குரியது, அது பிற்போக்குத்தனமானது என்ற ஓர் எண்ணமே அது. நேற்று முளைத்த நாட்டைச் சேர்ந்தவர்கள் கூட, தங்களது பாரம்பரியப் பெருமை என்று எதையாவது முன்னிறுத்த முனைகிறார்கள். ஆனால், பல்லாயிரம் ஆண்டுப் பாரம்பரியம் வாய்ந்த, உலகின் மிக மூத்த நாகரிக, பண்பாட்டைச் சேர்ந்த நாம், நமது வேர்களை வெறுக்கிறோம். காலனியாதிக்க அடிமை புத்தியும், அவர்களது கால்களை வருடி வளர்ந்த பாசாங்குப் பகுத்தறிவும், எதையும் வர்க்க பேதமாகப் பார்க்கும் வக்கரித்த கம்யூனிஸமும் வழங்கிய தீய பரிசு இது. இந்திய விடுதலைக்குப் பிறகும் இத்தகு எண்ணவோட்டத்தில் இருந்து நாம் இன்னமும் விடுதலை பெறாததால், சுயபுத்தி தடுமாறி நமது பாரம்பரியப் பெருமையை உதாசீனப்படுத்துகிறோம்.

**ஒரு பொருளை அல்லது விஷயத்தை வேண்டி, கடவுளுக்கு வேண்டுதலோடு செய்வதுதான் யாகம். இவ்வாறு வேண்டி விழைந்து செய்யும் யாகத்தைக் குறிக்கும் தூய தமிழ்ச் சொல்தான் வேள்வி.**

இதற்கு ஓர் உதாரணம், சனாதனம் என்ற சொல்லுக்கு, உடனிருந்தே கொல்லும் இந்த வியாதிகளால் உருவாக்கித் தரப்பட்டுள்ள தவறான அர்த்தம். சனாதனம் என்றால் பகுத்தறிவு இல்லாதது, வேறுபாடுகளைக் கற்பிப்பது, சாதிகளை உருவாக்கியது, சமத்துவம் இல்லாதது என்பதெல்லாம் இந்தப் புதிய “அகராதி”களின் பொல்லாங்குத்தனமான பொருள்கொள்ளல்கள்.

உண்மையில் சனாதனம் என்பது என்ன? அது நமது பாரம்பரியத்தின் ஆணிவேர் மட்டுமல்ல, மானுடத்தின் மிக ஆழமான அஸ்திவாரமும் கூட. ஆதனம் என்றால் எப்போதும் நிலைத்திருப்பது, பன்னெடுங்காலமாக நீடிப்பது, தோன்றிய காலம் தெரியாத பழம்பெருமை வாய்ந்தது என்று பொருள். அதற்கு முன்னொட்டாக இருக்கும் சன்(சம்) என்பது நன்மை என்ற பொருளுடையது. சனாதனம் என்பதற்கு வெறுமனே தொன்றுதொட்டு இருக்கக்கூடிய விஷயம் என்று பொருள் அல்ல, தொன்றுதொட்டு நிலைத்திருக்கும் நல்ல தன்மை என்பதே சரியான பொருள்.

ஆகையால் ஆரிய - திராவிட அண்டப் புளுகுமூட்டைகளுக்கு மத்தியில் ஒளிந்து கொண்டிருக்கும் சங்க இலக்கியங்களில் காணப்படும் சனாதன வெளிச்சத்தைக் குறிப்பாகத் தமிழர்களுக்கும், பொதுவாக ஹிந்துக்களாகிய இந்தியர்கள் அனைவருக்கும் பாய்ச்சுகின்ற நோக்கத்தில், ‘சங்கத் தமிழில் சனாதனம்’ என்ற இந்த கட்டுரை நெடுந்தொடர் தொடங்குகிறது. இதனை வெளியிட முன்வந்துள்ள “ஸ்ரீ தமிழ்” இதழுக்கும் அதன் நிர்வாகத்தினருக்கும் நன்றி கூறி, அறிவார்ந்த வாசகர்களான உங்களுடன் இந்த அளவளாவலைத் தொடங்குகிறேன்.

## சமஸ்கிருதம் செத்த மொழியா? அறிவிலிகளுக்கு அறிவார்ந்த பதில்

**- ஜெகத்குரு சங்கராச்சார்யா ஸ்ரீ விதுசேகர பாரதி சன்னிதானம், சிருங்கேரி**

சம்ஸ்கிருதம் சிறந்த மொழி, ஆனால் செத்த மொழி என்று சில அறிவிலிகள் கூறுகிறார்கள். இம்மொழி மொழிகளுக்கெல்லாம் தாயாக விளங்கும் மிகச் சிறந்த மொழி. இம்மொழி ஜீவித்தால் மற்ற மொழிகள் ஜீவிக்கும். இம்மொழி ஜீவிக்கவில்லை என்றால் எந்த மொழியும் ஜீவிக்காது. இதன் சிறப்பினை சில சொற்களால் விளக்குவது என்பது முடியாது. வழிவழியாக வந்த இம்மொழியின், சிறப்பினையும் மேன்மையினையும் அறியாதவர்கள் இம்மொழி பற்றி ஏதேதோ பிதற்றுகிறார்கள். இவர்கள் (ம்ருதபாஷா) செத்த மொழி என்று கூறுகிறார்கள். இதைப் பற்றி குருநாதர், இம்மொழியை செத்த மொழி, செத்த மொழி என்று மூடர்கள் சொல்கிறார்கள். இந்த மொழி செத்த மொழி என்று எப்படி சொல்கிறார்கள்? இம்மொழி உலகில் உள்ளவர்களால் பேசப்படுவது இல்லை என்பதால் இது செத்த மொழி என்கிறார்களா? அல்லது ஒருவர் கூட இம்மொழியிலே பேசுவது இல்லை என்பதால் செத்த மொழி என்கிறார்களா? அப்படிப் பார்த்தோம் என்றால் எல்லா மொழியும் செத்த மொழிதான்.’’ என்பார். எல்லோரும் ஒரே மொழியில் பேசுவது இல்லை ஏதோ ஒரு மொழியைக் குறிப்பிட்ட ஒரு சிலரால் பேசப்படுகிறது. யாரும் சம்ஸ்கிருதத்தில் பேசுவது இல்லை என்று எப்படி சொல்கிறார்கள்? நாங்கள் எல்லாம் சம்ஸ்கிருதத்தில் தான் எல்லா விதமான விவகாரங்களையும் பேசுகிறோம். பல்லாயிரக்கணக்கான நூல்கள், உலகில் உள்ள கோடிக்கணக்கான ஸ்லோகங்கள் இம்மொழியில் இருக்கின்றன. உலக நன்மைக்காக பல செய்திகளை கொண்ட நூல்களும், பல விஷயங்களுக்கு ஆதாரத்தோடு விளக்குகின்ற பரந்து விரிந்த நூல்கள் சமஸ்கிருதத்தில் உள்ளன. ஆகவே, இந்த மொழியினை செத்த மொழி என்று சொல்லக் கூடியவனைத்தான் இறந்தவனாக கூறவேண்டும். அதாவது அவன் உயிரோடு இருந்தும் இறந்தவனாக கருதப்படுகிறான்.

# நமக்கான USER MANUAL



**இரா. முகுந்த கிருஷ்ணன்,**
Wellness Centre for Yoga & Holistic Yogic Healing.

நமது வாழ்க்கைக்கு அத்தியாவசியம் தேவையானவை என்று கடைத்தெருவிலிருந்து எத்தனையோ பொருள்களை வாங்குகிறோம். அவற்றை எப்படிப் பயன்படுத்தவேண்டும், எப்படிக் கையாளக்கூடாது என்ற குறிப்புக்கள் அடங்கிய ஒரு கையேடு (யூசர் மேனுவல்) அதன் கூடவே கொடுப்பார்கள். அந்தக் குறிப்புக்களை மீறி அதை பயன்படுத்தினால் அந்தப் பொருள் நாசமாகிவிடும். நாம் வாங்கி பயன்படுத்தும் பொருட்களுக்கே யூசர் மேனுவல் அத்தியாவசியம் எனும்போது நமது உடலுக்கும் அதன் மூலம் நாம் வாழும் வாழ்க்கைக்கும் அப்படி எதுவும் வழிகாட்டிக் கையேடு தேவையில்லையா? இதை நாம் எப்போதாவது யோசித்திருக்கிறோமா அல்லது நமக்கு யாராவது சொல்லியிருக்கிறார்களா? என்றால் இல்லை என்பதுதான் பதிலாக இருக்கும்.

> **காயப்பை ஒன்று,**
> **சரக்கு பலவுள;**
> **மாயப்பை ஒன்றுண்டு,**
> **மற்றுமோர் பையுண்டு,**
> **காயப்பைக்குள் நின்ற**
> **கள்வன் புறப்பட்டால்,**
> **மாயப்பை மண்ணாய்**
> **மயங்கியவாறே.**
> **- திருமூலர்.**

உண்மையைச் சொல்லப்போனால், உலகில் எந்த நாட்டையும் விட பாரதத்தில்தான் எண்ணிலடங்கா வழிகாட்டி நூல்கள் இருக்கின்றன. பதஞ்சலி யோகசூத்திரம், ஹடயோகம், பகவத்கீதை, திருமூலர் திருமந்திரம், போகரின் 7000, அகத்தியர் தொடங்கி 18 சித்தர்கள் மற்றும் பல சித்தர்களின் நூல்கள், வள்ளுவரின் திருக்குறள், மாணிக்கவாசகரின் திருவாசகம் தொடங்கி சமயக்குரவர் நால்வரின் தேவாரங்கள் மற்றும் பன்னிரு திருமுறைகள், வள்ளலாரின் திருவருட்பா மற்றும் பல எண்ணற்ற சைவ வைணவ வழிகாட்டி நூல்கள் தமிழிலே இருக்கின்றன. தமிழையும் இந்த நூல்களையும் பிரிக்கவே முடியாது.

**இனி நமக்கான** User Manual **ஐப் பார்ப்போம்:**
**காயப்பை ஒன்று, சரக்கு பலவுள;**
**மாயப்பை ஒன்றுண்டு, மற்றுமோர் பையுண்டு,**
**காயப்பைக்குள் நின்ற கள்வன் புறப்பட்டால்,**
**மாயப்பை மண்ணாய் மயங்கியவாறே. - திருமூலர்.**

காயம் என்ற இந்த உடம்பு பார்வைக்கு முழுமையாக ஒன்றாக தோன்றினாலும், இதற்குள் பல சரக்குகள் இருக்கின்றன. இந்த உடலின் படைப்பே இறைவனின் அற்புத வித்தையாதலால் இதை ஒரு மாயப்பை என்று தெளியலாம். இந்த உடலையும் நமது உயிரையும் ஒன்றாகப் பிணைத்து அதனுள் அனைத்து இயக்கங்களையும் இயக்கிக்கொண்டிருக்கின்ற இறைவன் இதை விட்டுப் போனால், இந்த காயம் என்ற மாயப்பையான உடம்பு புதையுண்டு மண்ணோடு மண்ணாகும் அல்லது எரியூட்டப்பட்டு சாம்பலாகிவிடும் என்கிறார் திருமூலர். இறைவனைக் கள்வன் என்றதற்குக் காரணம், கருவுற்று குழந்தைப்பேறு அடைதற்று அவனருள் வேண்டும், அவன் தாயின் வயிற்றுக்குள் எப்போது வருவான் என்று தெரியாது, பிறந்து வாழும்போதும் எப்போது போவான் என்றும் தெரியாது, திருடனைப்போல் வருவதும் போவதும் தெரியாது என்றதால் கள்வன் என்கிறார். இங்கு Fertility Center களை நினைவுகூர்வோம்.

கண்ணுக்குத் தெரிகின்ற இந்த உடலைத் தவிர கண்ணுக்குப் புலப்படாத 4 உடம்புகள் சேர்ந்து மொத்தம் 5 உடம்புகள்; நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களோடு சம்பந்தப்பட்டு இயங்கிக்கொண்டிருக்கும் ஆதார சக்கரங்களின் உடம்புகள் 5, ருசியைக் கண்டுணரும் நாக்கு, வெளிச்சத்தைக் காணும் கண்கள், ஸ்பரிசத்தை உணரும் தோல், சப்தத்தை கேட்டுணரும் காதுகள், வாசனையை நுகர்ந்துணரும் நாசி ஆகிய அறிவுசார் அங்கங்கள் 5, இவற்றின் இயந்திரங்களான பேச்சு, கைகள், ஆண்குறி அல்லது யோனி, கால்கள், மலத்துவாரம் ஆகிய 5, மனம், அறிவு, நான் என்ற அகங்கார உணர்வு, கணக்கற்ற பிறவிகளின் நினைவுகளை தன்னகத்தே பதித்துக்கொண்டிருக்கின்ற சித்தம், உயிராகிய நாம், நம்மை இயக்கும் இறைவன் இத்தனையும் சேர்ந்தே ஒவ்வொருநாள் வாழ்க்கையும் நடக்கின்றது. இவை ஒவ்வொன்றைப்பற்றியும் அடுத்தடுத்த

( தொடரும்... )



# சுயக்கட்டுப்பாடு

**வ ரங்கநாதன்,**
ஆளுமைத் திறன் பயிற்றுநர்

“சட்டுன்னு கோவம் வரும்?”
“அவரு சீக்கிரம் மூட் அவுட் ஆயிடுவாரு”
“கைல காசைப் பாத்தா பரபரன்னு செலவு பண்றான்”

- இப்படி சொல்வது எதைக் காட்டுகிறது? சுயக்கட்டுபாடு இல்லை என்கிறது.

இயல்பிலே மனிதன் உணர்ச்சிபூர்வமானவன், ஜடமல்ல.

அப்படின்னா சட்டுனு உணர்ச்சி வசப்படுவது தவறில்லைதானே? தவறாகலாம். சிக்கலாகலாம்.

தன் தலைவனைக் காண வந்த கூட்ட நெரிசலில் 41 பேர் இறந்தனரே?? விஷச் சாராயம் குடித்து 67 பேர் இறந்தனரே? கஞ்சாவால் கூட்டு வன்புணர்வு, ஆத்திரத்தில் அடித்துக் கொலை காதல் வயப்பட்டு கந்தலாகிப் போகும் பெண்கள் என நாளும் செய்தி நம் நிம்மதியை சிதைக்கிறதே? இவை அனைத்துமே உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் போவதால் வந்த அவலங்கள்.

**“வைதோரைக் கூட வையாதே- இந்த**
**வையம் முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே,**
**வெய்ய வினைகள் செய்யாதே - கல்லை**
**வீணிற் பறவைகள் மீதில் எய்யாதே,**

ஆத்திரப்படாதே, பொறுத்துக்கொள், பொய் சொல்லாமல் இரு, பறவைகளை துன்புறுத்தாதே, என்று கடுவெளி சித்தர் அறிவுரைக் கூறுகிறார்.இது சாத்தியமா? மனிதனுக்கு சாத்தியம் என்பதால்தான் சித்தர் அறிவுறுத்துகிறார்.

பிற ஜீவராசிகளால் பசியைக் கட்டுப்படுத்த முடியாது, அதுபோல நாளைக்கு என்று தேவைக்கு மேல் சேமித்து வைக்கவும் தெரியாது. உடல் உணர்ச்சியை நிறுத்த முடியாது, அவைகள் இயல்புணர்வோடு இருப்பவை. ஆனால் மனிதனால் மட்டுமே பசியை ஒத்திப் போடவும் முடியும். பசியில்லாதபோது ருசிக்காகவும் சாப்பிட முடியும்,

தன்னைத் தானே கவனிக்கக் கூடிய தன்மை மனிதனுக்கு மட்டுமே உண்டு அப்படியென்றால் சுயக்கட்டுப்பாடு இயல்பாக இருக்க வேண்டும் அல்லவா?

இருக்காது. மனிதன் மிருக உணர்ச்சியோடுதான் பிறக்கிறான். பிறகு பண்புப் பதிவுகளால் பக்குவமடைகிறான். குல வழக்கம், ஊர்க்கட்டுபாடு போன்ற பாரம்பர்ய பழக்கவழக்கங்கள் மனிதனை உந்தும் உணர்ச்சிப் பிடியிலிருந்து விலக்கி தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் வழி முறையாக இருந்தன.

**“ந மம், து ஹம் (நானல்ல நீயே)”** என்று குருஜி கோல்வால்கர் தியாக உணர்வினை நினைவூட்டுவார். அதனால்தான் ஆர்.எஸ்.எஸ்-ல் சுயக் கட்டுப்பாடு என்பது இயல்பாக வந்து விடுகிறது. இந்த சுயக்கட்டுப்பாடு புத்தகம் படித்து வருவதல்ல; பயிற்சியால் வருவது, பழக்கத்தால் வருவது.

**தினமும் மனிதன் எவ்வகையிலாவது பிரதிபலன் எதிர்பாராமல் பிறர்க்கு உபயோகமாக ஏதாவது செய்து வந்தால் அவனுள் மகிழ்ச்சியும் சுயக் கட்டுப்பாடும் இயல்பாக அமையும் என்று பரமாச்சாரியார் வலியுறுத்துகிறார்.**

தினமும் மனிதன் எவ்வகையிலாவது பிரதிபலன் எதிர்பாராமல் பிறர்க்கு உபயோகமாக ஏதாவது செய்து வந்தால் அவனுள் மகிழ்ச்சியும் சுயக் கட்டுப்பாடும் இயல்பாக அமையும் என்று பரமாச்சாரியார் வலியுறுத்துகிறார்.

அதற்கு உதாரணமாக,

**யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை;**
**யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை;**
**யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி;**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே.**
(திருமந்திரம். 252)

நீ சாப்பிடு முன் இறைவனுக்கு ஒரு சின்ன வில்வ இலையை அர்ப்பணி, பசுவுக்கு ஒரு வாய் உணவு கொடு, பிறருக்காக ஒரு பிடி அரிசி தனியே எடுத்து வை, ஓரிரு இனிமையான வார்த்தைகளையாவது பேசு என்று திருமூலரை மேற்கோள் காட்டுகிறார்

தன் எண்ணத்தை கவனித்து பொருத்தமில்லாதவற்றை ஒதுக்கி, தேச காரியத்திலோ, தெய்வ காரியத்திலோ தினம் ஈடுபட்டு வந்தால் சுயக்கட்டுபாடு இயல்பாக வரும். தெய்வ அருள் கிட்டும்!



# ஏக்நாத் ரானடே

– இரமேஷ்



நவம்பர் 19 அன்று விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் விவேகானந்த கேந்திரம் நிறுவிய ஏக்நாத் ரானடே அவர்களின் 112வது பிறந்த தினம்.

ஏக்நாத் ரானடே 19-நவம்பர்-1914-ல் மகாராஷ்டிராவில் பிறந்தார்; 1938-ல் ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக சங்கத்தில் முழுநேர பிரச்சாரகராக இணைந்து பாரதத்தின் பல்வேறு பகுதிகளில் சிறப்பாகப் பணியாற்றினார். 1963-ல் கன்னியாகுமரியில் விவேகானந்த நினைவு மண்டபம் (Vivekananda Rock Memorial) மற்றும் பின்னர் விவேகானந்த கேந்திராவை உருவாக்கும் பொறுப்பை ஏற்று அதை வெற்றிகரமாக நிறைவேற்றினார். தேசியச் சேவைக்காகவே தன் வாழ்வை முழுமையாக அர்ப்பணித்த அவர் 1982-ல் அமரரானார்.

1963ம் ஆண்டு சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டுவிழா நாடெங்கும் கொண்டாடப்பட்ட வேளையில், கன்னியாகுமரியில் விவேகானந்தர் தவம் செய்த பாறையில் மணிமண்டபம் கட்டுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் கிறிஸ்தவர்கள் திடீரென சிலுவை நட்டு இது பிரான்சிஸ் சேவியர் பாறை என்றார்கள். கோவாவில் புனித விசாரணை என்ற பெயரில் கொடிய விசாரணை நடத்தி பல்லாயிரக் கணக்கான மக்களை ஈவு இரக்கமின்றி சித்திரவதை செய்து கொன்று குவிக்க அச்சாரமிட்டவன் பிரான்ஸிஸ் சேவியர். அந்த கொடூரன் பிரான்ஸிஸ் சேவியர் பெயரில் அந்தப் பாறை திடீர் என அழைக்கப்பட்டது. குமரி மாவட்ட பாதிரியார்கள் களத்தில் இறங்கி கிறிஸ்துவர்களை தூண்டிவிட்டபடி இருந்தார்கள், விவகாரம் பற்றி எரிந்தது. அப்போதைய முதல்வர் பக்தவச்சலம் விவேகானந்தர் மண்டபமும் வேண்டாம், சேவியர் சிலுவையும் வேண்டாம் அமைதி முக்கியம் என அறிவித்துவிட்டார்.

ஆனாலும், ஏக்நாத் ரானடே அவர்கள் பின் வாங்கவில்லை. முதல்வர் பக்தவத்சலத்தை சந்தித்தார், பிரதமர் நேருவையும் ஒப்புக்கொள்ள வைத்தார். மத்திய அமைச்சர் ஹுமாயுன் அப்பாறையில் மண்டபம் வந்தால் சுற்றுச் சூழல் கெடும் என்று அனுமதி மறுத்தார். அந்த அமைச்சரின் சொந்த மாநிலமான வங்காள மக்களிடையே பேசி அமைச்சருக்கு அழுத்தம் கொடுத்தார். ஒட்டு மொத்த குமரி மீனவர்களும் கிறிஸ்தவர்களாக மாறி இருந்த நிலையில், கேரளாவில் இருந்து ஹிந்து மீனவர்களை அழைத்து வந்து குமரியில் குடியமர்த்தி ஆக்கிரமிப்பு சிலுவையை அகற்றினார். நாடு முழுக்க மக்களின் கையெழுத்து திரட்டினார். பல கோடிபேர் கையெழுத்திட்டனர். எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்தார். நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றார்.

கட்டுமானப் பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் நயவஞ்சக சூழ்ச்சிகளால் தடுக்க முனைந்த கிறிஸ்தவ சதி வலைககளை வெற்றிகரமாக எதிர்கொண்டு, அதே சமயத்தில் பெரும் கலவர சூழலை தடுத்து, மிகச் சாதுர்யமாக எல்லா மக்களையும் அரவணைத்துச் சென்று விவேகானந்தர் மண்டபத்தை அமைத்த ஏக்னாத் ரானடேஜி நிச்சயம் வரலாற்றில் நிற்கின்றார்,

அப்பாறை குமரி அன்னை தவம் இருந்த ஸ்ரீபாத பாறையே அதில் கிறிஸ்தவருக்கு உரிமை இல்லை என்பதை நிறுவி, மொத்த இந்திய மக்களின் அபிமானத்தோடும், அவர்களின் நன்கொடையோடும் அம்மண்டபத்தை நிறுவிட காரணமான ஏகநாத் ரானடே போன்ற சிறந்த தலைவர்களை உருவாக்கிய அமைப்பு ஆர்.எஸ்.எஸ்.

அயோத்தி ராமர் கோவில் மீட்பு, வேலூர் ஜலகண்டேஸ்வரர் கோவில் மீட்பு போல விவேகானந்தர் நினைவிடமும் ஹிந்துக்களின் வெற்றி வரலாற்றின் பொன்னேடுகளில் பொறிக்கப்பட்ட ஒரு நிகழ்வு.

இன்னும் வியக்கத்தகு செய்தி ஒன்றுமுண்டு. இன்றைக்கு குமரியில் எழுந்து நிற்கும் ஐயன் வள்ளுவரின் மண்டபத்தின் உருவாக்கத்துக்கும் காரணகர்த்தர் ஏக்நாத்ஜி ரானடேதான் என்பது தனிக்கதை.

**இன்றைக்கு குமரியில் எழுந்து நிற்கும் ஐயன் வள்ளுவரின் மண்டபத் தின் உருவாக்கத்துக்கும் காரணகர்த்தர் ஏக்நாத்ஜி ரானடேதான் என்பது தனிக்கதை.**

# ஆர்.எஸ்.எஸ். 100
# இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி 3)

இராம . வெங்கடாத்ரி

**தி ஹிந்து உருவான கதை:** 1878-ல் 4 சட்டக் கல்லூரி மாணவர்களும் 2 ஆசிரியர்களும் சேர்ந்து Triplicane Six என்ற அமைப்பை உருவாக்கினர். இந்த Triplicane Six அமைப்பின் மூலமாக தேசத்திற்கு உண்மையான செய்திகளை கொண்டு சேர்க்க ஒரு செய்தித்தாள் ஆரம்பித்தனர். தாங்கள் ஆரம்பிக்க இருக்கும் பத்திரிக்கை இந்த மண்ணின் மைந்தர்களின் பெயர் தாங்கி வர வேண்டும் என்று கருதி The Hindu என்று பெயர் வைத்தனர். இதில் இருந்து ஹிந்து என்பது இந்த மண்ணின் மைந்தர்களின் அடையாளச் சொல் என அறியலாம்.

### அரசு நிறுவனங்களில் ஹிந்துஸ்தான்

பாரத நாடு சுதந்திரம் அடைந்ததும் மஹாரத்னா, நவரத்னா, மினிரத்னா என்று வகைப்படுத்தி பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களை நேருவும், பின்னர் வந்த இந்திரா காந்தியும் ஆரம்பித்தனர்.

அரசு நிறுவனங்கள் இந்த தேசத்தின் பெயரை பிரதிபலிக்க வேண்டும் என்பதற்காக பாரத், இந்தியன், ராஷ்ட்ரீய, நேஷனல், ஹிந்துஸ்தான் போன்ற பெயர்களில் நிறுவப்பட்டன.

இதில் பின்வரும் நிறுவனங்கள் ஹிந்துஸ்தான் என்ற பெயருடன் இன்றளவும் இயங்கி வருவதைக் காணலாம்: Hindustan Petroleum Corporation Limited (HPCL), Hindustan Aeronautics Limited (HAL), Hindustan Copper Limited (HCL), Hindustan Newsprint, Hindustan Paper Corporation Limited, Hindustan Steelworks Construction Ltd. Hindustan Antibiotics Limited, Hindustan Fertilizers Corporation Limited (HFCL), Hindustan Insecticides Limited, Hindustan Organic Chemicals Limited (HOCL). Hindustan Prefab Limited, Hindustan Salts Limited, Hindustan Shipyard Limited (HSL), Hindustan Teleprinters Limited (HTL), Hindustan Urvarak & Rasayan Limited (HURL), Hindustan Vegetable Oils Corporation.

ஹிந்துஸ்தான் என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த அரசுத் துறை நிறுவனங்கள் எல்லாம் காங்கிரஸ் ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்டன என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். தேசியத்தின் அடையாளம் ஹிந்து என்பதை உள்ளுணர்ந்ததாலேயே தங்களை அறியாமலேயே காங்கிரஸ் ஆட்சி ஹிந்துஸ்தான் என்று பொதுத் துறை நிறுவனங்களுக்குப் பெயர் வைத்ததோ?



### முன்னாள் ஹிந்துவும் இன்னாள் ஹிந்துவும்

இந்த நாட்டில் உள்ள மக்கள் இரண்டே வகைதான். ஒன்று இப்போது ஹிந்துவாக இருப்பவர்கள், மற்றொன்று முன்பு ஹிந்துவாக இருந்தவர்கள்.

இன்றைக்கு முஸ்லிமாக இருப்பவர்கள் யாரும் மெக்காவில் இருந்தோ அரேபியாவில் இருந்து வந்து குடியேறியவர்களின் வாரிசுகள் அல்லர்.

இன்றைய முஸ்லிம்களின் முன்னோர்கள் ஹிந்துக்களாகவே இருந்தவர்கள். அவர்கள் வாளுக்கு பயந்தோ, வசதிக்கு ஆசைப்பட்டோ, ஜிஸியா வரி கட்ட இயலாமலோ மதம் மாறியவர்களே. அவர்கள் தங்களது மதத்தை மாற்றி இருக்கிறார்களே தவிர அவர்களது முன்னோர்களை அல்ல.

### மெக்காவில் ஹிந்துக்கள்

“இங்கிருந்து மெக்காவிற்கு ஹஜ் பயணம் மேற்கொள்ளும் முஸ்லிம்களை சவுதி அரேபிய நாட்டினர் ஹிந்துக்கள் என்று குறிப்பிடுகின்றனர். எப்படி அமெரிக்க நாட்டினரை அமெரிக்கர் என்று அழைக்கின்றனரோ அது போல நம் நாட்டின் மக்களை, அவர்கள் ஹஜ் பயணத்திற்கு வந்துள்ள முஸ்லிம்களாக இருந்தபோதிலும் ஹிந்துக்கள் என்றே இன்றளவும் அடையாளப்படுத்துகின்றனர்” மேற்கண்ட கருத்தை பாஜக மூத்த தலைவர் திரு இல.கணேசன் மக்கள் நீதி மையத்தின் திரு.கமலஹாசன் அவர்களுக்கு அளித்த மறுமொழியாக பத்திரிக்கைகளுக்குப் பேட்டி அளித்துள்ளார். ஹிந்து என்பது இந்த நாட்டின் தேசிய அடையாளம் என்பது அரேபியர்களுக்குத் தெரிந்திருக்கிறது, கமலஹாசனுக்குத் தெரியவில்லை.

### கீதை தெரியாத கிறிஸ்தவ டாக்டர்

இதே போன்ற மற்றொரு சம்பவத்தை ஆர்.எஸ். எஸ், முன்னாள் தலைவர் திரு.சுதர்ஸன் அவர்கள் ஒரு பத்திரிக்கைச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க நாட்டில் நடந்த ஒரு சர்வதேச கருத்தரங்கிற்கு நமது நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவ மருத்துவர் ஒருவர் சென்று இருந்தார். அங்கு இருந்த அமெரிக்க மருத்துவர் ஒருவர் நமது நாட்டு டாக்டரிடம் இராமாயணத்தில் இருந்தும், கீதையில் இருந்தும் சில சந்தேகங்களைக் கேட்டார். தான் ஒரு கிறிஸ்தவர் என்பதால் ராமாயணம் மற்றும் மகாபாரதம் படித்ததில்லை என்று நமது நாட்டு மருத்துவர் கூறினார். அதற்கு அந்த அமெரிக்க டாக்டர் கூறிய பதில் இதுதான்: "நீங்கள் கிறிஸ்தவர் என்பது எனக்குத் தெரியுமே. உங்கள் நாட்டின் கலாச்சாரத்தின் வேர்களாக இருப்பது ராமாயணமும், மகாபாரதமும். அது தெரியாமல் நீங்கள் எப்படி ஒரு இந்தியராக இருக்க முடியும்? ஆபிரகாம் லிங்கன் பற்றி தெரியாத ஒருவர் எப்படி அமெரிக்க பிரஜை ஆக இருக்க அருகதை அற்றவரோ அதைப் போல ராமனையும், கண்ணனையும் தெரியாத ஒருவர் இந்தியரே அல்ல, நீங்கள் எந்த மதத்தினராக இருந்தாலும் ராமனையோ கண்ணனையோ படித்தால்தான் இந்திய கலாச்சாரத்தை அறிந்தவர்கள் ஆவீர்கள்" என்று கூறினார்.

**மதம் மாறலாம், ஆனால் முன்னோர்களை மாற்ற முடியாது**

**இந்த நாட்டின் முஸ்லிம்களோ கிறிஸ்தவர்களோ மதம் மாறி இருந்தாலும் கலாச்சார ரீதியாக ஹிந்துக்களே.**

### பாபர் ஏன் ராமர் கோவிலை இடித்தான்?

ராமனும், கண்ணனும் இந்த கலாச்சாரத்தின் ஆணிவேர்கள். பாரத நாட்டில் முகலாயர் அரசினை நிறுவியதன் அடையாளமாகவே, பாபர் ராமர் பிறந்த இடத்தில் அமைந்த கோவிலை இடித்தான். அந்நியப் படையெடுப்பாளர்கள் இந்த நாட்டின் கலாச்சாரத்தின் அடையாளமான இடங்களை நிர்மூலமாக்குவதே




அவர்களது ஆக்கிரமிப்பின் வெற்றியாகப் பார்த்தனர். ராமர் கோவில் மீட்பு என்பது தேசியத்தின் அவமானம் துடைத்தெறியப்பட்ட ஓர் நிகழ்வு.

### மதம் மாறலாம், ஆனால் முன்னோர்களை மாற்ற முடியாது

இந்தோனேஷியாவின் முன்னாள் அதிபர் சுகர்ணோவை ஒரு பத்திரிக்கையாளர் சந்திப்பில் ஒருவர் இவ்வாறு கேள்வி கேட்டார்: உலகின் மிகப் பெரிய முஸ்லிம் நாட்டின் அதிபராக உள்ள தாங்கள் ஒரு ஹிந்துப் பெயரில் ஏன் இருக்கிறீர்கள்? அதற்கு பதில் அளித்த சுகர்ணோ, நாங்கள் எல்லோரும் ஏதோ ஒரு காலத்தில் முஸ்லிம்களாக மாறிவிட்டோம். ஆனால் எங்கள் முன்னோர்களை எப்படி மாற்ற முடியும்? என்று பதில் கேள்வி கேட்டார். "We changed our religion, but not our forefathers" என்று இந்த நேர்காணலுக்கு அந்த பத்திரிக்கை தலைப்பு இட்டிருந்தது.

### அன்னியன் தீட்டிய அஞ்சனம்

பிரித்தாளும் சூழ்ச்சிக்காக இந்த நாட்டின் கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் வேறு வேறு கலாச்ச ாரத்தை சார்ந்தவர் என்ற மயக்கத்தை வெள்ளைக்கார கிறிஸ்தவம் இங்கே உருவாக்கி விட்டது. வெள்ளைக்கார கிறிஸ்தவர்களின் அடிபற்றிய காங்கிரஸும், கம்யூனிஸ்ட்களும் இந்த நாட்டின் முஸ்லிம்களோ கிறிஸ்தவர்களோ கலாச்சார ரீதியாக ஹிந்துக்களே என்பதை உணரவிடாமல் செய்தனர்.

அந்த அமெரிக்க டாக்டரும் இந்தோனேஷிய அதிபரும் சொல்வது இதுதான்: இன்று யாரோ ஒருவர் மதம் மாறி விட்டார் என்பதனால் இத்தனை ஆயிரம் ஆண்டுகளாக இருந்த அவரது முன்னோர்களின் கலாச்சார வேர்களில் இருந்து அவர் துண்டிக்கப்பட்டு ஒரு தனி தேசியம் ஆகி விட முடியுமா?

(இந்த நாடு ஹிந்து நாடு - தொடரும்)

# இரண்டாம் பாரதியின் எழுச்சி கீதங்கள் - பகுதி 2

- ஏழுமலை




**இரண்டாம் பாரதி**

"மகாகவி சுப்ரமணிய பாரதியாருக்குப் பிறகு, தமிழிலே அதிகமான தேசபக்திப் பாடல்களை எழுதிய தேசியக் கவி வீரத்துறவி இராம.கோபாலன்ஜி". அந்த இரண்டாம் பாரதியின் எழுச்சிப் பாடலான உலகின் குருவாம் பாரதம் ஆகிட என்ற பாடலைப் பற்றி இந்தப் பகுதியில் காண்போம்.

**விஸ்வகுரு**

பாரதம் விஸ்வகுருவாக ஆகிட வேண்டும் என்று பாரதப் பிரதமர் மோடி அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார். இன்று பேசப்படும் இந்தக் கருத்து ஆர்.எஸ்,எஸ். நிறுவிய காலத்தில் இருந்து கூறப்பட்டு வருகிறது. அதைத்தான் இந்தப் பாடலின் மையப் பொருளாக வீரத்துறவி அமைத்துள்ளார்.

**உலக குருவும் வல்லரசும்**

இன்று வல்லரசாக உள்ள அமெரிக்காவும், சீனாவும் உலக அரங்கில் கட்டைப் பஞ்சாயத்து செய்து வருகின்றன. நமது நாடும் வலிமை பெற்று இதே போல மேலாதிக்கம் செலுத்த வேண்டும் என்ற அர்த்தத்தில் உலகின் குருவாக பாரதம் என்பது சொல்லப்படவில்லை. மாறாக வலிவு படைத்திட்ட பாரதம் நற்பண்புகளின் முன்னுதாரணமாகத் திகழ்ந்து உலகை வழி நடத்திட வேண்டும் என்பதாகும்.

**உலகின் குரு என்றால்...**

கோவிட் பெருந்தொற்றைப் பயன்படுத்தி தடுப்பூசிகளை மூன்றாம் உலக நாடுகளுக்கு விற்று கொள்ளை லாபம் பார்க்க அமெரிக்க, சீன மருந்து நிறுவனங்கள் திட்டமிட்டன. ஆனால் பாரத நாடு தனக்குத் தேவையான தடுப்பூசிகளைத் தயாரித்ததோடு, உலகின் ஏழை நாடுகள் பலவற்றிற்கு இலவசமாகவும், இன்னும் பல நாடுகளுக்கு சகாய விலையிலும் தடுப்பூசிகளை வழங்கியது. இக்கட்டான சூழலில் நலிந்தோர்க்கு உதவ வேண்டும் என்ற நற்பண்பினை உலகின் வல்லரசு நாடுகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து பாரதம் வழிகாட்டியது.

**பாடலைப் பற்றி**

நாடு சுதந்திரம் அடைந்ததும் 1950களில் எழுதப்பட்ட பாடல் இது. உலகின் குருவாக, ஆகிட வேண்டும் என்பதை சுதந்திரம் அடைந்த பாரதத்தின் இலக்காக அன்றைய காலகட்டத்தில் இந்தப் பாடல் வலியுறுத்தியுள்ளது.

பாடல் முழுவதும் நீ செய் என்று சொல்லாமல் "நாம் செய்ய வேண்டும்" என்ற கருத்து மையப்படுத்தப்பட்டுள்ளது.

வலிவு படைத்தவனே வாழ்வுக்குரியவன் என்பது பழமொழி. பாரத நாட்டை வலிமையான நாடாக்க விழையும் ஒரு தேசபக்தனுக்குத் தேவையான குணநலன்களை வலியுறுத்தும் பாடலாக இது அமைந்துள்ளது.

தோல்வி கண்டு தளராமை, ஒழுக்கம், வெற்றி மனப்பான்மை, நாட்டிற்காக வாழுதல், இடர்களை எதிர்கொள்ளுதல், தர்ம நெறியில் இருந்து வழுவாமை ஆகிய நற்பண்புகள் வலியுறுத்தப்படுகின்றன.

**பாடல்**

**உலகின் குருவாய் பாரதம் ஆகிட**
**உன்னத சக்தி வளர்ப்போர் நாம்**
**லட்சிய நாடாய் பாரதம் ஆகிட**
**தீவிர பக்தி வளர்ப்போர் நாம்**

**வலிவு படைத்திடு வீரம் கொண்டிடு**
**என்றெம் முந்தையர் முழங்கிடுறார்**
**கலியுகத்தினிலே சங்கமே சக்தி**
**என்று மறைகள் கூறிடுது**
**முந்தையர் வகுத்த சீரிய நெறியில்**
**வழுவா தேகும் வீரர் நாம் (உலகின்)**

**நாட்டினுக் கெனவே இறைவன் படைத்தான்**
**வேறொரு இன்பம் விரும்போமே**
**இடர்கள் எம்மை இரும்பென ஆக்கும்**
**இன்முகத்துடனே ஏற்றிடுவோம்**
**வெந்தே போயினும் நொந்தே மாயினும்**
**வந்தே மாதரம் என்றிடுவோம் (உலகின்)**

**தியாகம் எங்கள் கவசம் ஆகும்**
**சீலம் எங்கள் ஆயுதமே**
**வெற்றி கண்டிடப் பிறந்தோம் உலகில்**
**தோல்விகள் கண்டே தளரோமே**
**தீமை சூழ்ந்திடும் உலகில் நாங்கள்**
**தர்மக் கொடியினை உயர்த்திடுவோம் (உலகின்)**

இந்தப் பாடலின் இசை வடிவத்திற்கு இந்த **QRCODE SCAN** செய்யவும்.

# வெளிச்சம் படாத வேர்கள்

## பூலித்தேவனின் படைத்தளபதிகள் ஒண்டி வீரன் பகடை மற்றும் வெண்ணிக்காலாடி

யா.சு. கண்ணன்

## ஒண்டி வீரன் பகடை

பூலித்தேவன் (1715-1767) நெற்கட்டான் செவ்வலை தலைமையிடமாகக் கொண்டு ஆண்டு வந்த பாளையக்காரராவார் என்பதையும்,

இந்திய விடுதலை வரலாற்றில் வெள்ளையனே வெளியேறு என்று 1751 ஆம் ஆண்டிலேயே வீர முழக்கமிட்டவர் என்பதையும் ஏற்கெனவே பார்த்தோம்.

பூலித்தேவனின் பலமே அவரது படைதான். தங்கள் பாளையத்திற்காகவும், பூலித்தேவனுக்காகவும் உயிர் தியாகம் செய்வதை பெருமையாக நினைத்தார்கள் அப்படை வீரர்கள்.




பூலித்தேவனுக்கு இருந்த படைத் தளபதிகளில் மிக முக்கியமானவர் ஒண்டி வீரன் ஆவார். இவர் தாழ்த்தப்பட்ட அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவராவார். இவரை “பூலித்தேவனின் போர் வாள்” என்றே அனைவரும் அழைத்தனர். ஆற்காடு நவாப் அவர்கள், கிழக்கு இந்திய நிறுவனத்திடமிருந்து 20,000 ரூபாய் பெற்றுக்கொண்டு, தமிழக மன்னர்களிடம் வரி திரட்டும் பொறுப்பை அந்நிறுவனத்திற்கு அளித்தார். 1755 ஆம் ஆண்டு, வரி திரட்டும் நோக்கத்தோடு ஆங்கிலேயர் தங்கள் படையுடன் தென்மலையில் முகாமிட்டிருந்தனர்.

அப்போது, அந்தப் பகுதி மக்களிடையே தங்களது வீரத்தைப் பற்றிப் பீற்றிக்கொண்டு, ஒரு சவாலையும் முன் வைத்தனர். அதாவது, “எங்களிடம் உள்ள ஆற்காடு நவாபின் வாள், குதிரை ஆகியவற்றைக் கவர்ந்த பின், எங்கள் போர் முரசை முழங்கச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்தீர்களேயானால், நீங்கள் வீரர்கள் என்று நாங்கள் ஒப்புக்கொள்கின்றோம்” என்றார்கள். மேலும் வரி செலுத்தாத பட்சத்தில், போர் புரிய வேண்டியிருக்கும் என்றும் எச்சரித்தார்கள்.

இதைக் கேட்ட ஒண்டி வீரன், அவர்களுக்குப் பாடம் புகட்ட நினைத்தான். ஒரு திட்டமும் தீட்டினான். தந்திரமாக ஆங்கிலேயரின் கூடாரத்திற்குள் நுழைந்து, சவாலில் கூறப்பட்ட வாள் மற்றும் குதிரையையும் கவர்ந்தான். பின், ஆங்கிலேயரின் போர் முரசை உரக்கமாக அடித்து, அவர்களிடம் சிக்காமல் வெற்றியுடன் வெளியேறினான்.

ஒண்டிவீரனின் இச்செயல், ஆங்கிலேயர்களிடம் பூலித்தேவன் மற்றும் ஒண்டி வீரன் மீது வெறுப்புணர்வை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து, பதினோரு போர்கள் - ஒன்றன் பின் ஒன்றாக நடந்தன. ஒண்டிவீரனின் வாளுக்கு பல ஆங்கிலேயர்கள் இரையானார்கள். இவரின் சாகசங்களைக் கண்டு பலர் பயந்து ஓடினர். ஆனால், பதினோராம் போரில், அவர் காயமடைந்தார். காயப்பட்டு இறக்கும் தருவாயிலும், தம் படைக்கு வெற்றியைப் பெற்று தந்த பிறகு தான் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

ஒண்டி வீரன் பகடை ஓர் துணிச்சலான போர் வீரர். சிறந்த படைத் தளபதி. நம் நாட்டின் விடுதலைக்காக உழைத்த விசுவாசி. பூலித்தேவனின் “வெள்ளையனே வெளியேறு“ என்னும் தாரக மந்திரத்திற்காக உயிர் தியாகம் செய்த மாவீரர்களில் இவருக்கு தனி இடம் எப்பொழுதும் உண்டு.

அவருக்கு “பகடை” என்ற மற்றொரு பெயரும் உண்டு. இப் பெயருக்குக் காரண்ம் - பகடைக்காய் ஆட்டதில் உருட்டி விடப்படும்போது, அந்த பகடை நமக்கு வெற்றியை மட்டுமே நல்கும் என்ற நம்பிக்கையுடன் உருட்டி விடப்படுகிறது.

**பூலித்தேவனுக்கு அத்தகைய நம்பிக்கை மிக்க நபராக இருந்தவர் தான் இந்த ஒண்டி வீரன்!**

## வெண்ணிக்காலாடி வரலாறு...

ராபர்ட் ப்ரௌனிங் இயற்றிய “த இன்சிடெண்ட் ஆஃப் தி ஃப்பிரெஞ்ச் கேம்ப்’ என்னும் கவிதையின் சாராம்சம் இது. 1809 - ஏப்ரலில் நடைபெற்ற ராடிஸ்போனா போரை மையமாக வைத்து இயற்றப்பட்ட கவிதை:

'ராடிஸ்போனா"வை (ஜெர்மன் நகரான ரெகென்ஸ்பர்க்(Regensburg)கின் லத்தின் பெயர் பிடிப்பதற்காக நெப்போலியனின் படைகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. என்ன ஆகுமோ? என்னும் தவிப்பில், அருகிலிருந்த குன்றின் மீது நின்று, தொலைவில் தெரிந்த ராடிஸ்போனாவையே நெப்போலியன் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று, ராடிஸ்போனாவிலிருந்து சிறு புழுதிப் படலம் ஒன்று நகர்ந்தது.தன்னை நோக்கி அப்படலம் வருவதையும் நெப்போலியன் கண்டான். அருகே வர வர... குதிரைமீது இளைஞன் ஒருவன். ராடிஸ்போனாவை ஃபிரஞ்சுப்படைகள் வெற்றி கொண்டதையும் ஃபிரெஞ்சுக் கொடியைத் தானே ஏற்றியதையும் அந்த வீரன் எடுத்துரைக்க... காயத்தால் அவனுடைய மார்பு பிளவுபட்டிருப்பதைக் கண்ட நெப்போலியன், "நீ காயப்பட்டிருக்கிறாய்" என்று ஆதங்கப்பட, "இல்லை நான் கொல்லப்பட்டு விட்டேன்" என்று கூறிக்கொண்டே அந்த வீர இளைஞன் மாண்டு விழுவான்.



நெப்போலியனை நாடி வந்தக் குதிரை வீரன் கவிதையைப் போல், பூலித்தேவனை நாடி வந்த வெண்ணிக்காலாடியின் கதை,நாட்டுப்புறப்பாடல்களில்கவிதையாகியுள்ளது..

**"எத்தனைப் பட்டாளம்**
**வெட்டினானடா-வெண்ணியை எதிர்க்க ஆள் இல்லையடா!**
***செங்குருதி நனைத்துப் பூலித்தேவன் வண்ணச்***
***சீர்மிகு மேனியெல்லாம் கொப்பளிக்க...***
***காலாடி உயிருக்கோர் காலன் வந்திட்டான்***
***கால் நொடியில் காற்றாய்ப்***
***பறந்திட்டான்....."பூலித்தேவன் சிந்துப்பாடலின் பகுதியாகக் காலாடியின் பெயரும் ஒலிக்கிறது.***

**யார் இந்தக் காலாடி?**

பாளையங்கள் செழித்திருந்த காலத்தில், தேவேந்திர குலப் பெருமக்கள் பலர், போர்ப்படை வீரர்களாக இருந்திருக்கின்றனர். இத்தகைய படைவீரர்களில் சிலர், பரம்பரையாகவே படைப்பணியில் ஈடுபட்டிருந்தனர். காலாட்படையில் பணி செய்தவர்கள் என்பதால் "காலாடிகள்" என்றழைக்கப்பட்டனர். தேவேந்திரகுலத்தின் உட்பிரிவாகவே "காலாடி"என்னும் பிரிவு இருந்திருக்கிறது.

பெரிய காலாடி, சின்னக்காலாடி, கரையாளர் குடும்பனார், சாத்தான் காலாடி, சங்கரக்குடையான், மாடக்குடும்பனார், முத்துக்குடும்பனார், கட்டக்கருப்பணன் என்று இவ்வாறு பெரும்பணியாற்றிய வீரர்களின் பெயர்கள் தெரியவருகின்றன. பெரிய வீரர்கள், அவர்களின்கீழ் இயங்கிய படைப் பிரிவினர் என்ற முறையில் குழுக்களாகவும் இவர்கள் செயல் பட்டிருக்கின்றனர்.

ஒரு சில குழுக்கள் மற்றும் அந்தந்தக் குழுத் தலைவர்களின் வீரம், போர்த் திறம், செயல் திட்பம், நேர்மை காரணமாக, அந்தக் குழுவானது தங்களோடு இணைந்திருக்க வேண்டும் என்று பாளையத் தலைவர்கள் ஆசைப்பட்டதாகவும் தெரிகிறது. இப்படிப்பட்ட வீரர்களில் ஒருவர் வெண்ணிக்காலாடி என்றழைக்கப்பட்ட பெரிய காலாடி. இவர் பூலித்தேவனின் படைப்பிரிவில் இருந்தார்.நேரடியாகப் பூலித்தேவனையோ அவரது படைகளையோ பகல் நேரத்தில் தாக்கமுடியாது என்றெண்ணிய பகைவர்கள், இரவுப் பொழுதில் தாக்கத் தீர்மானித்தனர்.

இந்தச் செய்தியை உளவறிந்து கொண்ட பெரிய காலாடியார், காட்டு வழியிலேயே முகாமிட்டுப் பகைவர்களை எதிர்த்தார். இருப்பினும், தொடர்ந்து நடைபெற்ற சண்டையில், வயிற்றில் குத்தப்பட்டார். கத்தி ஆழமாகப் பாய, குடல் கிழிந்து சரிந்து வெளியில் தொங்கியது. சற்றும் தளராமல், குடலை உள்ளே தள்ளிவிட்டு, தலையைச் சுற்றிக் கட்டியிருந்த தலைப்பாகையை அவிழ்த்து இறுக்கமாகக் கட்டிக் கொண்டு சண்டையைத் தொடர்ந்தார். பகைவர்களை வீழ்த்தினார். இன்னும் பலர் ஆங்காங்கே காட்டுப் பகுதிகளில் பதுங்கியிருந்து அடுத்த சில நாள்களில் தாக்கக்கூடும் என்பதை உணர்ந்தவர், குதிரை மீதேறிச் சென்று பூலித்தேவனிடம் செய்தி தெரிவித்தார். ரத்தம் கொட்டக் கொட்ட நின்று தகவலைச் சொன்னவர், அப்படியே சரிந்து வீழ்ந்து சரித்திரம் ஆனார்.

தம்முடைய நண்பரின் மரணத்தால் நிலைகுலைந்து போன பூலித்தேவன், எந்த இடத்தில் காலாடி வீரப்போரிட்டாரோ, அந்த இடத்தில் வீரக்கல் ஒன்றை நட்டு, அந்த இடத்திற்கே "காலாடி மேடு"என்றும் பெயர் சூட்டினார். இப்போதும் இருக்கிறது "காலாடிமேடு".

***"கடமை வீரனப்பா காலாடி வீரனப்பா" என்னும் பாடல் ஒலிக்கும் போதெல்லாம், பொருநையாளின் (தாமிரபரணி ஆற்றின்) உள்ளம் பூரிக்கத்தானே செய்யும்!***

## மஹான்களின் தரிசனம்

# ஸ்ரீ வித்யா உபாஸகர் அம்பாளுடைய அருள்பெற்ற ஞான ஸூர்யன் மஹான் பாஸ்கரராயர்

— நிதீஸ்வரன்

*ஸ்ரீ மாத்ரே நம:*


**आपदि किं करणीयम् । स्मरणीयं चरणयुगलमम्बायाः ॥**

எல்லோருக்கும் ஆபத்து ஸமயத்தில் என்ன செய்ய வேண்டும் என்ற சிஷ்யனது கேள்விக்கு பகவத்பாதர்கள் அம்பாளின் திருவடிகளை த்யானிக்க வேண்டும். அதுவே நமக்கு ஏற்படும் எல்லாவிதமான கவலைகளையும் போக்கி நமக்கு நல்லன எல்லாம் அளிக்கின்றன என்று அருளியுள்ளார்.

இப்படிப்பட்ட லோக ஜனனியான அம்பாளை முழுமுதற்கடவுளாக உபாஸிக்கும் மார்கமே ஸ்ரீவித்யா மார்கம். இந்த ஸ்ரீவித்யா உபாஸனையில் கரைகண்ட மஹான் ஸ்ரீபாஸூரானந்த நாதர் எனப்படும் பாஸ்கரராயமகி அவர்கள்.

வடக்கில் பிறந்து, தென்னகத்திலுள்ள சோழ நாட்டில் வாழ்ந்து மறைந்த இந்த மஹானின் வாழ்க்கை வரலாற்றை நாம் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

**அவதாரமும் இளமைக்காலமும்**



மஹாராஷ்ட்ர தேசத்தில், பீஜப்பூர் சாம்ராஜ்யத்திற்கு உட்பட்ட பகுதியில் வாழ்ந்தவர் ஸ்ரீ கம்பீரராய பாரதி. மஹாவித்வானான இவர், பல ஸோமயாகங்களைச் செய்து வேத தர்மத்தைக் காத்த உத்தமர். விஜயநகரத்து அரசர் இவரது மஹாபாரத ப்ரவசனத்தை கேட்டு இவருக்கு பாரதீ என்ற பரம்பரை பெயரை வழங்கினார்.

இவருக்கும், கற்பில் சிறந்த அன்னை கோணமாம்பாளுக்கும் தவப்புதல்வனாக அவதரித்தவரே நம் ஸ்ரீ பாஸ்கரராயர். தந்தையால் தக்க வயதில் உபநயனம் செய்விக்கப்பட்டு காசியில் இருந்த ந்ருஸிம்ஹாத்வரி என்ற மஹானிடம் பதினெட்டு விதமான வித்யைகளையும் கற்றுத் தேர்ந்தார். பல மத வித்வான்களை தனது பரந்து விரிந்த அறிவினாலும் வாதத்தினாலும் வென்றார். இவருடைய பரந்து விரிந்த அறிவை கண்ட பலர் ஸரஸ்வதி தேவியே ஆண் உருவம் கொண்டு வந்தனள் என்று கூறுவர்.

கிடைத்தற்கரியதான ஸ்ரீவித்யையை சிவதத்தசுக்லர் என்ற மஹான் இவருக்கு உபதேசித்து பூர்ணாபிஷேகமும் செய்வித்தார். ஆனந்தி என்ற பெண்ணை விவாஹம் செய்து கொண்டு பலவிதமான ஸோம யாகங்களை செய்தார். இவருக்கு பாண்டுரங்கன் என்ற குழந்தை பிறந்தது.

இவருடைய மஹிமையை உணர்த்தும் கதைகள் கர்ணபரம்பரையாக இன்றளவும் வழங்கப்பெற்று வருகின்றன.

ஒருசமயம் இவரிடம் அஸூயை கொண்ட சில பண்டிதர்கள் இவரை எப்படியாவது அவமானம் செய்ய வேண்டுமென்று நினைத்திருந்தனர். பெரிய ஸபையில் மந்த்ர சாஸ்திரத்தில் பல கேள்விகள் கேட்டனர். அக்கேள்விகளுக்கு நமது பாஸ்கரர் வெகு சுலபமாக பதிலளித்துவிட்டார். எப்படியாயினும் வாதத்தில் தோல்வியடையச் செய்யவேண்டுமென்று நினைத்து பிறகு அப்பண்டிதர்கள் அம்பாளுடைய ஸஹஸ்ரநாமத்தில் உள்ள மஹாசதுஷ்ஷஷ்டி கோடி யோகினீகண ஸேவிதா என்ற நாமத்தில் வரும் 64கோடி யோகினி யோகினிகளின் நாமம், லக்ஷணம், உற்பத்தி, சரித்திரம் முதலியவைகளைப்பற்றிக் கேட்டனர். உடனே பாஸ்கரராயர் அப்பண்டிதர்களைப்பார்த்து, ஓ வித்வான்களே ! நான் நீங்கள் கேட்ட விஷயத்தைச் சொல்கிறேன். அவற்றை எழுதிக்கொள்ளுங்கள் என்று அம்பாளை த்யானித்துச் சொல்லத்தொடங்கினார். அவர் விவரிக்கும் வேகத்தில் யாராலும் குறிப்பு கூட எடுக்க முடியவில்லை. அப்பொழுது அங்கிருந்த குங்குமானந்த ஸ்வாமிகள் பாஸ்கரராயரின் மஹிமையை பண்டிதர்களுக்கு உணர்த்தி, நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு அம்பாளே அவர் தோளில் கிளிரூபமாக அமர்ந்து பதிலளிக்கிறாள் என்று கூறி பாஸ்கரராயரின் பூஜை தீர்த்தத்தை எடுத்து பண்டிதர்களின் கண்களை துடைத்து பார்க்க சொல்ல எல்லோரும் அந்த அதிசயத்தை கண்டு பாஸ்கரராயரின் பாதம் பணிந்து வணங்கினர்.

அம்பாளுடைய அனுக்ரஹத்தால் பல சாஸ்த்ரங்களில் இவர் வெவ்வேறு 40க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். குறிப்பாக, ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்திற்கு இவர் எழுதிய 'ஸௌபாக்ய பாஸ்கரம்' என்ற உரைநூல், உலகப்புகழ் பெற்றது. அதில் வரும் ஒவ்வொரு நாமத்திற்கும் பல அர்த்தங்களை விளக்கியுள்ளார். மேலும் துர்கா ஸப்தசதி என்னும் நூலின் குப்தவதி வ்யாக்யானமும் புகழ் பெற்றது. கணேச ஸஹஸ்ர நாமம், சிவ அஷ்டோத்தர சத நாமம் இவற்றிற்கும் அர்த்தத்தை செய்யுள் ரூபமாக இயற்றியுள்ளார்.

காசியில் வாஸம் செய்து கொண்டிருந்த இவர் தனது சிஷ்யனான சந்த்ரஸேனன் என்ற அரசனின் வேண்டுகோளுக்கு இணங்கி கொஞ்ச காலம் க்ருஷ்ணா நதிக்கரையில் வாஸம் செய்தார்.

பிறகு தஞ்சையை ஆண்ட போஸல வம்சத்து அரசனால் அழைத்து வரப்பட்டு காவிரிக் கரையில் வசித்து வந்தார். காவிரி கரையில், திருவாலங்காடு அருகே உள்ள ஒரு கிராமத்தை மன்னர் இவருக்கு தானமாக அளித்தார். அந்த ஊர் இன்றும் 'பாஸ்கரராஜபுரம்சு என்று இவரது பெயராலேயே அழைக்கப்படுகிறது.

பிறகு மத்யார்ஜுன மஹாக்ஷேத்ரம் எனப்படும் திருவிடைமருதூரில் வசித்துவந்தார். அங்கு அம்பாள் உபாஸனையிலும் க்ரந்தங்கள் எழுதுவதிலும் சிஷ்யர்களுக்கு பாடம் சொல்வதிலும் செலவிட்டு கடைசியில் அங்கே தன்னுடைய சரீரத்தை த்யாகம் செய்து அம்பாளுடைய சரணாரவிந்தத்தை அடைந்தார். இவரின் பெருமையை இவர் சரித்ரத்தை எழுதிய இவரது சிஷ்யர் சொல்லும் போது,

**यस्याऽदृष्टो नास्ति भूमण्डलांशो यस्याऽदासो विद्यते न क्षितीशः।**
**यस्याऽज्ञातं नैव शास्त्रं किमन्यैर्यस्याकारः सा पराशक्तिरेव ॥**

இம்மண்ணுலகில் இம்மஹானால் காணப்படாத புண்ணியத்தலம் ஒன்றும் இல்லை. இவரிடமிருந்து மந்த்ரோபதேசம் பெற்றுக் கொள்ளாத அரசர் அக்காலத்திய வேந்தர்களுள் ஒருவரும் இல்லை. இவரால் அறிந்து கொள்ளப்படாத சாஸ்திர விஷயம் ஒன்றும் இல்லை. பராசக்தி இவர் உள்ளத்தில் எப்பொழுதும் வஸித்து வந்தாள்.

இப்படிப்பட்ட ஸ்ரீ பாஸ்கரராயமகி வெறும் பண்டிதர் மட்டுமல்ல; அவர் ஒரு நடமாடும் தெய்வம். ஸ்ரீவித்யாமார்க்கத்தை எல்லோரும் அனுஷ்டானம் செய்வதற்கு காரணமான குரு அவரே. அம்பிகையின் அருளைப் பெற விரும்பும் ஒவ்வொருவரும், பாஸ்கரராயரின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது நூல்களையும் படிப்பது அவசியம். ***ஜய ஜய லலிதே.***

பாஸ்கரராயர் திருவிடைமருதூரில் தங்கி நித்ய அக்னி ஹோத்ரம் செய்தவர். திருவிடைமருதூர் யாக யக்ஞங்களுக்குப் பெயர் பெற்றது. இந்த க்ஷேத்ரத்தின் சிறப்பைக் குறித்து தேவார மூவர்கள் மட்டுமல்லாமல் மாணிக்கவாசகர் மற்றும் கருவூர்தேவரும் பாடியுள்ளார்கள்.

தேவார பதிகங்களில் தேவார மூவர்கள் இத்தலம் வேதங்களுடனும், வேத சடங்குகளுடனுமான உள்ள மிக நெருக்கமான தொடர்பைக் குறித்து பாடியுள்ளனர்.

திருஞான சம்பந்தர் அவரது பாடலில் திருவிடைமருதூர் இறைவனைக் குறித்து, ''இடது காதில் தோடு (அல்லது குழையை) அணிந்திருப்பவர்; வேதங்களைப் பாடுபவர்; மேலும், அந்த இடத்தின் மீது கொண்ட விருப்பத்தினால் சுடுகாட்டில் நடனமாடுபவர் ஆவார்'' என்று பாடியிருக்கிறார்.

திருவிடைமருதூர் இறைவன் குறித்த சிறப்புகள் திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட 2070-வது பாடலில் மேலும் சிறப்பிக்கப்பட்டுள்ளது. அதில், திருவிடைமருதூர் இறைவன் சாமவேதத்தைப் பாடுகிறார் என்று கூறியுள்ளார்.

இதே போன்று திருநாவுக்கரசர் ''வேதங்களையும் யாகங்களையும் படைத்தவர் அவரே; அவரே உண்மையாய் பூமியாகவும், வானமாகவும்,



பஞ்சபூதங்களாகவும் (ஐந்து கூறுகளாகவும்) இருப்பவர்; இறைவனின் புகழைப் பாடும் அடியார்களின் மனதில் ஞான ஒளியை ஏற்றி வைப்பவர்; எல்லோராலும் முதன்மையாகப் போற்றப்படும் தாமரைப் பாதங்களைக் கொண்டவர் அவரே; தம் அடியார்களுக்கு மகிழ்ச்சிகளை அளித்து அவர்களின் துன்பங்கள் அனைத்தையும் அழிப்பவர் ஆவர்'' என்று பாடியுள்ளார்.

இந்த தேவாரப் பாடல்கள், இந்தத் திருத்தலம் (க்ஷேத்திரம்) வேதங்களின் இருப்பிடம் என்பதையும், இங்கே சாம வேதமே மேலோங்கி நிற்கிறது என்பதையும் உணர்த்துகின்றன.

இப்படிப்பட்ட புண்ய க்ஷேத்திரத்தில் பல மகான்கள் உதித்து, வாழ்ந்துள்ளனர். கடந்த இதழில் நாம் பார்த்த மஹானான ஸ்ரீதர ஐயாவாளும் இதே க்ஷேத்திரத்தில் வாழ்ந்து இங்குள்ள இறைவனிடம் ஐக்கியமானார் என்பதைப் பார்த்தோம்.

# விழாக்களும் விரதங்களும்

-செல்வம்

**01-12-2025: *கீதா ஜெயந்தி :***

மார்கழி மாதத்தின் சுக்ல பட்ச ஏகாதசியன்று தான் ஸ்ரீகிருஷ்ண பகவான் குருக்ஷேத்திரப் போர்களத்தில் அர்ஜுனனுக்கு பகவத் கீதையை போதித்ததாக கருதப்பட்டு அதை நாம் கொண்டாடுகிறோம். இன்றைய தினத்தை பகவத் கீதையின் பிறந்த நாள் என்று கூறலாம். இம்முறை கார்த்திகை மாதத்திலேயே இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.

கீதையில் தெளிவாகவே கர்மா, பக்தி, ஞானம் என்று மூன்று யோகங்களைச் சொல்லியிருக்கிறது. முதல் ஆறு அத்யாயம் கர்ம ஷட்கம்(பகுதி), அடுத்த ஆறு அத்யாயம் பக்தி ஷட்கம், அதற்கப்புறம் முடிவாக வரும் ஆறு அத்யாயம் ஞான ஷட்கம் என்றுகூடச் சொல்வதுண்டு.

ஸ்ரீகிருஷ்ணன் பகவத்கீதையை அர்ஜுனனுக்கு மட்டும் உபதேசிக்கவில்லை. நமக்காகவும் தான். ஆம், நாம் இந்த உலகத்தில் நமக்கு விதிக்கப்பட்ட கர்மங்களை செயலாற்றி கொண்டு அதே நேரத்தில் அதன் பலன்களில் பற்றில்லாமல் பகவானை சரணடைந்து தர்ம வாழ்வை வாழ்வது எப்படி



என்பதற்கு வழிகாட்டியுள்ளார்.

சுருக்கமாக சொன்னால், நம் முன்னோர்கள் வேத காலம் தொட்டே, “சுயநலம் பார்க்காதே, பொதுநலம் பார்” என்று சொல்லி வளர்த்த பண்பாட்டைத்தான், கிருஷ்ணர் பகவத்கீதை என்னும் சிறிய ‘கேப்ஸ்யூல்’ வடிவத்தில் நமக்குத் தந்திருக்கிறார்.

சொந்த ஆசைகளைத் திணிக்காமல், நமக்கு விதிக்கப்பட்ட கடமையைச் செய்வதே சிறந்தது. அப்படி எல்லோரும் இருந்தால், உலகில் போட்டி, பொறாமை, சண்டைகளுக்கு இடமே இருக்காது. எப்போதும் எல்லோரும் ஆனந்தமாக வாழலாம். இப்படிப்பட்ட உன்னதமான கீதை பிறந்த நாளை ஹரியானா மாநிலம் குருக்ஷேத்திரத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகிறார்கள். இந்நாளில் பாரத தேசத்தின் அனைத்துப் பகுதியிலிருந்தும் மக்கள் குருக்ஷேத்திரத்தில் கூடி சன்னிஹிட் சரோவர், பிரம்ம சரோவர் போன்ற தீர்த்தங்களில் புனித நீராடுகின்றனர். இந்த விழா இரண்டு வாரங்களுக்கு கொண்டாடப்படுகிறது. அச்சமயத்தில், கீதா ஸ்லோக பாராயணம், பஜனை, நாடகம், நடனம் போன்ற நிகழ்வுகளும் அனுசரிக்கப்படுகிறது.

---

**03-12-2025-04-12-2025:** இறைவனை தீப சொரூபத்தில் வழிபடும் மாதம் தான் இந்த கார்த்திகை மாதம். கார்த்திகை மாதத்தில் சிவபெருமானை வழிபாடு செய்வது மிக சிறந்த பலன்களை தரும் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன.


***பரணி தீபம்:***

திருக்கார்த்திகைக்கு முந்தைய நாளான பரணி நட்சத்திரத்தன்று இல்லங்களிலும், இறைவன் சன்னிதியிலும் மாலை விளக்கேற்றி வழிபட வேண்டும். இவ்வருடம் 03.12.2025 அன்று பரணி தீபமானது அனுசரிக்கப்படுகிறது. அன்றைய தினத்தில் வாசலில் 2 தீபங்களும், பூஜை அறையில் 5 தீபங்களும் ஏற்ற வேண்டும். இந்த 5 தீபங்களையும் வட்டமாக எல்லா திசைகளிலும் வெளிச்சம் படும்படி ஏற்ற வேண்டும். நெய் ஊற்றி விளக்கு ஏற்றினால் இன்னும் சிறப்பு. மண்விளக்குகளை வீட்டின்வாசல்படிகளில், படிக்கு மூன்று வீதம்ஏற்றி வைப்பது மரபு.

பரணி நட்சத்திரத்தன்று மாலையில் இல்லங்களில், தீபம் ஏற்றி வழிபடுபவர்கள், தெரிந்தோ, தெரியாமலோ செய்த பாவங்களில் இருந்து விடுபட்டு, எமபயம் நீங்கி நலமுடன் வாழ்வர் என்பது ஐதீகம்.

***கார்த்திகை மகாதீபம்:***

திருமால், பிரம்மா உட்பட முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் சிவபெருமான் ஜோதி வடிவில் காட்சி அளித்த நாள் தான், திருக்கார்த்திகை என்று கருதப்படுகிறது. இது, கார்த்திகை மாதம் பௌர்ணமி மற்றும் கார்த்திகை நட்சத்திரம் ஒன்றுசேரும் நாளில் கொண்டாடப்படுகிறது. இந்தாண்டு



திருக்கார்த்திகை திருநாள் 4-12-2025 (புதன்கிழமை) அன்று வருகிறது.

திருவண்ணாமலையில் மலை உச்சியில் திருக்கார்த்திகை அன்று கார்த்திகை மகாதீபம் ஏற்றப்படும். இதைக் காண வரும் லட்சக்கணக்கான பக்தர்கள் திருவண்ணாமலையில் கிரிவலம் மேற்கொள்வார்கள். அங்கு மலை மேல் ஏற்றப்படும் தீபங்களின் எதிரொலி தான் மற்ற சிவன் கோயில்களிலும், இல்லங்களிலும் ஏற்றப்படும் தீபங்கள். எத்தனை சிவாலயங்கள் இருந்தாலும் பஞ்சபூதத் தலங்கள் முக்கியம்.

கார்த்திகை தீபம் தீபத்தை ஏற்றும்போது ஒரு ச்லோகம் சொல்ல வேண்டும் என்று தர்ம சாஸ்த்ரத்தில் சொல்லி இருக்கிறது .

**கீடா: பதங்கா: மசகாச்ச வ்ருக்ஷா:**
**ஜலே ஸ்தலே யே நிவஸந்தி ஜீவா: ந**
**த்ருஷ்ட்வா ப்ரதீபம் ந ச ஜன்ம பாஜா**
**பவந்தி நித்யம் ச்வபசா ஹி விப்ரா: நந**

''புழுக்களோ, பறவைகளோ, அல்லது ஒரு கொசுவாகத்தான் இருக்கட்டும், அந்தக் கொசுவோ, நம்மாதிரி உயிரில்லை என்று நினைக்கப்படுகிற மரமோ, இன்னும் நிலத்திலும், பூமியிலும் எத்தனை வகையான உயிரினங்கள் இருக்கின்றனவோ அவற்றில் எதுவானாலும் அதுவோ, மனிதர்களுக்குளேயே பேதம் இல்லாமல் பிராம்மணனோ பஞ்சமனோ எவனானாலும் சரி, எதுவானாலும் சரி, இந்த தீபத்தைப் பார்த்துவிட்டால் அந்த ஜீவனுடைய சகல பாபங்களும் அழிந்து, இன்னொரு ஜன்மா எடுக்காமல் நித்யானந்தத்தில் சேரட்டும்'' என்று இந்த ச்லோகத்துக்கு அர்த்தம்.

தீபத்தின் ஒளி எப்படி வித்யாஸம் பார்க்காமல், புழு, பக்ஷி, கொசு, மரம், மற்ற நீர்வாழ் ப்ராணிகள், நிலம் வாழ் விலங்கினங்கள் இவற்றின் மீது படுகிறதோ அப்படியே நம் மனஸிலிருந்து அன்பு ஒரு தீபமாக, எல்லோரையும் தழுவுவதாகப் பிராகாசிக்க வேண்டும். இப்படிப்பட்ட அகவொளியோடு, புற ஒளியாக தீபத்தை ஏற்றி மேலே சொன்னது போல் ப்ரார்த்திக்க வேண்டும்.

----------------------------------------

**04-12-2025: தத்தாத்ரேய ஜெயந்தி**

பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளின் சொரூபம், தத்தாத்ரேயர். 'தத்தகுரு' எனப்படும் இவரை அனுசூயா - அத்ரி மகரிஷி தம்பதிகளின் புத்திரனாக புராணங்கள் கூறுகின்றன. அவதூத ஆஸ்ரமத்தைத் துவக்கி வைத்தவர் இவரே! இவர்கள் திகம்பரர்களாகவே இருப்பர். சதாசிவ பிரம்மேந்திராள், புதுக்கோட்டை சாந்தானந்தர், ஜட்ஜ் சுவாமிகள் போன்றோர் இந்த ஆஸ்ரமப்படி சன்னியாசம் பெற்றவர்கள். தத்தாத்ரேய ஜெயந்தி மார்கழி மாத பௌணர்மியில் அனுசரிக்கப்படுகிறது. இவ்வருடம் கார்த்திகை மாத பௌணர்மியிலேயே அதாவது டிசம்பர் மாதம் 4ம் தேதி அனுசரிக்கப்படுகிறது.


மகாசிரஞ்சீவிகளுள் தத்தாத்ரேயரும் ஒருவர் தட்சிணாமூர்த்தி, கிருஷ்ணர் ஆகியோரைப் போன்று தத்தரும் குரு பரம்பரையைத் தோற்றுவித்தவர்.

தத்தாத்ரேயருக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோயில்கள் இந்தியா முழுவதும் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில், சேலம் மாவட்டம் நாமக்கல் அருகே சேந்தமங்கலம் ஸந்யாசிக்கரடு என்று குன்றில் ஸ்ரீஸ்வயம் ப்ரகாச ப்ரம்மேந்த்ர ஸரஸ்வத் அவதூத



ஸ்வாமிகள் ஸ்ரீதத்தாத்த்ரேயரை ப்ரதிஷ்டை செய்து தென்னாட்டில் ஸ்ரீதத்தாத்ரேய பரம்பரைக்கு வித்திட்டார்கள். தற்போதும் இங்கு நித்ய பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

**ப்ரஹ்ம குரு விஷ்ணு குரு ருத்ர குரு பாஹிமாம் |**
**சத்யா குரு நித்ய குரு தத்த குரு ரக்ஷமாம் ||**



# கொன்றை வேந்தன் கதைகள்

## ஈயார் தேட்டை தீயார் கொள்வர்

-கலாவதி

நல்லது செய்தால் நன்மை கிடைக்கும்.

அலுவலக வேலையாக டெல்லி வரை சென்றிருந்த சண்முகம், வீட்டுக்குள் நுழைந்தது தான் தாமதம். தர்ஷினியும், அர்ஜுனும் ஓடிவந்து கட்டிக் கொண்டு, "அப்பா... எங்களுக்கு என்ன வாங்கிட்டு வந்தீங்க'' என்று கேட்டார்கள்.

"இதோ... நீ கேட்ட டெல்லி இனிப்பு" என்று அர்ஜுனிடம் நீட்டினார் அப்பா. "அவன் தீனி பண்டாரம்பா" என்று தர்ஷினி கிண்டல் செய்ய, "ஷ்ஷ்... ஒருத்தர் ஆசையை கிண்டல் செய்யக்கூடாது" என்று கண்டித்துவிட்டு, அவள் கேட்டிருந்த லெகங்காவை நீட்டினார். அவர்களின் அம்மா ராதாவுக்கு வாங்கியிருந்த சேலையும் அவ்வளவு அழகாக இருந்தது.

இன்னொரு பையையும் நீட்டி, "இது நம்ம வீட்டுல தோட்ட வேலை செய்யும் தாத்தாவுக்கு, இந்த சேலை வீட்டுல வேலை செய்யறவங்களுக்கு தந்துடு" என்று அப்பா, ஒவ்வொன்றாக நீட்டினார்.

"எதுக்குப்பா எல்லாருக்கும் வாங்கிட்டு வர்றீங்க? அவங்க வேலை செய்யறதுக்கு சம்பளம் தர்றோம். நல்ல நாளுல இனிப்பு, பரிசுன்னு கவனிச்சிக்கறோம். ஆனா, நீங்க அவங்களையும் எங்களுக்கு சமமா பார்க்கறது பிடிக்கலைப்பா" என்று அர்ஜுன் முறைத்தான்.

"அவன் சொல்றது சரிதாங்க. இன்னைக்கு எங்களுக்கு தேவையான எல்லாத்தையும் வாங்கி தறீங்க. ஆனா, நாளைக்கும் தேவை இருக்கே. பசங்களுக்காகவாவது கொஞ்சம் சேர்த்து வையுங்க, நம்ம பக்கத்து வீட்டுக்காரரும் உங்க கூடதானே வேலை செய்யறாரு. தனக்குன்னு எப்படி சேர்த்து வைக்கறாரு பாருங்க" என்றாள் ராதா.

சண்முகம் ஒன்றும் சொல்லவில்லை. சிரித்துக் கொண்டே போய்விட்டார்.

சண்முகமும், பக்கத்து வீட்டில் இருக்கும் அவரது நண்பரும் பைக்கில் ஒன்றாக வேலைக்கு சென்றிருந்தனர். அப்போது விபத்து ஏற்பட, இருவருக்கு பயங்கர சிராய்ப்பு. உள்காயங்கள் ஆற இருவரும் ஒரு வாரம் விடுப்பு எடுத்தனர், விபத்து ஏற்பட்டதை கேள்விப்பட்டதும், நிறைய பேர் விசாரித்தனர். சில பேர் பதறியடித்துக் கொண்டு



வீட்டுக்கே வந்துவிட்டனர். "நல்ல வேளை, சின்ன காயங்கள்தான். ஓய்வெடுத்தா ஆறிடும்" என்று இவர்களே சமாதானம் சொல்லி அனுப்பி வைத்தார்கள். வந்தவர்களில் சிலர் தர்ஷினி, அர்ஜுனுக்கும் தின்பண்டங்கள் வாங்கி வந்தார்கள். "எதற்கு இதெல்லாம்" என்று சண்முகம் வாங்க மறுத்தாலும் கேட்கவில்லை.

இரண்டு நாளுக்குப் பிறகு பக்கத்து வீட்டுக்காரரின் மனைவி, ராதாவிடம் "என்ன, விருந்தாளிகள் வந்தாங்க போலயே" என்று விசாரித்தாள். "ஆமா. இவருக்குத்தான் நிறைய நண்பர்கள் ஆச்சே. ஆமா, உங்க வீட்டுல எப்படி" என்று ராதா திரும்பி கேட்க, பக்கத்து வீட்டம்மா "அதை ஏன் கேட்கறீங்க. ஏற்கனவே இவர் நிறைய லீவு போட்டதால ஒரு வார லீவுக்கு சம்பளம் வராதாம். அதுவுமில்லாம வீட்டுல போர் அடிக்குதேன்னு செல்போனை நோண்டியிருக்கார். ஏதோ ஒரு லிங்க் போயிட்டு, இவரோட வங்கி கணக்குல எல்லாமே காலி" என்று கொட்டித் தீர்த்தாள்.

இதைக் கேட்ட தர்ஷினிக்கும், அர்ஜுனுக்கும், தங்கள் அப்பாவின் செயல் புரிந்தது மட்டுமில்லை, பெருமையாக இருந்தது.

# நல்ல தொண்டில் நல்ல உள்ளம்

மயிலை மஹா பெரியவா அனுஷம் அறக்கட்டளையும், மணி மோகனம் அகாடமியும், சங்கீத ஞானமு என்ற அமைப்புடன் இணைந்து மார்கழி சங்கீத உபாசனா என்ற நிகழ்வை நடத்த திட்டமிட்டுள்ளது. காஞ்சி மஹானுக்கான சங்கீத அர்ப்பணமாக இந்த நிகழ்வு நடைபெற இருக்கிறது. இதற்காக, பல இசை வல்லுனர்கள் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டு தங்கள் இசை அர்ப்பணிப்பை வழங்க முன் வந்துள்ளார்கள். மார்கழி மாத இசை சீசனுக்கு மத்தியில் இந்த நிகழ்விற்கு நல் ஆதரவு கொடுத்துள்ளனர் இசை கலைஞர்கள் என்று மகிழ்ச்சியுடன் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த இசைக்கச்சேரிக்கு வரும் ரசிகர்களுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களின் வரிகளையும் அதற்குரிய அர்த்தங்களையும் பிரிண்ட் செய்து வழங்க இருக்கிறார்கள். கர்நாடக சங்கீதத்தின் அடிப்படையே பக்தி தான் என்பதையும், எப்படி நம் முன்னோர்கள் பக்தியினால் உந்தப்பட்டு இப்பாடல்களை எழுதியுள்ளனர் என்பதையும் ரசிகர்களுக்கு உணர்த்தவே இந்த முயற்சி என்கின்றனர் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்.

அதே போன்று இந்த கச்சேரியில் பாடக் கூடிய பாடல்களின் வரிசையில் கர்நாடக இசையின் மும்மூர்த்திகளின் பாடல்களில் இருந்து ஒரு பாடல் மற்றும் திருப்பாவை அல்லது திருவெம்பாவையிலிருந்து ஒரு பாடல் கண்டிப்பாக இடம்பெற வேண்டும் என்ற நிபந்தனையும் வைத்திருக்கிறார்கள் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள். முக்கியமாக இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இசைக்க இருக்கும் கலைஞர்கள் பாரம்பரிய உடையுடன் நெற்றியில் திலகமிட்டு தான் கலந்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையையும் வைத்திருக்கிறார்கள்.



பாரம்பரியத்தைப் போற்றும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆதரவு தருவோம்!

**நிகழ்ச்சி நடக்கும் இடம்:**
மஹாபெரியவா கோவில்,
4, பிச்சுபிள்ளை தெரு, மயிலாப்பூர்
**நாள்:**
டிசம்பர் 17ம் தேதி முதல் ஜனவரி 13ம் தேதி வரை

**தொடர்பு கொள்ள:**
**தொலைபேசி எண்:** + 91 94511 99663
**இமெயில்:** sangeethananamu@gmail.com

# ஆலயம் சுதாகர்



நமது ஹிந்து சமுதாயத்தில், வாழ்வின் மையமாக இருப்பவை ஆலயங்கள். ஆலயங்களைப் பாதுகாப்பதற்காகவே கடந்த 38 ஆண்டுக் கால வாழ்வை அர்ப்பணித்தவர் திரு.மே.அ.சுதாகர் அவர்கள்.

சிறு வயதிலேயே ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக சங்கத்தில் ஈர்க்கப்பட்ட திரு.சுதாகர், சென்னை துறைமுகத்தில் பார்த்து வந்த வேலையை உதறிவிட்டு ஆர்.எஸ்,எஸ். பேரியக்கத்தில் தன்னை முழுநேரப் பணியில் இணைத்துக் கொண்டார். சங்கத்தில் துவக்கப்பட்ட ஹிந்து ஆலயப் பாதுகாப்பு குழுவின் மாநில அமைப்பாளராக பணி புரிந்தார்.

அன்னை மீனாட்சி ஆலயத்தில் வருடம் ஒருமுறை பிரம்மாண்டமாக திருவிளக்கு பூஜை நடத்தினார், மதுரையைச் சுற்றிலும் உள்ள திருக்கோவில்களில் உழவாரப்பணி குழுக்களை ஏற்படுத்தினார். சிவாலயங்களில் மஹா ம்ருத்யுஞ்சய மந்திர ஜப வேள்வியை துவக்கினார்.

2000 ஆம் ஆண்டு, நெல்லையப்பர் ஆலயத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்களை ஒரே நேரத்தில் ஒருகோடி முறை மஹாம்ருத்யுஞ்சய மந்திரம் சொல்ல வைப்பதாகத் தீர்மானித்து அதை வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டினார். மஹா ம்ருத்யுஞ்சய மந்திரத்தைப் படிக்காத பாமரனிடம் கொண்டுச் சென்று மனப்பாடமாக சொல்ல வைத்த பெருமை அன்னாரையே சாரும்

கலவரத்தினால் பாதிக்கப்பட்ட தென் காசியிலே, (2008 ஆம் ஆண்டு) மஹாம்ருத்யுஞ்சய யாகம் மூலமாக ஹிந்து சமுதாயத்தில் மீண்டும் எழுச்சியை ஏற்படுத்தினார். தமிழகத்தில் துறவியர் பெருமக்களை கிராமம் கிராமமாக அழைத்துச் சென்று கூட்டங்களை நடத்தி மதமாற்றத்தைத் தடுத்தார்.

கார்த்திகை பஞ்சமி, 25/11/2025 அன்று தனது மண்ணுலக வாழ்வை நிறைவு செய்த அவர், இறுதி மூச்சு உள்ளவரை கோவில்களைக் காக்க வாழ்ந்தவர்.

“ஆலயம் சுதாகர்” நினைவினைப் போற்றி நாமும் ஆலயம் காக்கும் பணியில் நம்மை இணைத்திடுவோம்.

-பாலு சரவணகார்த்திக்


## சினிமா சாரல்

- சேஷூ

# பேய்கள் மூலம் ஜிகாத்தின் கொடுமையை சொல்லும் படம்

நெட்பிலிக்ஸ் தளத்தில் ஜியோ ஸ்டுடியோ - ஆ62 ஸ்டுடியோ தயாரிப்பில், ஆதித்யா சுஹாஸ் ஜாம்ளே இயக்கத்தில் வெளியான படம் தான் பாரமுல்லா. முதல் பாதி மெதுவாகவும் அடுத்த பாதி த்ரில், ஹாரராக நகர்கிறது.

லோக்கல் Ex.MLA அன்சாரியின் மகன் திடீரென காணாமல் போகிறான். அப்போது தான் பாரமுல்லாவுக்கு மாற்றலாகி வரும் டிஎஸ்பி ரித்வான் இதன் விசாரணையை தொடங்குகிறார். உள்ளூர் மேஜிக் மேனின் பெட்டியில் தலைமுடி இருப்பதை ரித்வான் கவனிக்கிறார். அவரது வீட்டிலும் சில அமானுஷ்யமான சம்பவங்கள் நடக்கிறது. நாய் மீது அலர்ஜி கொண்ட ரித்வானின் மகள் நூரி வீட்டில் சில அமானுஷ்யத்தை உணர்கிறாள்.




நூரியின் தம்பி ஆயனுக்கு அந்த வீட்டில் ஒரு பழைய சோழி கிடைக்கிறது. அதை வைத்து விளையாடும் போது இன்னொரு உருவம் அவனுக்கு புலனாகிறது. ரித்வான் மனைவி குல்னர் அலமாரியில் உள்ள அத்தர் பாட்டில் திடீரென கீழே விழுந்து சிந்துவதை கவனிக்கிறார். இதற்கிடையே அவரது வீட்டின் வெளியே "காஃபிர்" என எழுதப்பட்டிருப்பதைக் கண்டு குடும்பத்தினருக்கு அச்சம் ஏற்படுகிறது.

ரித்வான் வீட்டில் ஒரு பூஜை அறை இருப்பதும் அங்கு எழும் "சங்கரா" என்ற சப்தம் மூலம் ஒரு பண்டிட் குடும்பம் வசித்திருக்கலாம் என குல்னர் உணர்கிறார். யாரிடமும் சரியாக பழகாத ரித்வான் மகள் நூரி, சமூகவலைதளத்தின் மூலம் காலித்துடன் பழக்கம் ஏற்படுகிறது. குழந்தைகள் கடத்தலில் காலிதுக்கு தொடர்பு இருப்பதை கண்டுபிடித்து அவனை கைது செய்து விசாரிக்க, ISI ஆதரவுடன் ஒரு கும்பல் குழந்தைகளை கடத்தி, பாகிஸ்தானில் பயிற்சியும், அதன்பின் அவர்கள் காஷ்மீரில் ஜிகாத் செய்யப்போவதையும் சொல்கிறான் காலித்.

இக்பால் மேல் இறங்கும் பேய் மூலம் பாரமுல்லாவில் அடுத்ததாக யாசிர் என்ற மாணவன் கடத்தப்படப் போவதையும் குல்னர் உணர்ந்து ரித்வானிடம் சொல்லும் அதேநேரத்தில் யாசிரின் சொந்த மாமா ஜுனைத்து தான் இதை செய்கிறான் என காலித்தும் சொல்ல, யாசிர் பாகிஸ்தான் எல்லைக்கு செல்லும் முன் தடுக்க ரித்வான் முயற்சி, அப்போது நிகழும் அமானுஷ்யம் என படம் பரபரக்கிறது.

யாசிரைத் தடுத்த ரித்வான் வீட்டை ஜுனைத் பயங்கரவாத இளைஞர்களுடன் முற்றுகையிட்டு தாக்குகிறான். இதற்கிடையே தனக்கு அடைக்கலம் வேண்டும் என பள்ளியின் பிரின்ஸ்பால் ஜைனப் ரித்வான் வீட்டுக்கு வருகிறார். கடைசி அந்த 20 நிமிடங்கள் நடக்கும் காட்சிகள் விறுவிறுப்பு. ரித்வான் வீட்டில் முன்பிருந்த டக்டர்.கமலானந்த் சப்ரு என்ற பண்டிட் குடும்பத்திற்கு காஷ்மீரின் ஜிகாதிகளால் என்ன நடந்தது என்ற கதையை பேய்கள் வழியே கொண்டு சென்று, அந்த பேய்கள் ரித்வான் குடும்பத்தை எப்படி காப்பாற்றியது என்பதையும் அழகாக சித்தரித்துள்ளனர்.

ஹாரர் மூவியாக எடுக்கப்பட்டாலும் பண்டிட்களுக்கு நிகழ்ந்த கொடுமையை சிதையாமல் பேய்களின் வழியே கதை சொல்லி இருப்பதற்காக இயக்குநரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

ஹிந்துக்கள், தேசியவாதிகள் தவறாமல் பார்க்க வேண்டிய படம்.

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.